உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வல்லி பரிணயம்.

ஒரு புதிய தமிழ் நாடகம்.

கடலூர், ந. பலராமையர் அவர்கள்

இயற்றியது.

காரைக்குடி,

சித. நாகப்பசெட்டியாரவர்கள்

பதிப்பித்தது.

1912

(All Rights Reserved.)

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600090.

SARASVATHI VILAS PRESS
MAYAVARAM.

உ

# முகவுரை.

"மும்ம தத்த னென் றொருபெயர்
தனக்குமொய் கூந்தற்
கொம்மை வெம்முலைச் சோர்றொடிக்
கொடிச்சியை யிலைவேற்
கைம்ம லர்த்தனி யிளவற்குங்
கஃஃறெனுங் கானத்
தம்ம முந்துபுக் குறுத்தவ
னடிமலர் பணிவாம்".

சில ஆண்டுகட்கு முன்னர்ச் சூணாம்பேட்டை ஜமீன்தாராக இருந்தவரும் என்பாற் பல அமையங்களிலும் பேரன்பு காட்டிப் பேருதவி புரிந்தவருமாகிய கனம் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி முதலியாரவர்கள் 'வள்ளியம்மை' திருமணத்தை நாடக ரூபமாக இயற்றும்படி எனக்கு ஆஜ்ஞாபித்திருந்தனர். நூல் முடிவதற்குமுன் புலவர்களது தவக்குறைவாலும் எனது தௌர்ப்பாக்கியத்தாலும் தமிழ் நாடிழைத்த தீவினையாலும் அன்னோர் காலஞ் சென்றனர். முருகன் திருவருள் இங்ஙனமிருந்தால் யானென் செயவல்லேனெனக் கவலுற்றுழைக் கக்குறைவினால் எடுத்த நூலையும் முடிக்காமல் வாளாவிருந்தேன். பின்னர் ஒரு காலத்து, எனது சிறந்த நண்பரும் தமிழ்நூலா

நாய்ச்சி செய்தலைத் தமக்குப் பொழுதுபோக்காகக்கொண்டதுமன்றி ஆதரிப்போரின்மையால் தியங்குதலுற்றுத் தவிக்கும் தமிழினை முன்னுக்குக் கொண்டுவரத் தாம் எப்பொழுதும் முன்னிற்பதாக வாக்களித்த வள்ளலுமாகிய ஸ்ரீமான் காரைக்குடி சித. நாகப்ப செட்டியாரவர்கள் எனது கிருகத்திற்கு வந்தபொழுது அரைகுறையாய் நின்ற இந்நூலை முடிக்கும்படி என்னை வற்புறுத்தியதுமன்றித் தாமே யதனை அச்சிட்டு முடிக்கும் முயற்சியிற் பொருளுதவி செய்வதாக உறுதிமொழி தந்து என்னையத்தொழிலின்கண் ஊக்கியருளினர். இதுவும் குமாரசகடவுளின் திருவருளொன்றுன்றி எனது பலதிறலைப்பட்ட தொழில்களினிடையே கிடைத்த அவகாசங்களில் இந்நூலை யொருவாறு பூர்த்திசெய்தேன்! செந்தமிழ்ப்புலவரை எனெனக் கேளாத இக்காலத்தில், தமது தொழிலின்கணுண்டாகிய சிலபல இடையூறுகளையும் பொருட்படுத்தாது வலிய முன்வந்து என்பாற் பேரன்பு காட்டிய ஸ்ரீமான் செட்டியாரவர்கள், உண்டாகிய இடையூறுகளினின்று நீங்கி, இன்னுந்தமிழினை வளர்க்கும் நன்முயற்சியில் தலைநின்று பல்வகைச்செல்வமும் பெற்றுப் பல்லோருங்கொண்டாட நீடூழி காலம் வாழும்படித் தமிழ்க்குரிய கடவுளாகிய முருகனைப் பன்முறையும் வேண்டுகின்றனென்.

கற்று வல்ல புலவரானே யாக்கப்படவேண்டிய இந்நூலைக் கந்தபுராணத்தையும் தணிகைப்புராணத்தையும் முதனூல்களாகக்கொண்டு, எனதாசிரியரியற்றிய நாடகவியலின் விதிக்கிணங்க ஒருவாறு வகுத்தனன். முக்குண வயத்தான் முறைபிறழ்ந்தாற்றிய பிழைகளைப் பொறுத்து இஃது குமரவேளின் குறையில் நாடகமெனக்குணித்துப் புலவரானோர் பலரும் என்பாற்பெரிதும் இரங்கியருள்புரிவாராக.

இந்நாடகத்தை அச்சிற்குக் கொடுக்கும்படிப் பொறுமை யுடன் வழுவின்றிச் செவ்வனே வரைந்து தந்ததுமன்றி இடை யிடையே தமக்குத்தோன்றிய சில அரிய கருத்துக்களை உடன் சேர்க்க எனக்கு எடுத்துக்காட்டிய எனது இளைய சகோத ரன் சிரஞ்சீவி N. வெங்கட்ராமையருக்கும், நூலினிடை ஆங்காங்குச் சில கீர்த்தனங்களையமைக்க உடனிருந்து உதவி புரிந்த நண்பர் சிரஞ்சீவி S. இராஜா ராயர் அவர்களுக்கும் அச்சிடும்பொழுது உண்டாகும் வழுக்களைக் களைந்து பிழைய றப் பரிசோதிக்கும் விஷயத்திற் பெருமுயற்சியெடுத்துக் கொண்டவரும், மாயவரம் முனிசிபல் ஸ்கூல் தமிழ்ப்பண்டி தருமாகிய ம-ா-ா-ஸ்ரீ V. சுப்பிரமணியஐயர் அவர்களுக்கும் எல்லாவித நன்மையுமுண்டாகும்படிக் குமரக்கடவுளை மன மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குதலேத்தவிர அன் னோர் செய்த பேருதவிக்குக் கைம்மாறு வேறொன்றுஞ் செய் யவல்லேனல்லேன்.

> "செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும்
> வானகமு மாற்ற லரிது".

எழில்வேற்குமரன் இன்னருள் என்றும் வாழ்க.

கடலூர் N. T.<br>24th March 1912.

இங்ஙனம்,<br>ந. பலராமையர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வல்லீ பரிணயம்.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

### விநாயகர் வணக்கம்.

கலிவிருத்தம்.

பண்ணு லாவு பணிமொழி வள்ளியைக்
கண்ணி லாவு கடம்பன் வரைந்தசீர்
நண்ணு நாடக நாஞ்சொலத் தந்திமா
வண்ண வாண்முகத் தண்ணலை வாழ்த்துவாம். (1)

### நடராஜர் வணக்கம்.

கலிநிலைத்துறை.

பூணு மத்தம்வெண் பிறையெனப் பொங்கொளி பொழிய
வேணி வாய்க்கங்கை விமலைபோல் வியனடம் புரிய
மாணு மோர்பதம் மண்ணெண வான்கொளக் குனிக்குந்
தாணு வாகிய சபேசனைத் தாண்மலர் பணிவாம். (2)

## பாயிரம்.

### சுப்பிரமணியர் வணக்கம்.

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

மன்றல்கமழ் மலர்க்கூந்தல் வள்ளியிரு விழியனைய
வைவே லேந்தி
மன்றவவன் சாயல்கொளு மஞ்ஞையெனும்
வயப்பரிமேன் மகிழ வேறிப்
பொன்றிகழு மணியாரம் புணர்ந்தவவ ணகிலம்போற்
பொலிவுற் றோங்கு
குன்றுதொறும் விளையாடுங் குமரவேள் சேவடிகள்
குறிக்கொள் வாமால். (3)

### நாமகள் வணக்கம்.

*வஞ்சிவிருத்தம்.*

வேண வாவின் விளம்புமிவ்
யாணர் நூலிசை யெய்தவே
வீணை யங்கையின் மேவிய
வாணி தாளை வழுத்துவாம். (4)

### ஆசிரிய வணக்கம்.

*கலிவிருத்தம்.*

தேரினெங் நெஞ்சநீ திரிதலென்கொலோ
காரொடும் வியன்றமி ணையர்ந்து தாவிய
காரெனும் பரிதிமால் கணங்கொள் பூவரா
ரீரடி யேழைகூட் டியையப் போற்றுவாம். (5)

(இது துரக கதிபந்தம். ஆக்கியோன்றன் ஆசிரியரியற் பெயர் சித்திரத்தின் கோணாந்தரத்திலமைந்து நிற்கின்றது.)

## நாடகப் பாத்திரங்கள்.

1. நம்பிராஜன்: வள்ளிமலை வேடர் கோமான்.
2. மதியூகி: நம்பிராஜன் மந்திரி.
3. முத்துக்குமாரன்: வேட்டுவக் கோலங்கொண்ட முருகக்கடவுள்
4. சிவயோகி: கிழக்கோலம் பூண்ட முருகபிரான்
5. நாரதர் யாழில் வல்ல ஒரு தேவமுனிவர்.
6. வீரதேவன்: } நம்பிராஜன் புதல்வர்.
7. வசந்தன் : }
8. ஏரம்பன்: சேவகன்.
9. நங்கைமோகினி: நம்பிராஜன் மனைவி.
10. வள்ளி: நம்பிராஜன் புதல்வி.
11. சித்திராங்கி; வள்ளியின் தோழி.
12. சக்கம்மா: ஒரு குறத்தி.

வேலன், வேடர் முதலாயினோர்.

---

## நாடக நிகழ்விடம்.

தொண்டைநாட்டுப்பழம்பதியாகிய மேற்பாடியென்னும் அணிநகரின் பாங்கருள்ள வள்ளி மலையும், அதன் சாரலிலுள்ள வேட்டுவக்குறிச்சியுமாம்.

# வல்லீ பரிணயம்.

## அங்கம்: க

### முதற் களம்.

இடம்: நம்பிராஜன் சபாமண்டபம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்:—நம்பிராஜன், மதியூகி, வீரதேவன், வசந்தன், வேடர் முதலியோர்.

நம்பிராஜன்:—ஐயா! மந்திரியாரே, நம்முடைய குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த மலைச்சாரலிலுள்ள குறிச்சிகளும் சீறூர்களும் சௌக்கியமாயிருக்கின்றனவா? நம்முடைய வேடர்கள், காட்டு மிருகங்களாலும் கள்வர்களாலும் உண்டாகும் துன்பமின்றி யிருக்கின்றார்களா? எங்கும் பயிர்பச்சைகள் நன்றாய் விளைந்திருக்கின்றனவா? நம்முடைய ஆணை நான்கு திக்கிலும் பரவிச் செல்லுகின்றதா? சீக்கிரம் சொல்லும்.

மந்திரி:—மகாராஜா! தங்களுடைய ஆணைக்குக் கேட்பா ணேன்; ஜனங்கள் யாவரும் தங்கள் உத்தரவைத் தலை மேல் தாங்கி நடக்கிறார்கள். தங்கள் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மற்ற மலைகளிலுள்ள வேடராஜர்கள் பயந்து கப்பம் கட்டுகிறார்கள். அவர்கள் கொண்டு வந்து கொட்டும் தந்தங்களும் ஆணி முத்துக்களும் இரத்தினங்களும் அளவற்றன தங்கள் ஆதீனத்தில் இருப்பவர்கள் முருகக்கடவுள் அருளால் ஒரு குறைவு மின்றிச் சுகமாயிருக்கிறார்கள். மேலும் தங்களுக்கு வள்ளியம்மை புத்திரியாக அமைந்தது முதல் மாதமும் மாரி பொழிகின்றது. தினை ஐவணம், முதலிய தானி யங்கள் ஒன்றுக்குப் பத்தாய்க் கொழிக்கின்றன. கங்கா ஜலம் பாய்ந்த பிறகு சமுத்திரமும் பரிசுத்தமாம். இந்த உண்மையை யாவருமறிவார்கள். அது போல வள்ளியம்மை பிறந்தது முதல் நமது வேடகுலமும் சிறப்படைந்தது.

நம்பிராஜன்:—ஆமாம் மந்திரியாரே, நீர் கூறுவதுண்மை யே. நாம் முன் வேட்டைக்குப் போய் வள்ளியைக் கண்டெடுத்துக் கொணர்ந்தது முதல் நமக்கு ஒரு குறைவுமில்லை. நல்லது நமது தினைப் புனத்தையும் ஐவ ணக் கொல்லையையும் பார்த்து வரும்படி அனுப்பிய சேவகன் வந்தானா?

மந்திரி:—சேவகன் வருகிற சமயந்தான்.

(ஏம்பன் இரைக்க இரைக்க ஓடி வருகின்றான்.)

இதோ அவனும் வந்துவிட்டான்.

ஏம்பன்:—மகாராசாவே!—மந்திரியாரே!—எல்லாம் பூட்டு துங்க—ஒண்ணுமில்லேங்க.

நம்பிராஜன்:—என்னடா போய்விட்டது?

ஏரம்பன்:—சாமீ! நம்ம புனத்திலே—சாமீ இரைக்குதுங்க.

நம்பிராஜன்:—சரிதானடா, மடையா சீக்கிரஞ்சொல்?

ஏரம்பன்:—சாமீ! நம்ம கொல்லையிலே, நான் போனபோது—ஆயிரங்கிளிகள்—இரண்டாயிரம் குருவிகள்—சாமீ! கண்ணுக்கெட்டினமட்டும் மான்கள்—

நம்பிராஜன்:—என்னடா விளைத்து விளைத்துச் சொல்லுகிறாய். சங்கதியென்னடா? உடனே சொல்லாவிட்டால் புக்கோணை மரத்தில் கட்டிக்கசையடி கொடுக்கச் சொல்லுவேன்.

ஏரம்பன்:—சாமீ—இல்லேங்க--மகாராஜா இதோ சொல்லி விட்டேனுங்க. கிளிகள், மான்கள், குருவிகள், யானைகள் எல்லாமா விழுந்து விளையாடிச்சுங்க.

நம்பிராஜன்:—பயிர் என்னமாடா இருக்கிறது?

ஏரம்பன்:—பயிரெல்லாம் கதிர் வலுத்து த்தலைசாஞ்சு கிடக்குதுங்க. கிளியும், மானும், உழுந்து தலைக்கு அஞ்சு ஆறுத்தின்னுட்டுதுங்க. நான் போய் ஓட்டினேன் கிளிகள் தலைக்கு ஒரு கதிராக் கொத்தியண்டு பூட்டுதுங்க. மானை ஓட்டலாமென்று போனேன். நடுவிலே ஒரு ஆனை துரத்திச்சுங்க—சாமி—என்னங்கறேலென்னு பெரிய கொம்பானையுங்க. ஓடிவந்துட்டேன்—சாமி—மன்னிக்கவேணும்.

(காலில் விழுகிறான்)

நம்பிராஜன்:—நீ நல்ல வீரன். சரிதான் போ.

(சிறிதுயோசித்தல்)

என்னமந்திரியாரே, சேவகன் சொல்லியதைக் கேட்டீரா?

மதியூகி:—ஆம் முருகக்கடவுள் அருளால் தினைமுதலிய தானியங்கள் விளைந்திருக்கின்றன. இனிப்பராமுகமாக இருந்தால் காட்டு மிருகங்களும், பறவைகளும் சீக்கிரத்தில் அழித்துவிடும். தாங்கள் தக்கமுயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும்.

நம்பிராஜன்:— அதற்கு நாமென்ன செய்யலாமென்று சொல்லுகிறீர?

மதியூகி:—மகாராஜா, உடையவன் கண்ணோடாத பயிரழியும். குறைவற்ற வேளாண்மை செய்வதே நிறைவுற்ற வல்லாண்மையாகும். ஆகவே தாங்கள் தினைகொய்யுமளவும் தக்க காவலை அவ்விடத்தில் நியமிக்க வேண்டும்.

"செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்." (6)

எல்லாந்தெரிந்த தங்களுக்கு நான் அதிகஞ் சொல்ல வேண்டியதில்லை.

நம்பிராஜன்:—மந்திரியாரே, நீர் சொல்லியதை யோசித்தால் தக்க சிரத்தையுடையவர்களைக் காவலுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று தோற்றுகிறது.—நல்லது நம்முடைய குலத்தில் கலியாணமாகாத மங்கைப்பருவமுற்ற கன்னியர்களைத் தினைக் காவலுக்கு அனுப்புவது வழக்கமன்றோ? நம்முடைய வள்ளியை ஏன் காவலுக்கு நியமிக்கக்கூடாது?

மதியூகி:—அப்படித்தான் எனக்கும்பட்டது. வள்ளியம்மையைக் காவலுக்கு நியமிக்கிற விஷயத்தில் அடியேனு

க்குச்சர்வசம்மதம். இருந்தாலும் எல்லாவிஷயத்தையும் தீர்க்காலோசனை செய்து நடத்தலே அரசர்களுடைய கடமை.

"அந்தணரொழுக்கமு மரசர் வாழ்க்கையும்
மந்திரமில்லையேன் மலரு மாண்பில."

ஆதலால் மகாராணி நங்கை மோகினியம்மை அவர்களுடைய அபிப்பிராயம் எப்படியிருக்கிறதோ அதையும் தெரிந்துகொண்டு ஏற்பாடு செய்வதே உசிதமாயிருக்கும்.

நம்பிராஜன்:—ஓ! அதைக் குறித்துக் கவலைப்படவேண்டாம். நம்முடைய மனம்போலவேயிருக்கும் நங்கையபிப்பிராயமும். மேலும் நாம் நமது குலவழக்கத்தை அனுசரித்துச் செய்கிறவிஷயத்தில் அவளுக்கு எவ்வித ஆக்ஷேபனையுமிராது. இருந்தாலும் நீர் சொல்லுகிறபடியால் அவளையும் ஒருவார்த்தை கேட்போம்—அடே சேவகா—

(ஏரம்பன் எதிர்வந்து வாய்பொத்திநிற்கிறான்)

ஏரம்பன்:—சாமி!

நம்பிராஜன்:—அடே, நீ போய் நம்முடைய நங்கை மோகினியம்மையிடம், நாம் கொலுமண்டபத்திலிருக்கிறதாகவும் அம்மாளை உடனே வரச்சொன்னதாகவும் சீக்கிரம் சொல்.

ஏரம்பன்:—சாமி, வள்ளியம்மாளையும் இட்டுக்கொண்டு வரச் சொல்லட்டுங்களா?

நம்பிராஜன்:—என்னடா அதிகப்பிரசங்கியாய் இருக்கிறாய் பெரியம்மாளைமாத்திரம் உடனே வரச் சொல்லடா. சீக்கிரம் போ..

வரப்பன்:—சாமி!

(ஒருதரம் கும்பிட்டுவிட்டு ஓடுகிறான்)

**வீரதேவன்:**—பிதாவே! தங்களிடத்தில் ஒரு விண்ணப்பம். வள்ளியம்மையைப்புனங்காவலுக்கு அனுப்புகிற விஷயத்தில் அடியேனுக்கு ஒன்று தோன்றுகிறது. புனங்காவலோ மிகக் கடினமானது, வள்ளியோ மெல்லியல். அவளது பாதம் பஞ்சை மிதிப்பினும் பதைக்கும். அவை கூரிய பரற்களை யெங்ஙனம் பொறுக்கும்? மலரினும் மிருதுவான அவளது மேனி வெயிலையும் மழையையும் எப்படிச்சகிக்கும்?

வசந்தன்;—ஐயனே! மேலும் விசாலமான தினைப்புனத்தில் பல்லாயிரம் பறவைகளும், மிருகங்களும் வந்து விழுந்து அழிக்குஞ்சமயத்தில் அந்தப்பேதைப்பெண் என்ன செய்வாள் பாவம்.—

வீரதேவன்:—என்னருமைத் தந்தையே! அடியேனைக் காவலுக்கு நியமியுங்கள். வருகிற பறவைகளையும் மிருகங்களையும் கண்டதுண்டமாக என்னுடைய கூரிய அம்புகளால் கொன்று குவித்து, தினைப்புனத்தில் சிற்றெறும்பும் கொதுகும் கூட உள்ளே நுழையாவண்ணம் சரக்கூடம் கட்டிவிடுகிறேன்.

வசந்தன்:—அண்ணா! இதுவே நல்ல யுக்தி. ஒருவர்க்கு இருவர் துணையாதலால் நானும் உடன் வருகிறேன்— பிதாவே! எனக்கும் உத்தரவளிக்கவேண்டும்.

நம்பிராஜன்:—குழந்தைகளே! உங்கள் அன்பிற்கும் வீரத் தன்மைக்கும் மெச்சினேன். வள்ளியைப் புனங் காவலுக்கு நியமித்தபடியால் அவள்பால் எனக்கு அன்

பில்லை என்று நினைக்கவேண்டாம். உங்களைப்போல் எனக்கும் பரிபூரணமான அன்புண்டு. நமது முன்னோர் நம்முடைய குலாசாரத்தில் சிறிதும் தவறினவரில்லை. நானும் இதுவரையில் அத்கருமத்தில் அணுவளவும் பிசகாது முருகக்கடவுள் அருளால் அரசாண்டு வந்தேன். ஆகவே நமது குலத்திற் கேற்பட்ட வழக்கத்தை அனுசரித்து இனிமேலும் நடக்கவேண்டும் என்பதே என் கருத்து. கல்யாணமாகாத மங்கைப்பருவமுற்ற பெண்களைப் புனங்காவலுக்கு அனுப்புவது நமது சாதியின் வழக்கம். நமது நாட்டின் விதியும் அதுவே. அது பற்றியே நம்முடைய வள்ளியையும் புனங்காவலுக்கு ஏற்படுத்தினேன்.

வசந்தன்:—பிதாவே! நான் இன்னும் பேசத்துணிந்ததற்குப்பொறுத்தருளவேண்டும். நமது குலாசாரத்தை நாம அனுசரிக்க வேண்டியது கிரமமே. ஆனாலும் நமது சாதிப் பெண்கள்போல் வள்ளி யிருக்கிறாளோ? அவர்களுடைய தேக திடமும், மனோதைரியமும், வெயில், மழை, காற்று முதலியவற்றைத் தாங்கும் வலிமையும் வள்ளிக்குண்டோ? இருந்தாலல்லவோ வள்ளியும் புனங்காவலுக்குப் போவது நியாயமாகும்?

நம்பிராஜன்:—குழந்தாய்! நீ சிறு பிள்ளையானபடியால் நமது குலாசாரத்தின் பெருமை தெரியாது பேசுகிறாய். வள்ளி, நமது குலப்பெண்களைப் போலில்லாவிட்டாலும் நம் குலத்தைச் சேர்ந்தவள் தானே. ஆதலால் அவர்களுடைய வழக்கத்தை இவள் கைப்பற்றுவதும் கிரமந்தான்.

வீரதேவன்:—ஐயனே! நமது புனங்காவல் இலேசன்று. பைங்கிளிகளும், மாங்குயில்களும் மாத்திரமே புனத்

தின்கண் வருவனவல்ல. கண்டோர் மருளக் காற்றெ
னக் கடுகி எதிர்த்தவர் வயிற்றை எறிவேல் போன்ற
தமது கூரிய கொம்புகளால் இமைப்பொழுதிற் கிழித்
துப் பாயுங் கலைமான்கள் எண்ணில—வக்ரதந்தங்க
ளைப் பெற்றுக் கொடிய அரக்கர்களைப்போல் குமுறிப்
பாயும் காட்டுப் பன்றிகள் கணக்கற்றன. எதிரில் வரும்
பிராணிகளைக் கிழித்து இரத்தந் தோய்ந்து இரு தந்தங்
களும் பவளம் போல் மின்ன, மேககர்ச்சனை போல்
பிளிறிக் கொண்டு மதத்தை மழை யெனச் சொரிந்து
வருங் காட்டானைகள், பெரிய மலைகள் கையுங் காலும்
பெற்றன போல் நடந்து எதிரோடி வந்தால், வில்லுங்
கணையும் எறிவேலுங் கைக்கொண்ட வீரர்களான வே
டர்களும் அஞ்சுவார்களே! கோழை மனதுடைய
ஏழைவள்ளி என்ன செய்வாள்?— நான்கு பக்கங்களி
லுமுள்ள மலைக்குகைகளிலிருந்து, தூண் கிழித்தெழுந்த
கோளரிமாணபலசிங்கங்கள் கிளம்பி ஆவென வாய்திறந்து
கர்ச்சனை செய்தால் விண்ணுலகத்திலுள்ள தேவர்களும்
வெருவுவார்கள். பிதாவே இவற்றையெல்லாம் தாங்
கள் சிறிதுயோசித்து, நமது கண்ணுக்குக் கண்ணான
வள்ளியை அங்கு அனுப்பாமல், என்னையும் வேண்டு
மானால் வசந்தனையும், புனங்காவலுக்கு அனுப்பியருளப்
பிரார்த்திக்கிறேன்.

நம்பிராஜன்:—வீரதேவா! வள்ளியினிடத்து உனக்குள்ள
அளவற்ற அன்பிற்கு மகிழ்ந்தேன். நீ கூறியயாவையும்
உண்மையே. ஆனாலும் நீ வள்ளியம்மையைச் சாதார
ணமாக நினைத்தாய் அவளிடத்துள்ள அற்புதசக்தி
களை நீ கவனிக்கவில்லை. நான்சொல்வதைக்கவனமாய்க்
கேள். சிறிதுகாலத்திற்குமுன் நான் வேட்டைக்குப்
போனபொழுது மலைவேடிக்கை காட்டலாமென்று

வள்ளியையும் உடனழைத்துச் சென்றேன். வேட்டையாடிய பிறகு வேடர்கள் எம்மினின்றும் நீங்கிச்சாரலில் ஒருபுறம் திரிந்து போயினர். இளைப்பால் யான் ஒரு சந்தன மரத்தடியில் படுத்து அயர்ந்து நித்திரை போயினேன். அருகிலிருந்த வள்ளியம்மை மாத்திரம் தனியாய்ப்பக்கங்களிலுள்ள மரங்களில் மலர் பறிப்பதும் அவற்றைத் தொடுப்பதுமா யிருந்தாள். அப்பொழுது திடீரென்று மேகத்தொனிபோலொன்றைக் கேட்டு விழித்தேன். ஆகா! அந்த ஆச்சரியத்தை என்னென்று சொல்வேன். இப்பொழுதும் என்கண்முன் நடப்பது போல் தோற்றுகிறது.— மிகப்பெரிய சிங்கமொன்று தனது வாலை நிமிர்த்து, முன்னங்காலிரண்டையும் உயரத் தூக்கிப் பிடரிகுலுக்கி, சிறிய பிறைபோலும் கோரதந்தங்கள் ஒளிவீச, ஆவெனவாய்திறந்து, கண்களிரண்டும் உருக்கிய செம்புபோல் மின்ன, வள்ளியைப் பார்த்து நிற்பதைக்கண்டேன். அந்தச்சிங்கத்தை இப்பொழுது நினைப்பினும் என்மனம் பகீரென்கிறது. ஆகா அநியாயமாக அருமைக்குழந்தை வள்ளியை யிழந்தோமென்ற தயரத்தால் இன்னது செய்வதென்று அறியாது முருகனைப்பிரார்த்தித்துக்கொண்டு உடைவாளை உறைநீக்கியெழுந்தேன். வள்ளியோ அந்த மிருகேந்திரனைப் பொருட்படுத்தாது தான் நின்ற நிலையிலேயே புன்னகை புரிந்து 'சிங்கமே வா' என்றனள். அந்தக்கோரமான பிராணி அவள் கூறியதை யுணர்ந்தது போலவும் அவள் ஆணையைக்கடக்க அஞ்சினது போலவும் திடீரென்று தனது வாலை குழைத்துக்கொண்டு, தலைதொங்க அவளை நெருங்கிப் பூனைபோலுறுமிச்சுற்றிச்சுற்றி நின்றது. அங்ஙனம் நின்ற சிங்கத்தின் கழுத்தில் வள்ளி

தனது கையிலுள்ள மாலையைப்போட்டுத்தனது கைகளா ற்றடவி, 'சிங்கமே இந்தவழியாகப்போ' என்றமாத்திரத் தில் அவ்லைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அப்பிராணி அவள் காட்டிய வழியே சென்றது. இந்த அற்புதத்தைக்கண்ட எனக்குப்பேச நாவெழவில்லை. விழித்தகண் இமையாமலும் இட்ட அடி எடாமலும் சிறிது நேரம் பிரமித்து நின்றேன். பிறகு திடீரெனவோடி அவளை வாரியெடுத்து 'குழந்தாய்! சிங்கம் என்ன செய்தது? பயந்தனையோ?' என்றேன். 'அப்பா! அது ஒன்றுஞ்செய்யவில்லை, எனக்கென்னபயம்?' என்ற அவளுடைய தேன் போன்ற மொழிகள் என்காதில் விழுந்ததும் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவுமுண்டோ?

அன்பு நீடிய மக்கண்மெய் தீண்டலு மனையார்
இன்பு நீடிய இசைமொழி கேட்கலும் இனிய
வென்ப துண்மையா யெளிதினி லுணர்ந்தனன்
யானே] (8)

இந்த விஷயத்தை மற்றையோருடன் சொன்னால் வள்ளிக்குக் கண்ணூறு படுமேயென்று, யான் ஒருவருடனும் சொல்லவில்லை.' ஆதலால் வள்ளியைச் சாதாரணமான பெண்ணாக நினையாதே.

மதியூகி:—குழந்தாய், வீரதேவா! பிதாகூறியதைக் கேட்டனையோ? வள்ளி சாதாரணமானவளல்லள். தெய்வத் தன்மை வாய்ந்தவள். மானுடவயிற்றில் பத்து மாதங் கருப்பத்திற்றங்கிப் பிறந்தவளில்லை. மான் வயிற்றிற் பிறந்தவள். மான் வயிற்றில் மானுடக்குழந்தை பிறப்பது முண்டோ? அதுவே வள்ளியம்மையின் பெருமை

யைக்காட்டும். பிதா கூறிய விருத்தாந்தத்தைக் கேட்டனையே; வள்ளியைக்கண்ட மாத்திரத்தில் பயங்கரமான சிங்கமும் அவளுக்கு வணங்கி அடங்கி நடப்பானேன்? வள்ளியின் பேரழகையும் அவள் மாதுரியகுணத்தையும் உணர்ந்த அந்தக்காட்டுமிருகம் தன்வசந்தப்பி அவளுக்கு ஆட்பட்டது. முருகக்கடவுள் அருள் அவளுக்குப் பரிபூரணமாகவுண்டு. இனி நீ கவலைப்படாதே. பிதா வள்ளியம்மையைப் புனங்காவலுக்கு அனுப்புவதால் அவளுக்கு எவ்விதமான குறைவும் வராது. இதோ நங்கை மோகினியம்மையவர்களும் வந்துவிட்டார்கள்.

(நங்கை மோகினியம்மையும் ஏரம்பனும் வருகிறார்கள்)

நம்பிராஜன்:—நங்காய்! இப்படிவா.

நங்கைமோகினி:—என்னைத்தாங்கள் சீக்கிரம் வரச்சொன்னதாக ஏரம்பன் வந்துசொன்னான். அவசர காரியம் ஏதேனுமுண்டோ?

நம்பிராஜன்:—நங்காய்! நமது தினைப்புனமும், ஐவனக்கொல்லையும் நன்றாய் விளைந்திருக்கின்றன. புனங்காவலுக்கு வள்ளியை அனுப்பலாமென்று உத்தேசித்திருக்கிறேன். அப்படியே நமது மதியூகியாரும் அபிப்பிராயப்பட்டனர். உன்னுடையகருத்தையும தெரிந்துகொள்ளலாமென்று உன்னை வரவழைத்தேன்.

நங்கைமோகினி:—ஐயா! தங்கள் அபிப்பிராயத்திற்கு நான் விரோதமாக என்ன சொல்லப்போகிறேன்? ஒன்றுமில்லை. குழந்தை வள்ளியைப் பிரிந்து நான் அரைக்கணமும் இருப்பது கஷ்டமாயிருக்கும். என்னோடுகூடவேயிருக்கும் குழந்தையும் என்னைப்பிரிந்து எப்படி இருக்கும்? மேலும் நுட்பமானதேகத்தையுடைய வள்ளி அந்த

த்தொழிலுக்கு ஏற்றவளாவளோ? கொடிய மிருகங்களைக்கண்டு பயப்படுவாளே! அவளைப்பிரிவது என்றால் எனக்கு என்னவோபோலிருக்கிறது.

நம்பிராஜன்:—நங்காய்! நீ அதைரியப்படாதே. நமது குலாசாரப்படி கன்னிப்பெண்ணைத்தானே காவலுக்கு அனுப்பவேண்டும். சாதிவழக்கத்திற்கு விரோதமாக நடக்க எனக்குச்சம்மதமில்லை. ஆகையால் வள்ளியம்மை தன் தோழிகள் சகிதம் புனங்காவலுக்குநாளைக்கேபோகட்டும். நாமும் தினம் வேட்டைக்குப் போகும்பொழுது அவளைப் போய்ப்பார்த்து வருவோம். கவலைப்படாதே.

(நங்கை கண்ணீருகுக்கிறாள்)

மதியூகி:—தாயே! சிறிதும் யோசிக்கவேண்டாம். எல்லாம் முருகக்கடவுள் அருளால் நன்மையாகவே முடியும்.

நம்பிராஜன்:—கண்ணே, நங்காய்! என்னவருத்தப்படுகிறாய்? எல்லாந்தெரிந்த நீ துக்கப்படலாமா? நிற்க. நீ உன்னுடைய கன்னிப்பருவத்தில் தினைப்புனங்காத்தது மறந்தனையோ? அப்பொழுது தானே நானும் உன்னை முதல் முதல் பார்த்ததும். நீ புனங்காத்தது போல் உன் மகள் வள்ளியும் புனங்காவல் செய்யவேண்டாமோ?

(நங்கைமோகினி புன்னகை செய்து தலைதாழ்ந்து நிற்கிறாள்.)

மதியூகி:—தாயே! சாதி வழக்கத்திற்கு விரோதமாக நடந்தால் நமது குலதெய்வமாகிய முருகனுக்குக்கோபமுண்டாகும். வழக்க விரோதமின்றி நடந்தால் கடவுள் பேரருளுண்டாகும். ஆகவே, தாயே, சிறிதுந் தடைசெய்யாது அனுமதி கொடுக்கவேண்டும்.

நங்கைமோகினி:—தங்கள் அபிப்பிராயம்போல் செய்யுங்கள். தாங்கள் வேட்டைக்குப்போம்பொழுது என்னையும் கட்டாயம் அழைத்துப் போகவேண்டும். அவ்விடத்தினையும் நான் பார்க்கவேண்டும்.

நம்பிராஜன்:—அப்படியே செய்கிறேன், கண்ணாய்! மந்திரியாரே! நாளைப்பொழுது விடிவதற்குள் நமது புனத்தில் மிக அழகான பரண்போட நம் வேடர்களுக்கு உத்தரவு செய்யும். நீரே நேரிற்போயிருந்து யாவற்றையும் சரியாய்ப்பாரும். நமது சேவகன் எரம்பனையும் அழைத்துப்போவீராக. அடே எரம்பா!

(எரம்பன் எதிரில் வந்து வணங்குகிறான்.)

எரம்பன்:—சாமி.

நம்பிராஜன்:—அடே! நீ நமது மந்திரியாரோடுகூடப்போய் மற்றவேடர்களையும் வைத்துக்கொண்டு வேலையைச் சீக்கிரம் முடிப்பாயாக. அடே! கால்கள் சந்தனக்கால்களாக இருக்கட்டும்.

எரம்பன்:—சாமி! முகூர்த்தக்காலுங்களா?

(யாவரும் நகைக்கின்றனர்)

நம்பிராஜன்:—அடே மடையா! இவன் எப்பொழுதும் இப்படித்தான். இவனை நன்றாக உதைக்கவேண்டும்.

மந்திரி:—மகாராஜா! இவன் மிக நல்லவன். மேலும் இப்பொழுது நல்ல சகுனமான வார்த்தை சொல்லுகிறான். அவன்மேற்கோபம் வேண்டாம்.

நம்பிராஜன்:—அடே, சேவகா! நம்முடைய வள்ளியம்மை நமது தினைப்புனத்தில் காவல் செய்யப்போகிறாள்;

என்னடி சித்திராங்கி, நீ மலர் பறிக்கப்போய் வெகு நேரமாயிற்றே. இத்தனை நாழி நீ என்ன செய்துகொண்டிருந்தாய்? எங்கே, என்னென்ன மலர்கள் கொண்டு வந்தாய் காட்டு, பார்ப்போம்.

சித்திராங்கி:—என்னடியம்மா! இப்பொழுதுதானே போனேன். அதோ தெரிகிறதே அந்தச்சோலைக்கு மலர் பறிக்கலாமென்று போனேன். அங்கே விதம்விதமான புஷ்பங்கள் இருக்கின்றன. எதைப்பறிக்கலாமென்று யோசித்து யோசித்துப் பறித்தேன். அதுவுமில்லாமல் அங்கேயொருமயிலாடிற்று. அந்த வேடிக்கை பார்த்தேன். அதனால்தான் கொஞ்சம் நாழிகை கூட ஆயிருக்கும்.

வள்ளி:—அது கிடக்கட்டும். நீ கொண்டுவந்த புஷ்பங்களைக் காட்டு. இப்படியுட்கார்ந்து சொல்.

சித்திராங்கி:—நான் முல்லை, மல்லிகை, இருவாட்சி, சண்பகம், மந்தாரம், சோங்கு, செங்கடப்பு, பாரிஜாதம், முதலான எல்லாப்புஷ்பங்களையும் விதத்திற்குக்கொஞ்சமாகக்கொணர்ந்திருக்கிறேன். உனக்கு எது வேண்டும்? கேள்; அதைத்தருகிறேன்.

வள்ளி:—எனக்கு எல்லாமே வேண்டும்.

சித்திராங்கி:—அப்படியானால் வாங்கிக்கொள்.

(தன் மடியிலிருந்து மலர்களை எடுத்துக் கொடுக்கிறாள்)

வள்ளி:—அடி சித்திராங்கி இந்த செங்கடப்ப மலர்களில் இன்னும் கொஞ்சம் பறித்துக்கொண்டு வரப்படாதா?

சித்திராங்கி:—அடி வள்ளியம்மா! அங்கே கடம்பமரம் ஒன்றுதானிருக்கிறது. அதிலும் உயரக்கிளையில் புஷ்பங்கள்

நிரம்ப இருக்கின்றன. கைக்கு அகப்பட்டவற்றைப்பறித்தேன். அதிருக்கட்டும். புஷ்பங்களில் உயர்ந்தது சிலர் மல்லிகை யென்பார்கள், சிலர் தாமரையென்பார்கள்; அவையெல்லாங்கிடக்க, உனக்குக்கடப்பம்பூவில் என்ன ஆசை?

வள்ளி:—போடி போ, என்னவோ பரிகாசம்பண்ணுகிறாய். செங்கடப்பம்பூ நிறைய அகப்பட்டால் அவற்றையொரு மாலையாகக்கட்டி நமது முருகக்கடவுளுக்கு மாலை சார்த்தலாமேயென்று எண்ணினேன். முருகக்கடவுளுக்குக் கடப்ப மாலையில் வெகு பிரியம்.

சித்திராங்கி:—சுவாமிக்கு மாலை சார்த்துகிறபொழுது என்ன வேண்டிக்கொள்ளப்போகிறாய்?

வள்ளி:—சுவாமிக்கு மாலை சார்த்துகிறபொழுதெல்லாம் நாம் வேண்டிக்கொள்ளவேண்டுமா என்ன?

சித்திராங்கி:—நீ எப்பொழுதும் வாயடி அடிப்பாயே. என்னிடத்தில் சொல்லப்படாது என்று எதையோ ஒளிக்கிறாய்.

வள்ளி:—ஒளிக்கிறதற்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையே. இருந்தால் சொல்லமாட்டேனோ?

சித்திராங்கி:—ஏதோ இருந்துதான் முருகக்கடவுளுக்கு மாலை சார்த்துவதில் யோசனை போயிற்று. எனக்கு நீ சொல்லாவிட்டாலும் உன் மனதில் இன்னதிருக்கிறதென்று எனக்குத்தெரியும்.

வள்ளி:—எங்கே அது இன்னதென்று சொல் பார்ப்போம். என் மனதிற்குள்ளேபோய் நாலு நாழிகை இருந்து பார்த்தவள் மாதிரி சொல்லுகிறாயே.

சித்திராங்கி:—கிட்டவா சொல்லுகிறேன்.

வள்ளி:—எங்கே சொல்.

(கிட்ட நெருங்கிச் செவிசாய்த்துக் கேட்கிறாள்.)

சித்திராங்கி:—(சிரித்துக்கொண்டு) நல்ல கணவனைக்கிடைக்க வேண்டும் என்றுதான் வேண்டிக்கொள்ளப் போகிறாய்.

வள்ளி:—அடியம்மா! எப்படி உண்மை கண்டு பிடித்தாய்? நான் கல்யாணமே பண்ணிக்கொள்ளப் போகிறதில்லையே.

சித்திராங்கி:—நீ எல்லாவற்றிலும் அதிசயமான பெண்ணாயிருக்கிறாய். உனக்குக் கல்யாணமே வேண்டாமென்றால் நீ யேன் பெண்ணாகப்பிறந்தாய்?

வள்ளி:—அந்தக்கேள்வி நீ என்னை உண்டாக்கிய கடவுளைக் கேட்கவேண்டும். அதிருக்கட்டும். 'நல்ல கணவன்' என்றாயே. அவன் எப்படியிருப்பான் சொல்.

சித்திராங்கி:—நிரம்ப அழகுடையவனாய், எல்லா நற்குணங்களுமுடையவனாய் ஒன்றுக்கும் அஞ்சாத சுத்தவீரனாய் எவ்விதமான குறைவுமில்லாதவனாய்—

வள்ளி:—போதும். போதும். நீ உன் வாய் வலிக்குமட்டுஞ்சொல்லுவாய். நீ கூறுகிறபடி உத்தம புருஷன் கடவுள்தான்.—அடியே புனத்தில் கிளிகளும், நாகணவாய்களும், குயில்களும், கூட்டம் கூட்டமாய் இறங்கிவிட்டன. அவைகளையோட்டுவோம். கவண்கல்லை வீசு. (இருவரும் எழுந்து கவண் வீசுகிறார்கள்.)

(இருவரும் பாடுதல்)

"பூவைகாள் செங்கட் புறவங்கா ளாலோலம்
தூவிமா மஞ்ஞைகாள் சொற்கிளிகா ளாலோலம்
கூவல்சேர் வுற்ற குயிலினங்கா ளாலோலம்"
ஆவலுடன் சேரு மசுணங்கா ளாலோலம். (13)

பந்துவுருக் கொண்டனைய காகங்கா ளாலோலம்
துங்க நிலா முகிகாள் தூக்கணங்கா ளாலோலம்
தங்க நிறமுடைய சாதகங்கா ளாலோலம்
அங்கமிரண் டோருயிர்கொ ளன்றில்கா ளாலோலம்.(14)

பந்தனைய கோழிப் பறவைகா ளாலோலம்
பந்தனணி மேவும்வான் பாடிகா ளாலோலம்
கொந்தி நிமிருங் குறும்பூழ்கா ளாலோலம்
செந்துகிர்ப் பூத்தலைக்கொள் சேவல்கா ளாலோலம்.(15)

வள்ளி:—சித்திராங்கி! கவண்கல்லை வீசுவதற்குமுன் இந்தப் பறவைகள் என்னவேகமாய்ப்பறக்கின்றன பார்த்தனையா? இந்தக்கவண்களை யிப்படியே பழுவேணியில் தொங்கவிடுவோம். மீட்டும் பறவைகள் வந்தால் உடனே யோட்டுவோம்—நீ கொண்டுவந்த மலர்களை நாம் சீக்கிரந்தொடுக்காவிட்டால் வாடிப்போம். அவற்றைமாலையாகக்கட்டுவோம் வா.

சித்திராங்கி:—நீ ஊசலில் உட்கார்ந்துகொண்டு இந்தப் புஷ்பங்களை விதம் விதமாகப் பிரித்துவை. நான் போய்ச் சீக்கிரத்தில் நார் கொண்டுவருகிறேன்.

வள்ளி:—உடனே வந்து விடு. அங்கே மயில் ஆடுகிறது குயில் பாடுகிறது மான் ஓடுகிறது என்று வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்று விடாதே. புஷ்பங்கள் வாடிப்போம்.

சித்திராங்கி:—நீ பேச்சுக்கற்றவள். நான் போய் வருகிறேன்.

(சித்திராங்கி போகிறாள்)

(வள்ளி புஷ்பங்களை அடுக்குகிறாள்)

வள்ளி:—(தனக்குள்)

காதலாய்க் கசிந்து கண்ணீர் சான்றநங் கந்த வேளின்
பாதமே பரவிப் போற்றிப் பன்மல ரணியச் சார்த்திக்
கோதுதீர்த் தெம்மை யாளுங் குமரனே யென்று நாளும்
மாதவ வொழுக்கம் பூண்டோர் வானரும் வணங்கு நீரார் (16)

இந்த மலர்களை ஒரு கதம்ப மாலையாகப் புனைந்து கந்தனுக்கு இன்று அணிவோம். நாளையதினம் நாமே சென்று நிரம்ப மலர் கொய்து வருவோம்.

(சித்திராங்கியோடி வருகிறாள்.)

சித்திராங்கி:—அடி! வள்ளி! யாரோ ஒரு பெரியவர் காவி காம்பரதாரியாய்க் கையில் வீணையொன்றேந்திப் பாடிக் கொண்டு வருகிறார். அவர் தாடியையும் மீசையையும் பார்த்தால் மகாருஷி போல் தோன்றுகிறார். நமது பரணை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவர் என்னைப் பார்க்கவில்லை. நான் முன்னோடி உன்னிடத்தில் சொல்லலாமென்று ஓடி வந்தேன்.

வள்ளி:—நல்லது நாமிருவரும் அந்தச்சந்தன மரத்தின் பக்கத்தில் ஒளிந்து இருப்போம். அவர் இங்குவந்து என்ன செய்கிறார் என்பதைத் தெரிந்துகொண்டு பிறகு அவரிடத்தில் பேசுவோம். இப்படி வா. அதோ வருகிறார்.

(இருவரும் ஒளிந்துகொள்ளுகிறார்கள்.)

நாரதர்:—(யாழைக்கைக்கொண்டு பாடி வருகிறார்.)

துமணியம்போற் சுயப்பிர காசன்
தணிகாசலந் தனினி வாசன்
திமிர வினைக டமக்கு நாசன்
தேவ சேனைக் குகந்த நேசன்—
பாதம் போற்றுவாய்——ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
பதத்தைப் பாடுவோம். (17)

இந்தஸ்தானத்திலிருந்து தான் பெண்கள் பாடிய கான சப்தம் வந்து காதில் விழுந்தது. இவ்விடத்தில் ஒருவரையும் காணோம். இதோ ஒரு பாண் நிற்கிறது. அதோ ஓர் ஊஞ்சல் நாலவிட்டிருக்கிறது. அதில் இன்று விகஸித்ததாயும் இப்பொழுது கிரகித்ததாயுமுள்ள பலவித குஸுமங்கள் கிரமமாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இங்கிருப்பவர்கள் சமீபத்தில்தான் போயிருப்பார்கள்.

(வள்ளியும் சித்திராங்கியும் வருகிறார்கள்.)

இதோ யாரோ இரண்டு சுந்தரவநிதைகள் வருகிறார்கள். அவருள் முன்னால் வருபவள் கோடி பாலசூரியர்கள் உதித்தாற்போல் விளங்குகிறாள். இவர்கள் யாவரோ?

(வள்ளியும் சித்திராங்கியும் வணங்குகிறார்கள்.)

தீர்க்கசுமங்கலீபவா (விபூதி கொடுக்கிறார் அவர்கள் வாங்கி அணிகிறார்கள்.)

வள்ளி:—சுவாமி! தங்களைப் பார்த்தால் மகருஷி போல் தோற்றுகிறது. தங்கள் இருப்பிடம் யாது? எங்கிருந்து வருகிறீர்கள்? இங்குவந்த காரணம் என்ன? எங்களாலாகும் காரியம் ஏதேனுமுண்டோ?

நாரதர்:—அம்மா நாம் ஸ்வர்க்கலோகவாசி. இருந்தாலும் சுவர்க்கமத்திய பாதாளமாகிய திரிலோகத்திலும் சஞ்சாரம் செய்துவருவோம். நாரதர் என்னும் பெயருடையோம். ஸ்ரீபராசலம்போய் சுப்பிரமணியமூர்த்தியைத் தரிசனஞ்செய்து அவ்விடத்திற் சில காலமிருந்தோம். இப்பொழுது ஸ்ரீ தணிகாசலம் போகிறோம். அவ்விடத்தில் குமாரமூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். அவரைத் தரிசனஞ்செய்ய உத்தேசித்திருக்கிறோம்.—தாயே! திவ்ய தேஜஸோடு ஜ்வலிக்கிற நீங்கள் யாவர்? இந்தப்ப

யங்கரமான மிருகங்கள் வசிக்கும் மலையில் தனியராய் என்ன செய்கிறீர்கள்?

வள்ளி:—சுவாமி! நான் இந்தமலையிலுள்ள வேடமகாராஜர் நம்பிராஜருடைய புத்திரி. இவள் என் தோழி. என் பெயர் வல்லி. அவள் பெயர் சித்திராங்கி. தினைப்புனங்காவலுக்காக என் பிதா எங்களை இவ்விடம் வைத்திருக்கிறார். நாங்கள் காவல் செய்து வருகிறோம்.

நாரதர்:—தாயே! உயர்ந்த தேவஸ்திரீகளுக்குக்கூட தங்களுடைய திவ்ய தேஜஸ் இல்லையே. அப்படி இருக்க நீங்கள் வேட குமாரியென்றால் நம்புவதற்கிடமில்லையே. முகத்திலோ தேவதைகளுக்குரிய ஜ்யோதிஸ் பிரகாசிக்கிறது. நீங்கள் இன்னார் என்பதை நமக்கு இன்னுந்தெளிவாகத்தயவுசெய்து சொல்லவேண்டும்.

சித்திராங்கி:—ஐயா! வள்ளியம்மை ஒரு மான் வயிற்றில் பிறந்ததாக எல்லாருஞ்சொல்லுகிறார்கள். நம்பிராஜாவும் எங்கள் தகப்பனாரும் வேட்டைக்குப்போனபொழுது இவளைக்கண்டெடுத்தார்களாம். அதுமுதல் நம்பிராஜா இவளைத்தன் சொந்தப்பெண்ணைப்போல அருமையாய் வளர்த்துவருகிறார்.

நாரதர்:—மநுஷ்யாள் ம்ருகத்தின் வயிற்றில் ஜனிப்பதுண்டா? என்ன ஆச்சரியம்!

(சிறிதுநேரம் கண்ணை மூடித்தியானிக்கிறார்)

சித்திராங்கி:—(மெதுவாய்) என்னடி வள்ளி, மகாருஷி தூங்குகிறாரா என்ன?

வள்ளி.—என்னவோ யோசிக்கிறார் போலிருக்கிறதடி. சற்றுப்பேசாதிரு.

**நாரதர்:**— (கண்ணை விழித்து). ஆகா! என்ன ஆச்சரியம்! பரமரகஸ்யம்! இன்றையதினம் மஹோத்தமமான தினம். (வள்ளியை நோக்கி யெழுந்து அஞ்சலிபண்ணி) லோகமாதாவே! நான் செய்த பூஜாபலம் ஸபலமான திநம் இன்றே. தங்களைப்பார்க்க நான் அளவற்ற புண்ணியஞ்செய்திருக்கவேண்டும். தாங்கள் சாதாரணமான வேடராஜ புத்திரி இல்லை. சாக்ஷாத் ஜகதீச்வரனான சுப்பிரமணிய மூர்த்தியினுடைய தேவியென்பதைத்தாங்களறியவில்லைபோலத்தோற்றுகிறது. இந்த நிர்மூடர்களாகிய வேடர்கள், தேவியினுடைய மகிமையறியாது தினைப்புனத்தில் காவல் காக்க நியமித்திருக்கிறார்கள்.

"நாட்டிவெளி துற்ற கடவுண்மணி யைக்கொணர்ந்து
கூட்டிவிரு ளோட்டக் குருகுய்த்த வாறன்றோ
நீட்டுசுடர் வேற்குமரன் றேவியாந் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே." (18)

கௌஸ்துபத்தின் பிரகாசத்தைக்காகமோ அறியும்? கர்ப்பூரத்தின் பரிமளத்தைக்கார்த்தபமோ காணும்?

**வள்ளி:**—சுவாமி! நீங்கள் சொல்லுகிற விஷயம் எனக்கொன்றுந்தெரியவில்லை. நானோ கல்யாணமாகாதபெண். என்னை யாருக்கோ தேவியென்கிறீர். எங்களைச்சேர்ந்தவேடர்களை நிந்திக்கிறீர்—

**சித்திராங்கி:**—அடிவள்ளி! அவருக்குச்சித்தப்பிரமையென்று நினைக்கிறேன். அவர் வாய்க்குவந்ததைப்பிதற்றுகிறார் என்று தோன்றுகிறது.

**நாரதர்:**—ஏ! சுப்பிரமணிய மூர்த்தே! இதுவும் நின் திருவிளையாட்டில் ஒன்று. தாயே! மலையின் உயர்ச்சி மலை

யறியாது. அதுபோல் தங்கள் பெருமையைத்தாங்களறியீர். தாங்கள் முருகக்கடவுளுக்குப் பாரியையாகப் போகிறீர். இது நிச்சயம். சீக்கிரத்தில் தெரியும்.

(கேட்ட வள்ளியும் சித்திராங்கியும் பெருநகை செய்கிறார்கள்.)

வள்ளி:—ஐயா! நீர் என்னவோ மகாருஷியென்றீர். திரிலோகசஞ்சாரி யென்றீர். நாரதர் என்றீர். பகவானையும் ஸ்தோத்திரம் செய்து கொண்டுவந்தீர். அதனால் உம்மிடத்தில் மிகவும் மதிப்புக்கொண்டேன். நீர் இப்பொழுது உண்மையான மகாருஷியானால் என் மனக்கருத்து உமக்குத்தெரியாதிராது. நான் எந்த மனுஷ்யனையும் மணம் புரிவதில்லையென்று உறுதியாயிருக்கிறேன்.

நாரதர்:—சத்தியம்தாயே! நீங்கள் கடவுளை மணம்புரியப் போகிறபோழ்து மானுடர்களை நினைப்பீர்களா?

வள்ளி:—நல்லது, தெய்வம் மானுடமகளை மணக்குமோ?

நாரதர்:—தாயே! தாங்களுந் தெய்வமே. தெய்வப்பிறப்பென்பதைத் தாங்களறியவில்லை. மான் வயிற்றில் மானுடர் பிறப்பரோ?

வள்ளி:—நான் ஒருவரையுமே விவாகஞ் செய்வதில்லை யென்று உறுதியாயிருந்தால்—

நாரதர்:—குமாரக்கடவுள் வலிய வந்து மணந்து போகிறார்.—தாயே! அடியேன் செய்யும் விண்ணப்பத்தைச் சற்றுச் செவி சாய்த்துக் கேட்டருளவேண்டும். தாங்கள் இவ்விடத்தில் அவதாரஞ் செய்தது ஒரு தேவ ரகஸ்யம். நான் சொல்வதை உண்மையென்று நம்புங்கள். தாங்கள் குமாரசுவாமியின் பாரியை யாகிறது நிச்சயம். நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஆகையால் இவ்

விடத்தில் புனங்காவல் என்னும் வியாஜத்தால் காலதாமதஞ் செய்யாமல் ஸ்ரீ தணிகாசலத்திற்கு என்னோடு வருவீர்களாக. பரப்பிரம்ம மூர்த்தியாகிய ஸ்ரீ தணிகாசலேசர் முன் ஓரிடத்துச் சேமித்துவைத்த பழம் பொருளைக் காணப் பெற்றவர் போல் மனமகிழ்ந்து தங்களை உடனே அங்கீகரித்துக் கொள்வார். சிறிதும் தாமதியாது என்னோடு வாருங்கள். அரைக்ஷணத்தில் அங்குப் போய்ச் சேர்வோம்.

சித்திராங்கி:— கேட்டாயா அடி வள்ளி! இவர் முதலில் கல்யாணம் என்றார்; பிறகு கூட வா என்றார். இந்தக் கிழவர் பேச்சை யொன்றும் நம்பாதே. இதில் வஞ்சகம் ஏதோ இருக்கிறது. இராவண சந்நியாசி போலிருக்கிறது. அடா!— ஓ கிழவரே! வழியே போகிற உமக்கு இங்கே என்ன வேலை? நாங்களோ சிறு பெண்கள். எங்களிடத்தில் உமக்கு என்ன பேச்சு? வேண்டுமானால் நம்பிராஜாவிடத்தில் போய்ப் பேசும். அவர் தக்க கூலி கொடுத்து அனுப்புவார்.

நாரதர்:—அம்மா! உனக்கு வல்லீ தேவியின் பெருமை தெரியாது. இவரது இலாவண்யமும், தேக காந்தியும், கமலாசனியாகிய ஸ்ரீ லக்ஷ்மீ தேவிக்கும் இல்லை. நான் பதினொன்கு லோகங்களிலும் சிறிதும் தடையின்றிச் சஞ்சாரஞ் செய்து வருபவன். வல்லீ தேவியைப் போன்ற சௌந்தரிய மாதை நான் எங்குங் கண்டதில்லை. அவருக்குக் கணவர் ஸ்ரீ தணிகாசலேசரே. முருகர் முப்போதும் அணியும் நீல மலர் போன்ற கண்களையும், ஏறி நடாத்தும் மயில் போலுஞ் சாயலையும், அவர் சேவலின் சிகையினை நிகர்த்த அதரத்தையும், திருக்கோ

வல் கொண்டருளிய குன்றங்கள் மானும் ஸ்தண பாரங்களையும் பெற்றிருத்தலே வல்லீதேவி குமாரக்கடவுளின் தேவி யென்பதை விளக்குமே.

"அன்னை யாகியிங் கிருப்பவர் பேரழகனைத்து
புன்னி யான்புனைந் துரைக்கினு முலவுமோ வுலவா
வென்னை யாளுடை யறுமுகன் றுணையியா யிருப்ப"
நன்னர் மாதவம் புரிந்தவர் அறிதிநீ நங்காய். (19)

சித்திராங்கி:—ஐயா! கிழச் சந்நியாசியரே! போதும் போதும் நீர் வள்ளியம்மையைப்பற்றிச் சோசியஞ் சொன்னது. உம்மை யாராயினும் சோசியம் சொல்லக் கேட்கின்றனர்களா? நீர் வாயில் சொல்லுவதைப் பார்த்தால் உம்மைப்பற்றிச் சந்தேகமுண்டாகிறது. அப்படிச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? எங்கள் குலம் மாசற்ற குலமாயிற்றே. சந்திரனுக்கு மறுவுண்டு; எங்கள் சாதி மறுவற்ற சாதி. குறிஞ்சி நில வேந்தர் கொம்பு வேறெந்தச் சாதியாருக்குங் கிடைக்குமோ?

" ஒருகுலத்திற் பெண்கள்கொடோ மொருகுலத்திற் கொள்ளோ
முறவுபிடித் தாலும்விடோங் குறவர்குலம் நாங்கள் "
திருவுடைய மன்னரையுந் திரணமென மதிப்போம்
சிந்தைகெட் டடாதமொழி சிலபிதற்று மூடவேயே! (20)

நாரதர்:—உங்கள் குல தெய்வத்திற்குத்தானே தரப்போகிறீர்கள்.

சித்திராங்கி:—எங்கள் குலமும் குருகுலமோ? இடையன் வீட்டிலும் வலைஞன் வீட்டிலும் கொண்டும் கொடுத்தும் வடுப்பட்ட குலமோ எங்கள் குலம்.

நாரதர்:—சாதிக்குக் கூடக்குல முண்டோ? நான் சொன்ன சோசியஞ் சீக்கிரம் பலிக்கப் போகிறது. நீயும் பார்க்கப் போகிறாய். வல்லியை மணக்கத் தக்கவர் எமது குமாரக்கடவுளே. வல்லீ தேவியே அவரை அணையத் தக்கவர். ஆயிரத்தெட்டு மாற்றுடைய ஆணிப் பொன்னைச் சேரத்தக்க மாசற்ற மணியை ஈயத்திற் பதிக்க லாமோ?

சித்திராங்கி:—ஓ கிழவரே! உமக்குத் தாடியும் மீசையும் வெளுத்திருக்கிறதே யென்று பார்த்தேன். உம்முடைய மனமு மிகக் கறுத்திருக்கிறது. மான் கனியாகிய எங்கள் வள்ளிக்கு வடுவுண்டாகச் சோசியஞ் சொன்னீரே!

நாரதர்:—மாங்கனி உண்டாகிறதற்கு முன்னமேயே வடுவுண்டு. நான் உண்டாக்க வேண்டியதில்லை.

வள்ளி:—அடி சித்திராங்கி! அந்தக்கிழவரிடத்தில் நமக்கென்னடி பேச்சு?—சுவாமி! நீர் வழியே போகிறவர் இங்குவந்து எங்களோடு வாதாடுவானேன்? உம்முடைய சோசியம் பலிக்கிறதோ என்னுடைய மனோதைரியம் செலிக்கிறதோ அது பிறகு தெரியும். இப்பொழுது வீண்பேச்சில் பயனில்லை. இன்னுஞ்சிறிதுபோழ்திற்குள் என்னுடைய பிதாவும் ஜ்யேஷ்டர்களும் வேடர் சேனைசூழ இங்கு வருவார்கள். எங்களோடு வாதாடுஞ்சங்கதி வெளிப்பட்டால் உம்மைக்கண்டதுண்டமாகக்கரையாடிப்போடுவார்கள். சீக்கிரம் இவ்வி

டம் விட்டுப்போய்விடும். சந்நியாசி என்று பார்க்க மாட்டார்கள். உமக்கு உண்மை சொன்னேன்.

நாரதர்:—தாயே! இந்தப்பாமரவேடர்கள் என்னை யொன்றுஞ்செய்ய வலியில்லாதவர்கள். பெரு நெருப்பைப் பதங்கமென் செய்யும்?—தாங்கள் குமாரக்கடவுளை மணஞ்செய்வதை நானே பிரத்தியக்ஷமாகப்பார்க்கப் போகிறேன். நீங்கள் என்னோடு வரமாட்டேனென்கிறமையால் அவரே இங்குவந்து சேருவார். நானே நடு நின்று உங்களைக்கூட்டுகிறேன். அப்பொழுது கிழ நாரதர் பேச்சு உண்மையென்று வெளிப்படும்.

வள்ளி:—அடி சித்திராங்கி இந்தக்கிழவர் பெருத்த சண்டியாயிருக்கிறார். நாம் போவோம் வா. புஷ்பங்களெல்லாம் சீக்கிரந் தொடுக்காவிட்டால் அநியாயமாய் வாடிப்போம். அதோ தெரிகிற மாதவிப்பந்தரில் போய் உட்கார்ந்து கொண்டு தொடுப்போம். மலர்களை எடுத்துக்கொள். சந்நியாசியாரே போய் வருகிறோம். நீர்வந்தவழியே போம்.

(வள்ளி, சித்திராங்கி, இருவரும் போகிறார்கள்)

நாரதர்:—நாம் ஸ்ரீதணிகாசலம் போகிறவழியில் இந்த மலையிற்றங்கியது நல்லதாயிற்று. குமாரக்கடவுளுக்குச் சொல்ல நல்ல விசேஷசமாசாரம் கிடைத்தது. இனி க்ஷணமுந்தாமதியாது அவரிடத்திற்போய்ச் சொல்லுவோம். சீக்கிரத்தில் குமாரசுவாமி வல்லீ சமேதராயிருப்பதைக் கண்ணாரக் கண்டு பேரானந்தங் கொள்ளவேண்டும். ஏ! மன்மதா! நீ நமக்கு இந்தச்சமயத்தில் துணைசெய்யவேண்டும். நீ உன் அத்தைமார்களைச்சிவபெருமான் சிரசிலும் வாமத்திலும் சேர்த்தது போல,

உன் தங்கைகளையும் குமாரக்கடவுள் இருபார்சத்திலும் இருத்த முயற்சி செய்—வழியே போகிறவன் வம்புக்குப்போய் வசவுபெற்றேன். ஏ! சரவணோத்பவா! இதுவு முன் திருவிளையாட்டோ? நல்லது நாம் சீக்கிரம் தணிகாசலம் போவோம்.

சரவணோத்பவ ஷண்முக சுந்தர
சரணாரவிந்தம்—பஜேஹம். (21)

(பாடிக்கொண்டே போகிறார்.)

முதலங்கம் முற்றிற்று.

# அங்கம் உ.

## முதற் களம்.

இடம்: பூஞ்சோலை.

காலம்: காலை.

பாத்திரம்: வள்ளியம்மை.

வள்ளி:—மலர் பறிக்கச் சென்ற சித்திராங்கி எங்குப் போயிருப்பாள்? இந்தச் சோலைக்குத்தானே போவதாகக் கூறினள். இவ்விடத்தில் அவளைக் காணேன். அவளை எங்கென்று தேடுவது?—ஆகா! இந்த நந்தவனத்தின் அழகே அழகு! விந்தை விந்தையாய் மலர்கள் சரஞ்சரமாகத் தொங்குகின்றன. இதனை மன்மதன் பாசறையென்பதற்குச் சந்தேகமே யில்லை. விதம் விதமான புஷ்பங்களால் இயற்கைமாது மாலைகள் கட்டி அலங்கரித்த மரகத மண்டப மென்றே சொல்லலாம். மலர்களிற் சேரும் வண்டுகளின் ரீங்கார வொலியும், கூட்டமாகக் குலவும் சிறு பறவைகளின் கிலுகிலுப்பொலியும், கிளி நாகணவாய் முதலியவற்றின் கீச்சொலியும் குயிலின் பஞ்சமஸ்வரம் போன்ற நாதத் தொனியும், பளிக்குப் பாறையிற் குதித்துச் சலசல வென்றோடும் அருவியின் ஆரவாரமும், கேட்பவர்க்குப் பேரானந்த முண்டாக்கி அவர்களைப் பரவசஞ் செய்யும்.—ஆகா! நேற்றிரா கனவிற் கண்ட சோலை போல் விளங்குகின்றதே! அதோ நிற்கும் சந்தன மரமும், அதன் மேற் படர்ந்த மாதவிக் கொடியுங் கனவிற் கண்டவாறு விளங்குகின்

றன. கனு பொய்யென்பார்களன்றோ! என் விஷயத்து மெய்யானது என்ன விநோதம்!—என்றாலும் கனுப் பொய் தான். நேற்றிரவு சோலை நடுவிற் கனவிற்றோன்றிய சுந்தரனைக் காணப் பெறுகிலேன். அவனையின்றி இரமணீயமான இச்சோலையும் தன் அழகிற் குறைந்தது. ஓ சோலையே! அவனை நீ யெங்கொளித்து வைத்திருக்கிறாய்? அவனது பரந்த மார்பும் திரண்ட தோள்களும் பங்கஜ வதனமும் ஏறி யிறங்கும விற்புருவமும மந்தஹாஸமும், சிங்க வேற்றை யொத்த நடையும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டனவே! யானிங்கிருக்கஎன்னெஞ்சம் யாண்டேகியதோ? என்னை யானையுண்ட விளங்கனியாக்கித் தந்திரமாக நெஞ்சங் கவர்ந்த சுந்தர புருடனை நான் கனவிற் காணும் நாளு முண்டோ? அந்தோ! நேற்றிரவு என் கண்கள் செய்த சதியினை யென்னென்றுரைப்பேன். அந்த மகா புருஷனுடைய திவ்யலாவண்யத்தைக்கண்டு களிக்கும் சமயத்தில் எனது கண்கள் திடீரென விழித்துப் பகையாயினவே! ஓ! நெஞ்சமே! நீ நேற்றிருந்த நிலை யென்ன? இன்றிருக்கும் நிலை யென்ன? சித்திராங்கியிடம் நீ யொருவரையும் மணஞ் செய்து கொள்ளப் போவதில்லை யென்ற உறுதி யெங்குப் போயிற்று? நாரதருஷி முன்னிலையிற் சொன்ன சபதம் எப்படியாயிற்று? சித்திராங்கியிடங் கண்ட கனவைச் சொன்னால், கனவிற் கண்ட ஒருவன் மேற் காமுற்றதாக என்னை நகைத்துப் பரிகசிப்பாளே! ஏ! தெய்வமே! இதுவும் நின் சோதனையோ? நேற்று நான் ருஷி கூறியதை மறுத்துப் பேசி யவமதித்த தோஷத்திற்காக நீ ஏழையா

யை யென்னைச் சோதிக்கலாமோ? முருகக் கடவுளே! நினக்குத் தினமும் மாலை சாத்தியதற்கு இதுவோ கைம்மாறு?—அந்த சௌந்தரிய குமாரனுடைய ரூபத்தை என் நெஞ்சிலிருந்து நீக்குவதே தகுதி. 'கிட்டாதாயின் வெட்டெனமற!' வன்றோ? ஆயினும் நெஞ்சமென்னிடத்திருந்தன்றோ நீக்குவது? நெஞ்சமே யவன்பாற் சென்றிருக்க யானென் செய்வேன்?—'காதலென்பதென்ன? பூதமோ? பேயோ? மனோதிடங் கொண்டு துரத்தினால் நாய் போலோடு' மென்று நினைத்த என்னைப்பேயாட்டங் காண்கின்றதே அது!

மருக்கிளரு மரைமுகத்தின் வயங்கா நிற்கும்
மந்தநகை நிலவொளியா லெனது நெஞ்சத்
திருக்குமுதம் வாய்திறப்பக் களிமீக் கூரத்
திகழிரவிற் கனவிடையே தோன்றுஞ் செம்மல்
உருக்கிய வாடகமேனி வொளிகாண் பேனோ?
வுயர்சிகரத் திண்புயத்தை மருவுவேனோ?
உருக்கிளரும் வைவேலொன் றேந்திச் சூர
னுரனழித்தாட் கொண்டருளுந் தேவ தேவே! (22)

முருகக்கடவுளே! நின்னடித் தொண்டு செய்யும் எனக்கு அருள் செய்க.—நெஞ்சமே! முருகனுக்கு மாலைகட்ட மலர் கொய்ய வருவாயாக! அவனருளே துணை.

(சிறிது தூரஞ் சென்று பாடிக்கொண்டே மலர் கொய்கின்றாள்.)

கண்ணுக் கினிய கடம்புகா ணீரோம
தண்ணல் முருகற் கணியமலர் தாரீரோ! (23)

காஞரு முல்லைக் கவின்கொடிகா னும்மரிய
தேஞர் மலரிணையெஞ் சேயோற்குத் தாரீரோ! (24)

சோறு சுமந்து துதையு மடற்கைதாய்
ஆறுமுக நாதற் கணியமலர் தாரீரோ! (25)

பண்டு விளையாடப் பாவை யெமக்களிக்கும்
வண்டார் குரவங்காள் மாலோன் மருகற்குத்
தண்டா ரணியத் தகுமலர்கள் தாரீரோ! (26)

காவகத்து வாழுங் கடிமல் லிகைக்கொடிகாள்
சேவற் கொடிபடைத்த செவ்வே ளமதிறைவன்
தேவசே ஞபதிக்குத் தெய்வமலர் தாரீரோ! (27)

முத்துக்குமாரன்:—(நந்தவனத்தின் மற்ருெருபுற நின்று வருகிருன்.) இந்தச்சோலைபோன்ற நந்தவனத்தை நாம் எங்குங்கண்டிலேம். இரவிக்குப்பயந்த இருட்கூட்டங்குடிகொண்டாற்போன்ற இது குபேரனுடைய சைத்திரரதமோ? மந்தமாருதம மகரந்தங்களை வாரி வீசி விளையாடுகின்ற இச்சோலை, இந்திரனுடைய கற்பகாடவி விண்ணின்றிழிந்திவண்மேவியதுபோலும் பசிய இலைகளின் நடுவே வெண்மலர் பூத்து, நிர்மலமான வானத்தில் தாரகாகணங்கள் மின்னுவதுபோலவும் நீலவிதானத்தில் நித்திலம்பதித்தாற்போலவும் விளங்குகின்ற காட்சியைக்காணக்கண்களாயிரம் வேண்டுமே!—ஆசா! அதோ தெரிகிற பூங்கொம்பு மின்னற்கொடி போல் விளங்குகிறதே! என்ன! இதுதானே கற்பகஞ்சாருங்காமவல்லிக்கொடி? மேலும் இக்கொடியில் மலர்ந்த சில தாமரைகளும், இரண்டு பங்கய முகைகளும், முல்லையரும்புகளும், நீலோற்பலம், குமுதம், காந்தள் முதலிய மலர்களும் விளங்குகின்றனவே! ஒரு கொடி

பல்வேறு விதமலர்கள்பெற்று அசைதல் என்னவிநோதம்?—ஆகா! பூங்கொம்பில்லை, அற்புத சௌந்தரியம் பெற்ற பொற்புடைய பெண்ணோ. ஆ! இந்தச் சுந்தரிவன தேவதையோ? இந்திரலோக மாதோ? இந்தலோக மங்கையோ? எந்தலோக நங்கையோ?

இந்த மங்கை யாரோ—வெகு
விந்தை யுடன் மலர்ந்த நந்த வனத்தில்வந்த—இந்த

சந்த முகத்தெதிரிலா லிந்து வெளுத்தேயோட
அந்த மரைசலந்த லந்து தவத்தை நாட
நந்த மனமதனன் தொந்தரை யிலுல்வாடத்
தந்திர வித்தைகற்ற சுந்தரி யாகிய—இந்த (28)

நோண்டை யழகைக்கண்ட கொண்டல் கணீர்பொழிய
மண்டும் விழிவலத்தாற் சண்டன் விழிமொழியக்
கண்ட வென்மேல்மதனன் விண்ட மலர்சொரிய
வெண்டரு மாயை கண்டவ ளாகிய—இந்த (29)

தேவரம்பையோ? நாகமங்கையோ? ஒப்புயர்வில்லாத கட்டழகியாகிய இவள் வீற்றிருக்கத் தவஞ் செய்த உலகம் எதுவோ? பதினொன்குலகத்தில் இவளைப் பெறப் பாக்கியம் புரிந்த உலகம் யாதோ?—ஆகா! என்ன வீண் யோசனை செய்தோம்! கண்ணிணைகள் நம்மை 'வா வா' என்றழைப்பனபோல் இமைக்கின்றன. அனிச்சம்பூப்பட்டாலும் கன்றிப்போகும் பாத பங்கஜங் களைப் பூமாதேவி சூடியிருக்கின்றனள். அணிந்திருக்கும் மலர் மாலைகளோ நம் மனத்தைப்போல் வாட்டத்தை யடைகின்றன. இவள் நிலவுலக நங்கையர் சிரோமணி யென்பதற்குச் சந்தேகம் சிறிதுமில்லை உலகத்தி லுள்ள மாநுடரை மோகாந்தகாரத்தில் அமிழ்த்தும்

பொருட்டு மின்னலாகியபொருளால் மன்மதன் செய்த பாவை உயிர் பெற்று உலாவுவதுபோல் விளங்கும் இப் பெண்மணியின் பேரழகை என்னென்று சொல்வோம்? —சுழற்காற்றிலகப்பட்ட துரும்பைப்போலுழலும் நெஞ்சமே! கவலைப்படாதே. நந்தம் மங்கையினுடைய கண்களில் தேவாமிருதமும் ஆலகாலவிடமும் குடிகொண்டிருக்கின்றன. அந்த நயனங்கள் அமிருதமும் விடமுந் தோன்றிய பாற்கடல்போல் விளங்குகின்றனவே. வாள் போலவும் வேல் போலவும் கூர்மை வாய்ந்த கண்களில் கருணைப்பிரவாகம் அலைவீசுகின்றது. தெய்வச்செயலை யாருணர்வார்? எங்கேயோ விருந்த நம்மை இங்குக் கொண்டுவந்து சேர்த்ததுமன்றி இந்தப்பெண்மணியையுந் தனியே தோழியரினின்றும் பிரித்து நமக்கு நேத்திரானந்தம் தந்த கடவுளின் பேரருளை யார் அறிவார்?— இனி நாம் வருந்திக்கொண்டு சும்மா விருத்தலால் பயனில்லை. அந்தக்கண்ணுக்கினிய கட்டழகியை நெருங்கிவணங்கி இதமானமொழிகூறி யாரென்றறிந்துகொள்வோம். ஆகா! தேடிப்போன மருந்து காலிலகப்பட்டதுபோல அவளே இங்கு நாம் நிற்குமிடம் நோக்கி வருகின்றாள். நாம் சற்று விலகி மறைந்து நின்று அவள் என்ன செய்யப்போகிறாள் என்பதை அறிவோம்

(முத்துக்குமாரன் விலகி மறைந்து நிற்க வள்ளி வருகிறாள்)

வள்ளி:—என்ன ஆச்சரியம்! கனவிற்கண்ட உருவத்தை நனவிலுங்கண்டேனே! கனவும் உண்மைதானோ? அந்த உத்தமன் இங்குத்தானே நின்றனன்? அப்படியிருக்க இப்பொழுது காணப்படாத காரணமென்னையோ? அந்த வீரபுருஷன் விளையாடுகின்றனனோ? வனதேவதைகள் திடீரென மறைத்தார்களோ? அன்றி மருண்

டவன் கண்களுக்கு இருண்டவெல்லாம் பேய் என்பார்கள். என்கண்களுக்குக்கண்ட வெல்லாம் காதலனோ? ஆகவே, நான் கண்டதும் உருவெளித்தோற்றமோ? அவன் நின்ற அடிச்சுவடும் இதோ தெரிகின்றனவே! நான் கண்டது உருவெளித்தோற்றம் என்று சந்தேகப்பட இடமில்லையே. ஏ! சோலையே! அந்தச்சுந்தரபுருஷனை எனக்கு மீட்டுந்தருவாயோ?

வேதப் பொருள்போல மேவா தொளித்தாடுங்
காதலனை யென்றனிரு கண்களிப்ப வாராயோ? (30)

நேயமுடன் றோன்றி நிமிடத்தி னுண்மறைந்து
மாயஞ்செய் வோயென் மனங்களிப்ப வாராயோ? (31)

காந்தனென நின்னைக் கனவிடையே கொண்டேனல்
ஏந்தா லருள்செய்தி யான்களிப்ப வாராயோ? (32)

(முத்துக்குமாரன் வருகிறான்.)

முத்துக்குமாரன்:—(தனக்குள்) என்ன அற்புத தேவகானம் (வெளிப்படையாய்) ஓ! பெண்மணியே! திவ்யசௌந்தரியம்பெற்ற நீ யார்? உன்னை மகளாகப் பெறப்பாக்கியம் செய்தவர் யாவரோ? அவர்கள் செய்த தவம் யாதோ?— நீ இந்தமலர்ச்சோலையில் தனியாய் யோகங் கருதி நிற்கின்றனையோ? சற்று நின் குமுதவாய் திறந்து மொழியமிர்தம் தந்தருளவேண்டும்.—

(வள்ளி தலைகுனிந்து நாணி நிற்கின்றனள்.)

ஓ! வண்டுகளே! நீங்கள் இந்த நங்கையின் கூந்தலிலுள்ள மலர்களில் ஏறுகின்றீர்களே! அளியென்று பெயர் படைத்த உங்களுக்குக்கருணை சிறிதுமில்லையோ? அளகபாரத்தாலும் நகில பாரத்தாலும் வருந்தித்துவளும் கொடியிடை உங்கள் பாரத்தையும் பொறுக்குமோ?

தாங்காது இடையொடிந்தால் பெண்பாவம் உங்களைப் பற்றும். பார்த்துநின்ற என்னையும் பற்றும். போங்கள்.

(தன் கைகளால் வண்டுகளையோட்டுகிறவன்போல் அவள் தோளைத்தீண்டுகிறான்.)

ஏ! என்னுளங்கவர்ந்த கண்மணியே! உன்னுடைய கூந்தலின் கருமைக்குடைந்த வண்டுகள் இரங்கியோடுதலைக் கண்டனையோ? அதோ நின்னைப்போல் துவண்டு நிற்கும் மாதவிக்கொடியினைப்பார். அசோகமரத்தையடைந்து மலர்ந்து விளங்குகின்றது. அதனடியில் உனது சாயலைப்பல்லாயிரங்கண்கள்கொண்டு பார்ப்பதுபோல் ஒரு மயில் தனது நீல ஆலவட்டம்போன்ற தோகை விரித்தாடுவதைப்பார். அதோ! உனது பேரழகைக்கண்டு மயங்கிய என்னைப்போல், குயிலுங்கிளியும் நின்மொழி கேட்ப விரும்பி நிற்பதைப்பார். இந்த மாமரம் நின் மேனிபோற்றளிர்த்து நின்ற விந்தையை நின் கண்ணெடுத்துக்காண்.

காருறக்குங் குழலாய்நின் கைம்மலர்போ லணியிலங்கச்
சீரிறக்குஞ் செழுங்காந்தள் திகழமலர்ந் தனபாராய்
வாரிறக்குந் தனத்தாய்நின் வணங்குறு நகிலம்போல்
வரிறக்கு மாதுளையி னினியகனி விளங்குவபார். (33)

(வள்ளி தனது கண்களைக் கைகளால் மூடி நிற்கிறாள்.)

உன்னுடைய வார்த்தையைக்கேட்டு மகிழ்ந்திளைத்த எனக்கு உனது முகத்தையும் மறைத்துக்கொண்டனையே, இதுவோ நீகாட்டிய கருணை? வண்டுகள் மலரையடைவது உலகவியல்பு. அதுநிற்க உன் கைக்காந்தள் கண்களாகிய வண்டுகளையடைந்தது என்ன விந்தை? ஆகா! மன்மதவாதைப்படும் எனக்குச்செய்த உதவியிதுவோ?

அவனுடைய அம்பாகிய நீலோத்பலம்போலவும், கொடியாகிய கயல்போலவும் முரசமாகிய வாரிதிபோலவும் வில்லின் நாணாகிய வண்டினங்கள் போலவும் விளங்குகின்ற நயனங்களை என் பகையாகக்கருதி மறைத்துக் கொண்டனையோ?—ஆ! என் கண்ணினுமினிய பெண்மணியே! நீ வாய்திறந் தொருவார்த்தை சொன்னால் வாய்முத்தஞ்சிந்துமோ?

(வள்ளி தன் கைகளைக் கண்ணினின்றும் நீக்கி மந்தநகை செய்கிறாள்.)

எளியேன் படுந்துயரைக்கண்டு நீ நகை செய்தல் உன் பெருந்தன்மைக்கழகோ? எல்லா வழகும் பொருந்தப் படைத்த கடவுள் உனக்குக் கல்லினுங்கடிய வலிய நெஞ்சையேன் தந்தனரோ?

வள்ளி:—என்னைக்கண்டு பலவாறு புகழும் ஐயனே! உனது திருப்பெயர் யாது? நீ யார்? இங்கே வந்தது என்?

முத்துக்குமாரன்:—என் கண்ணே! நான் தணிகைமலை மன்னன். வேடராஜர்களுக்கு ராஜன். முத்துக்குமாரனென்னும் பெயருடையேன். வேட்டையாட வேட்கைகொண்டு இம்மலைக்கு வந்தேன். வாயுவேகமாயோடிவந்த ஒரு மானைத்துரத்தி வந்து என் பரிவாரங்களினின்றும் பிரிந்தேன். பிரிந்ததும் என் பாக்கியந்தான். வெயிலாற்களைத்துப்போனமையால் மந்தமாருதம் வீசும் இந்த நந்தவனத்திற்புகுந்தேன். நான் செய்த புண்ணிய வசத்தால் உன்னைக்கண்டேன். அளவற்ற காதல்கொண்டேன். பெண்கள் நாயகமே! இதுவே எனது விருத்தாந்தம். நீ இன்னாளென்பதைச்சற்றே தயை செய்து வாய் மலர்ந்தருளவேண்டும்.

வள்ளி:—ஐய! யான் இந்த மலை வேடராஜனாகிய நம்பிராஜன் புதல்வி. என்னை வள்ளியென்றழைப்பார்கள். நான் பிறந்தது முதல் இந்த மலையையும் வள்ளிமலையென்று சொல்வார்கள். எனது பிதா தினைப்புனக்காவலுக்காக என்னை நியமித்தனர். இங்கே என்தோழியோடு அதோ இருக்கிற தினைப்புனத்தைக்காவல்செய்து வருகிறேன். மலர் பறிக்க வந்த என் தோழி சித்திராங்கியைத்தேடி வந்தேன் இங்கே—(தலை குனிகின்றாள்.)

முத்துக்குமாரன்:—என் அன்புடைய வள்ளி! இங்கே எளியேனைக்கண்டனையோ?

வள்ளி:—ஐய! நேற்று இராத்திரி ஒரு கனாக்கண்டேன். அதில் ஒரு சுந்தரபுருஷன் என்னருகில் நின்றனன். என் மனத்தை என்னிடமில்லாது அபகரித்தனன். நான் தூங்கும்பொழுது என் நெஞ்சையபகரித்த கள்வனை நனவிலுங் காண்பேனோ என்று வருந்தினேன்.

முத்துக்குமாரன்:—அழகுடையணங்கே! கனாவிற்கண்டபுருடன் எத்தன்மையுடையவன்? யாரைப்போன்றவன்? அந்தப்பாக்கியவான் எவனோ?

வள்ளி:—அவனை வருணிக்க என்னால் முடியாது. அவனை இந்தச்சோலையிற்கண்டேன். அடங்கா மகிழ்ச்சிகொண்டேன், அவன் யாரெனில் என்னெதிரில் நிற்கும் மகாபுருஷன்தான்.

முத்துக்குமாரன்:—ஆகா! நானோ அந்தப் பாக்கியவான்? என்னைக்குறித்தோ நீ ‘வாராயோ’ என்று இரங்கிப்பாடியதும்? நான் சற்று விலகியிருந்தமையால் நீ பேசிய

தனிமொழியை நன்றாய்க்கேட்டிலேன். என் கண்ணே! இனி நான் உன்னைவிட்டுப்பிரியேன்.

தாவிமரை விளையாடுக் தணிகையின்பூப் போதுமலர்
காவியெனக் கண்படைத்துக் காணுநர்தங் கருத்தழிக்குந்
தூவியருங் கிள்ளைநிகர் தூமொழிநின் துணையின்றி
யாவியுய்ந்து ளேனுதலரியவெவற் றினுமரிதே. (34)

(ஆலிங்கனஞ் செய்கிறான்.)

என்னுருவைக்கனாவிற்காட்டி உன் மனத்தில் அன்பினை மூட்டிய கடவுளுக்குப் பல்லாயிரங்கோடி வந்தனந் தந்தேன். என் அன்புடைய நாயகி! நீ இதுகாறும் நிற்கிறாயே! பஞ்சைமிதிக்கினும் பதைக்கும் நினது பாதம் இந்த வறுந்தரையினிற்கப் பொறுக்குமோ?—என் கண்ணுக்கினிய வள்ளி! அதோ தெரியும் அந்த சம்பங்கி லதாகிருகத்தை அடைவோம். அவ்விடத்தில் அந்தச் சக்கிரவாகப்பேடு தன் சேவலோடு கூடி மகிழ்தலைக்காண்பாய். அதோ அந்தப் பஞ்சவர்ணக்கிளியினைப் பார். உனது அதரத்தைக் கொவ்வைக்கனியெனமருண்டு அதனைச்சுவைக்க என்னைப்போல் ஏங்கிநிற்பதைக் காண். அழகோருருவெடுத்த அணங்கே! உன்னைத்தலைவியாகப் பெற்ற எனக்கென்ன குறை?

'மண்ணோருங் கலமெலாம் வலிதின் வவ்வினும்
விண்ணோருங் கலமெலாம் விதியி னெய்தினும்
பெண்ணோருங் கல' மினைப் பெறுதன் மாநுடர்க்
கென்னோருந் தகையதெ னின்ப வல்லியே! (35)

மங்கையர் திலகமே! இனி நீ நிற்பதைக்காண அரைக்கணமுஞ்சகியேன். தயை செய்துவா. அந்த லதாகிருகத்தை யடைவோம்.

(இருவருங் கைகோத்துப் போகிறார்கள்.)

## இரண்டாங் களம்.

இடம்: தினைப்புனம்.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: வள்ளி, சித்திராங்கி.

சித்திராங்கி:—என்னடி! வள்ளி! இன்றையதினம் நீ ஒருவிதமாயிருக்கிறாய்? கலந்து வார்த்தையுமாடாதிருக்கிறாய்? வழக்கம்போல் மாலையும் தொடுக்கவில்லை. மனத்தில் ஏதோ கவலை கொண்டவள் போல் காணப்படுகிறாய். உனது மேனியும் முகமும் சிறிது வாட்டமுற்றிருக்கின்றன. இன்னுஞ் சிறிது நேரத்தில் நம்பிராஜாவும் நங்கைமோகினியம்மையும் வருவார்களே. அவர்கள் உன்னிடத்திலுண்டான வேறுபாட்டிற்குக் காரணம் என்னவென்று என்னைக் கேட்டால் நான் என்ன சொல்லுவேன்.

வள்ளி:—என்ன! சித்திராங்கி! என் மனத்தில் ஒருவிதக் கவலையுமில்லை. என்ன வேறுபாடோ எனக்கே தெரியவில்லை. ஒன்றுமில்லாததற்கு வீண்கவலை யேன்கொள்கிறாய்?

சித்திராங்கி:—இல்லை! இல்லை! அகத்தினழகு முகத்திற்றெரியும். அடுத்த பொருளை யெடுத்துக்காட்டும் பளிங்குபோல் மனத்தின்கண் உண்டாகும் உணர்ச்சி வேறுபாட்டிற்குப்பொருந்த முகம் வேறுபட்டுக்காட்டும். இது நிச்சயம். தினம்போல் உன் முகம் இருக்கவில்லை. நீ யென்னவிதமாகத்தான் புன்னகை கொண்டிருந்தாலும் உன்னுள்ளக்கவலை முகத்தில்விளையாடுகிறது. பச்சொளி வீசும் மரகதத்தைக்கண்ணாடிகொண்டு மறைக்கவய

லுமோ? எனக்குச் சொல்லாமற்போனால் போ. மலிந்தால் கடைக்குவரும்.

வள்ளி:— அடி! என்மேற்கோபங்கொள்ளாதே. ஒருவேளை நேற்றிரவு எனக்குச் சரியான தூக்கம் இல்லாததினால் இன்று ஒருவாறு காணப்படுகிறேனோ என்னவோ.

சித்திராங்கி:—பார்த்தாயா! ஏதோ இருக்கிறது. உனக்கு ஏன் சரியான தூக்கம் வரவில்லை?

வள்ளி.—போடி போ! ஒவ்வொன்றிற்கும் உனக்குக் காரணம் வேண்டும். சூரியன் ஏன் கிழக்கே உதிக்கவேண்டும் ஏன் மேற்கே உதிக்கக்கூடாது? காரணஞ் சொல் பார்ப்போம். என்னவோ நித்திரை வரவில்லையென்றால் காரணஞ் சொல்லென்கிறாய். அற்பத்தைப் பிரமாதமாகக்கொண்டாடுகிறாய். சிறு தவளைக்குப் பெருங்கோட்டை கட்டுகிறாய். கவலையில்லாத என் மனத்தில் கவலையை யுண்டாக்கிவிடுவாய் போலிருக்கிறது. போதும் போதும் இந்தப் பேச்சு.—அந்த அம்மானைகளை எடு. சிறிது நேரம் விளையாடுவோம்.

சித்திராங்கி:—எப்படியிருந்தாலும் நீ கவலைப்படாமல் இருந்தால் போதும். இன்று பதினாயிரம் விளையாடல்கள் விளையாடினோம். உனக்கு ஒன்றிலும் மனஞ் செல்லவில்லை. அம்மானை தான் எவ்வளவு நேரம் விளையாடப்போகிறாயோ பார்க்கிறேன்.

(சித்திராங்கி அம்மானைகளை எடுத்து எதிரில் வைக்க
(இருவரும் பாடிக்கொண்டே விளையாடுகிறார்கள்.)

வள்ளி:—

செய்யமரைக் கையிலெழுந் திசழ்பு த்தி ளியன்ற
சீரியவம் மனைக்கு நிகர் தேர்ந்துரைப்பாய் சகியே!

சித்திராங்கி:—

மையமருங் குழலாய் கேள், வாரிஜத்திற் றுஞ்சி
வானெறிசெல் லோதிமத்தை மானுமென்பேன்
[றோழீ! (36)

வள்ளி:—

ஒள்ளியவாண் மரகதத்தா லொளிர்ந்தெமது கைசநின்
றோடுமய்ய னைக்குவமை யோதிடுவாய் சகியே!

சித்திராங்கி:—

கள்ளமருங் குழலாய் கேள், கமலம்விடுத் தெழுந்த
காமர்பசுங் கிள்ளையெனக் கழறிடுவேன் றோழீ! (37)

வள்ளி:—

பானலினல் லொளிபரப்பிப் பாணியக னீலம்
பதித்தவெழி லம்பகைக்குப் படியுரைப்பாய் சகியே!

சித்திராங்கி:—

நானமருங் குழலாய் கேள், கஞ்சம் விடுத்தெழும்புங்
கரியசிறு குயிலினையே கடுக்குமென்பேன் றோழீ!
(38)

வள்ளி:—

ஒண்டொடியே! குயில்கிள்ளை யோதிமமென் கைவிட்
டுயர்வானி லகல்வதெவன் ஓதிடுவாய் சகியே!

சித்திராங்கி:—

கண்டெனுமின் மொழியுடையாய்! காதலன்பாற் காதல்
கழறவிடுத் தனைதூது காண்டியென்றன் றோழீ!
(39)

வள்ளி.—பார்த்தாயா! எங்கும் உன் குறும்புத்தனத்தைக் காட்டுகிறாய். வேண்டுமென்று பரிகாசம் செய்கிறாய். நல்லதிருக்கட்டும்.

சித்திராங்கி:—என்னவோ கற்பனையாகச் சொன்னாலும், உண்மையாகக் கொண்டு குற்றங் கண்டுபிடிக்கிறாய். சரிதான் குற்ற முள்ள நெஞ்சு குறு குறு என்னும்; உள்ளதைச் சொன்னால் கோபம் வரும். அது கிடக்கட்டும் விளையாடு.

வள்ளி:—என்ன! ஓயாமல் விளையாட்டு.

சித்திராங்கி:—இன்னும் ஒரேயொரு முறை யாடுவோம்.

வள்ளி:—நீ தான் பரிகாசஞ் செய்கிறாயே!

சித்திராங்கி:—இனிமேல் செய்யவில்லை ஆடு.

(இருவரும் முறையே பாடி அம்மானையாடுகிறார்கள்.)

வள்ளி:—

குழகனெழின் மூத்துக் குமாரனைப் பெற்ற
மழவிடையா ரென்றும் வயித்தியர்கா ணம்மானை.

சித்திராங்கி:—

மழவிடையா ரென்றும் வயித்தியரே யாயின்
அழகா ரரையுடல் ராவரோர வம்மானை.

வள்ளி:—

அநங்கற் குடைந்தோ ரரையுடல ரம்மானை. (40)

சித்திராங்கி:—வள்ளி! சங்கதி வெளிப்பட்டதே! நீயும் அநங்கற்குடைந்தனையோ? உடைந்து பாதியுடம்பாயினையோ?

வள்ளி:—போடி போ! நான் விளையாடமாட்டேன். நீ உன் தொழிலை விடமாட்டாய்,

(முத்துக்குமாரன் ஒரு புறம் நின்று வருகிறான்.)

சித்திராங்கி:—(மெதுவாய்) அடி வள்ளி அதோ ஒரு சுந்தர புருஷன் வருகிறானே. அவன் யாரடி? உனக்

குத் தெரியுமா. உன்னை நோக்கி மந்தகாசஞ் செய்த படி வருகிறானே. அவனை உனக்குத்தெரியுமென்று நினைக்கிறேன்.

வள்ளி:—(மௌனமாய்) அவன் யாரோ? எனக்கென்னமாய்த் தெரியும். சதா உன்னோடு கூடவே யிருக்கப்பட்ட எனக்கு மாத்திரம் அவனை எப்படித்தெரியும்.

முத்துக்குமாரன்:—பெண்மணிகளே! உங்கள் நோக்கினைப் போல் மருண்ட தன்மையோடு ஒரு மான் இந்த வழி யாய் வரக் கண்டீர்களோ?

விண்ணுலாவு திங்களோடு மேவுமானை மானுநங்
கண்ணனை மருண்டோர்நவ்வி கையில்வாங்கும் விற்கணை
நண்ணுறு தொரீஇயவாறு நாடினீர்சொல் நேயமாய்ப்
பண்ணிலாவு செய்யதீஞ்சொற் பாவையீர் பகர்கிரே. (41)

கலைமான் கூட்டத்தின் நீங்கி யென்னுடைய வெவ்விய வில்லினின்றோடும் கொடிய அம்புக்குத் தப்பி, நாற்புற மும் கட்டியவலையைத் தாவிக்குதித்து வாயுதேவன் வாக னம்போல் மனோவேகமும் பின்னிடக் கடுகி இப்புறம் ஓடி வந்த மானைக் கண்டீர்களோ? தயை செய்து வாய் மலர்ந்து அருளுங்கள். சிவபிரான் கையில் விளங்கும் மானும் எளிதில் என் கைப்படும் எனில், என்னினின்று தவறியோடிய இவ்வுயர்ந்த மானைப் பற்ற விரும்புகி றேன். மங்கைமீர்! இங்கு வந்ததோ அது? சற்று அன்புடன் உரைத்தருளுங்கள்.

சித்திராங்கி:—ஓ! வேடரே! நீர் பரம்பரையாய் வேட்டை யாடினவர் போல் காணப்படவில்லை. மான் தப்பியே

டினால் ஆள் புறத்தில் வந்து ஒளியுமோ? நீர் பேசிய மானுக்குக் கொம்புகளுண்டா, கால்கள் எத்தனை? நீர் கண்ணிவேட்டையாடுபவர்போற் காணப்படுகிறீர். எங்களைப்போன்ற பெண்களைக்கேட்டால் அவர்கள் யாது சொல்லுவார்கள்? உம்மைப்போன்ற வேடர்களைக்கேட்டால் மான் சென்ற வழி யுரைப்பார். அந்தவழியே போம்.

முத்துக்குமாரன்:—பெண்ணே! மானைத் துரத்தி அலைந்தவழி தப்பிய என்னையேன் வீணாக வருத்துகிறாய்? இரண்டு ஆனைகளை ஒரு சேலையால் மறைக்க முயற்சிக்கிறீர்களே. காட்டில் தனிப்பட்டு வந்த மானுக்கு யானோ அடையாளங்கூறவேண்டும். உங்களுக்குத்தெரியாதோ?

சித்திராங்கி:—(வள்ளியை நோக்கி) வள்ளி! இவர் என்னடி வல்லடி வழக்கராயிருக்கின்றார். மான் ஓடி யொளித்ததாம். நம்மை வழி கேட்கிறார். நமக்கு அது போன வழி தெரியுமாம். இங்கே எந்த மானையும் நான் காணவில்லை. நீ கண்டனையோ?—(வேடனை நோக்கி) ஐயா! இங்கு என் தலைவியாகிய இரண்டு கால் மான் ஒன்றையே நான் கண்டுள்ளேன். வேறு மானை யான் பார்க்கவில்லை. நீர் போய் வாரும். மானைத்துரத்தி வந்த நீர் இங்கு நெடுநேரம் நின்று எங்களோடு பேசிக்கொண்டிருந்தால் மானைப் பிடிப்பதெப்படி? சீக்கிரம் போம்.

முத்துக்குமாரன்:—பெண்மணிகளே! நான் இந்த மலையில் வழி தெரியாது தடுமாறுகிறேன். கொஞ்சம் தயை செய்து வழிகாட்டியருளுங்கள். சமீபத்தில் யாதேனும் சிற்றூர் இருக்கிறதா? நீங்கள் இவ்விடத்தில் என்ன செய்கிறீர்கள்?

சித்திராங்கி:—ஐயா! நீர் யார்? நாங்கள் இத்தினைப்புனத்தைக் காவல் காக்கிறோம். என் பக்கத்திருப்பவள் இந்த மலை வேடராஜா நம்பிராஜரின் புதல்வி.

முத்துக்குமாரன்:—அடடா! உங்கள் இராஜாவுக்கு அறிவு சிறிதும் இல்லையோ? மூன்று உலகங்களிலுமுள்ள பெண்களுக்கெல்லாம் ரதியைப்போன்ற பெண்மணியைக் காட்டில் தினைப்புனங்காக்கவோ வைத்தனன்? இந்த வேடர்களுக்குப் பிரமதேவன் கொஞ்சமும் புத்தியைப் படைத்து வைக்கவில்லையோ?

சித்திராங்கி:—ஐயா! வழியே போகிற உமக்கு எங்களைப்பற்றி விசாரமென்ன?—இருக்கட்டும் நீர் யார்?

முத்துக்குமாரன்:—நான் தணிகை மன்னவன். இங்குவேட்டைக்கு வந்து வழி தப்பினேன். நீங்கள் பாடிய கானரசம் என் அஞ்செவி குளிரத்தேக்கி மொழியமுதமும் பெறுமாறு இங்கு வந்தேன். உன் தலைவியாகிய இந்தப்பெண்மணியைக்கண்டபொழுதே என்னுளம் என்னிடம் இல்லாதாயிற்று. சாந்தகப்போன்ற உன் தலைவியின் கண்கள் என்னெஞ்சைப் பிளந்தன, அந்தப் புண்ணில் மன்மதனும் அரூபியாய்க்கோடானுகோடி மலர்களை தொடுத்து வருத்துகிறான்.

(வள்ளி தலைகுனிகிறாள்.)

சித்திராங்கி:—ஐயா! இந்த விதமாக அபலைகளான எங்களிடம் பேசலாமோ? இன்னும் சிறிது நேரத்தில் வேடர்கள் வருவார்கள். உம்மையெங்களோடு கண்டால் மகாகொடியர்களாகிய அவர்கள் என்ன செய்வார்களோ? நீர் சீக்கிரம் இந்த இடத்தைவிட்டகன்றுபோம்.

**முத்துக்குமாரன்:**—அம்ம! அம்ம!! என்று சொன்னாய். உன் தலைவியாகிய என் ஆவியை விட்டு நீங்கி நான் அறிவோடும் அகல இயலுமோ? பிரிய நினைந்தாலும் என்னுளம் பதைக்குமே!

**சித்திராங்கி:**—சுத்த வீரர்போல் வில்லும் வாளுந் தாங்கிய நீர் ஒரு பெண்ணிற்காக மனங் கலங்கினால் எங்களைப் போன்ற பெண்களும் நகைப்பார்கள். போதும் போதும் இந்த வேடிக்கைப் பேச்சு. முடிவில் வினையாய் முடியும். இதற்கு முன் பின் பழகினவர்போல் திடுதிடென வாய்க்கு வந்தபடி பிதற்றுகிறீர். உமக்கென்ன பயித்தியமோ? இந்த வார்த்தை, நம்பிராஜா காதில் விழுந்தால் உமது தலை போம். மற்றவர் அறியுமுன் இவ்விடம் விட்டுப்போம்.

**முத்துக்குமாரன்:**—(வள்ளியை நோக்கி)

அஞ்சன விழியாய்! நினது விழிவலைப்பட்டு வருந்துமெனக்கு நீ அருள் செய்யாவிடில் நான் பிழைக்கும் விதம் என்ன? மங்கையர் திலகமே! என் உயிர் உன் கையிலுள்ளது. உன்னிஷ்டப்படிச் செய்.

'மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வே னுய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றுருகா யாயிற்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகந் தவிர்தி'நங்காய்!(42)

விழியழகாற் சகோரத்தை விண்ணில் வலையச் செய்த மெல்லியலே! நின் பாதங்களன்றி யெனக்கு வேறுதரவு ஒன்றுமில்லை. உன்னருண்மொழி பெறாது நீங்கேன் இந்தப் புனங்காக்குந் தொழில் உனக்கேற்றதன்று. இந்த உனது தீங்குரலிசை மொழி

கேட்டு அதைற்கறக் கற்கும்படிக் கிளி, குயில், நாகணை வாய் முதலிய பட்சிகள் கூட்டங் கூட்டமாய் நெருங்குமேயொழிய, நீ ஆலோலம் கூவியதட்டினும் போகாவே. நீ பறவைகளை ஓட்ட முயன்று கூட்டுகின்றனை, ஆக்க முயன்று அழிப்பவர்போல் இக்காவல் உன் மென்மைத்தன்மைக்குத் தகாது. என்னுடன் வருவையாயின் யாவரும் வணங்கும் உயர் நிலையில் இருத்துவேனே.

சித்திராங்கி:— ஐயா! உமது தயவு எமக்கு வேண்டாம். நாங்களோ வேடசாதிப் பெண்கள். நீர் வேடமகளை விரும்புதல் தகாது. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? வேண்டுமானால் நம்பிராஜனைக் கண்டு பேசும். எங்களைத் தொந்திரவு செய்யாதீர்.

(பறை, துடி, கொம்பு முதலியவற்றின் தொனி கேட்டல்.)

ஐயோ! இதோ வேடர்களும் வந்தார்களே! சீக்கிரம் போம். அவர் கண்டால் உம்மைக் கொல்வதோடு எம்மையும் சித்திரவதை செய்வார்கள். என்னடி வள்ளி சும்மாத் தலை குனிந்து புன்னகை புரிந்து இருக்கிறாய், அதோ உன் தந்தையும் தமையன்மார்களும் வேடருடன் வருகிறார்கள், இவரோ பிடிவாதமாய் நிற்கிறார். அவர்கள் கண்டால் என்னவிளையுமோ? என்ன செய்வோம்?

வள்ளி:—ஐயனே, நீ அரைக்கணமும் இவ்விடத்திலிருக்கப்படாது. என் பாலுள்ள அன்பினுக்காகவேனும் இங்கு நின்று காற்றினுங் கடுகி மறைந்தருளுக.

(வேடர்கள் ஆர்ப்பரித்து வருகிறார்கள்.)

(மெதுவாய்) அன்ப! இனி விரைந்து மறைந்தருளுக.

(முத்துக்குமாரன் திடீரென மறைந்தனன், சமீபத்தில் ஒரு புதிய வேங்கை மரம் மலர் பொதுளி நின்றது. நம்பிராஜன், மதிமுகி, வீரதேவன், வசந்தன், ஏரம்பன், முதலியோரும் நங்கைமோகினியும் வேடர் கூட்டத்துடன் வருகிறார்கள்.)

**நம்பிராஜன்:**—வள்ளி, சௌக்கியமா யிருக்கின்றனையா? புனங்காவல் கடினமாயிருக்கின்றதோ? கொடிய காட்டு மிருகங்கள் இவ்விடத்தில் திரிகின்றனவோ?

**வள்ளி:**—தங்கள் ஆசீர்வாதத்தால் சௌக்கியமாயிருக்கிறேன்.

**நங்கைமோகினி:**—(வள்ளியைத் தன்மேல் அணைத்துக்கொள்ளுகிறாள்.) குழந்தாய்! காட்டுமிருகங்களைக் கண்டு பயந்தனையோ?

**வள்ளி:**—காட்டு மிருகங்களின் சத்தங்கூட இவ்விடத்தில் வருவதில்லை.

**நம்பிராஜன்:**—அடே ஏரம்பா! நாம் கொணர்ந்த தேன், தினைமா, கிழங்கு முதலியவற்றை இங்கு எடுத்துவா. குழந்தாய் வள்ளி! உனக்கும் இன்னும் வேண்டுவன வற்றைக் கேள்—

(ஏரம்பன் தேன், கிழங்கு, தினைமா, தின்பண்டம்முதலியவற்றை எடுத்து வைக்கிறான்.)

**நங்கைமோகினி:**—ஏரம்பா! கடமான் பால் கொண்டு வந்தனையே! எங்கேடா அது?

**ஏரம்பன்:**—அம்மா! இதோ இருக்கிறது.

**நம்பிராஜன்:**—சரி எல்லாவற்றையும் இப்படி எடுத்துவை.

நங்கைமோகினி.—அடி சித்திராங்கி! இவற்றையெல்லாம் எடுத்து ஜாக்கிரதையாய் வைப்பாயாக.

(சித்திராங்கி அவற்றை எடுத்து வைக்கிறாள்.)

நம்பிராஜன்;—(ஊஞ்சலில் உட்காருகிறான்.)

மந்திரி மதியூகியாரே இப்படி உட்காரும்.

(மதியூகி அருகிலுள்ள ஒரு கல்மேடையில் உட்காருகிறான்.

நம்முடன் வந்த வீரதேவனும் வசந்தனும் எங்கே காணோம்?

மதியூகி:—மகாராஜா! அவர்களும் வேடர்களும் அதோ நிற்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு வேங்கைமரம் புதிதாகக் காணப்படுகின்றது. கண்ணுக்கினிமையாய்ப் பச்சைப்பசேர் எனத்தளிர்த்து அரும்பீன்று விளங்குகின்றது—அதோ அவர்களும் இவ்விடம் வருகிறார்கள்.

(வீரதேவன், வசந்தன் முதலியோர் நம்பிராஜன் எதிரில், வந்து வணங்கி நிற்கிறார்கள்.)

வீரதேவன்:—பிதாவே! இவ்விடத்தில் இதுகாறும் நாம் பார்த்திராத வேங்கை மரமொன்று நன்றாகத் தளிர்த்து நிற்கின்றது. அம்மாதிரியான வேங்கையை யாவருங் கண்டிரார்கள். சருகு, பழுப்புச் சிறிதுமின்றி மரகதத்தாற் செய்த இலைகளினிடையே பொன் அரும்பியது போல் திகழ்கின்றது. வானளாவிய மாலெனத் தோன்றும் இம்மரம் திடீரென இங்குக் காணப்படும் ஆச்சரியத்தைத் தங்களிடம் தெரிவிப்ப வந்தேன்.

வசந்தன்:—சிறிது யோசித்துப் பார்க்கில் யாரோ இந்திரஜால வித்தை செய்திருப்பார்களோவென்று சந்தேகிக்கிறேன்.

நம்பிராஜன்:—மந்திரியாரே! உமக்கென்ன தோன்றுகிறது?

**மதியூகி:**—இந்த விஷயத்தைப்பற்றி எனக்கொன்றுந்தோன்றவில்லை.

**வீரதேவன்:**—ஐயா! இதைப்பற்றி யோசிப்பானேன்? ஏதோ மாயையாகத்தானிருக்க வேண்டும்.

**வசந்தன்:**—யார் செய்த மாயையோ? எதற்காகச் செய்தனரோ? எல்லாவற்றிற்கும் அம்மரத்தினை ஆணிவேர் சல்லிவேரோடு பறப்பறித்து வீழ்த்தி அக்னிபகவானுக்கு இரையாக்கிச் சாம்பராக்க நமது வேடர்களுக்கு உத்தரவளித்தலே நலமென்று தோன்றுகிறது.

**வீரதேவன்:**—இவ்வளவு யோசனையேன்? எனது வில்லிலொரு அழற்கணை தொடுத்து சமூலம் எரித்துப் போடுகிறேன்.

**வசந்தன்:**—நமது வள்ளியம்மை இவ்விடத்திலிருப்பதினால், அவளுக்கு எவ்வித கெடுதியும் வாராதிருக்க நாம் முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆகையால் சீக்கிரம் அந்த மரத்தை யழிக்க உத்தரவு கொடுக்க வேண்டும்.

**ஏரம்பன்:**—சாமி! வேடர்க தயாராயிருக்காங்க. கோடாலி வெட்டுக்கத்தி, கட்டப்பாரை எல்லாரும் கொணாந்திருக்காங்க. எல்லாருமாச் சேர்ந்து கொறுக்கிப் போடறோமென்கிறாங்க.

**நம்பிராஜன்:**—அடே சும்மாயிரு.—மந்திரியாரே! தளிர்த்திருக்கும் பச்சை மரத்தை வெட்டலாமோ? மேலும் இது தெய்வீகமாகத்தோன்றி நிற்பதாகத் தென்படுகிறது. என்ன உமது அபிப்பிராயம்?

மதிபூதி:—சுவாமி! தாங்கள் சொல்வது நிஜந்தான். பச்சை மரத்தை யழித்தல் அதருமம். மேலும் வேங்கை மரத்தை நம்மவர்கள் நல்ல குறி சொல்லு மரமாகக் கருதுவார்கள்—இந்த நூதனமான மரத்தைப்பற்றி நமது வள்ளியம்மையைக் கேட்கலாம். ஒருகால் அவளுக்குத் தெரிந்திருக்கலாம்.

நம்பிராஜன்:—குழந்தாய் வள்ளி! இந்தப்புதிய வேங்கை மரத்தைப்பற்றி உனக்கேதேனும் தெரியுமோ?

வள்ளி:—அப்பா! இந்த மரத்தை நான் இதற்குமுன் பார்த்ததில்லை. நீங்கள் இங்கு வந்தபிறகுதான் நானும் பார்த்தேன்.

சித்திராங்கி:—நானும் இப்பொழுது தான் பார்த்தேன்.

நம்பிராஜன்:—வீரதேவர்! இந்தமரம் கல்லெதி முளைத்தருமாகையால் வள்ளியம்மையின் நன்மைக்காகத்தான் இங்குண்டாயிருக்கும். இதைப்பற்றிச் சந்தேகப்படவேண்டாம்.

மதிபூதி:—முருகக்கடவுளின் அருளினால் வள்ளியம்மைக்கு உபயோகமாக உண்டாக்கப்பட்ட மரத்தை நாம் சேதிக்கலாகாது. மேலும் நல்லமரத்தால் தீங்கொன்றும் வராது—அதோ பல்லி சொல்லுகிறது. உச்சிக்கவுளிக்கு அச்சமில்லை. சிறிதும் பயமில்லை.

நம்பிராஜன்:—குழந்தாய் வள்ளி, ஜாக்கிரதையாக இங்கிரு. இருட்டிப்போன பிறகு நீ பரணை விட்டுக் கீழிறங்க வேண்டாம். நன்றாய் இருட்டுவதற்குள் நாங்கள் சேரிபோய்ச் சேருகிறோம். நாங்கள் நாளை காலை வேட்டைக்குப் போகிறோம். திரும்புகாலில் இங்கு வருகிறோம்.

நங்கைமோகினி:—குமரீதாய் போய் வருகிறோம் ஜாக்கிரு தையாயிரு. என்னடி! சித்திராங்கி இன்றையதினம் வள்ளி ஒரு விதமாய்க் காணப்படுகிறாள்.

சித்திராங்கி:—ஒரு விசேஷமுமில்லையம்மா. பறவைகளை யோட்டி யொருவேளை களைத்துப் போயிருப்பாள்.

நங்கைமோகினி:—சரி, சரி, நான் போய்வருகிறேன். ஜாக் கிரதையாய்ப் பார்த்துக்கொள்.

வீரதேவன்:—என்ன வள்ளி! இன்றையதினம் எங்களிடம் பேசவேயில்லை? நாங்கள் போய் வருகிறோம். நாளைய தினம் வேட்டையிலிருந்து வரும் பொழுது என்ன கொண்டு வரவேண்டும்? கேள். நான் நிச்சயமாய்க் கொண்டு வருகிறேன்.

வள்ளி:—அண்ணா, எனக்கொன்றும் வேண்டாம். உனக்கு இஷ்டமானால் நான் விளையாடுவதற்கு ஒரு சிறு மான் கன்று ஒன்றைப் பிடித்துக் கொண்டுவா.

வீரதேவன், வசந்தன்:—சரி, அப்படியே கொண்டு வருகிறோம்.

நம்பிராஜன்:—வாரும் மதியூகியாரே நாம் போவோம்.

(அரசன் முதலியோர் போகிறார்கள்)

சித்திராங்கி:—வள்ளி! நாமும் இருட்டுவதற்குமுன் உணவு கொள்வதற்கு அதோ தெரியும் லதாக்கிருகத் திற்குப் போவோம். இருட்டுமுன் பரண்மேலேறிவிடும் படி பிதா ஆஞ்ஞாபித்திருக்கிறார். போவோம் வா.

(இருவரும் உணவு முதலியவற்றைக் கொண்டு போகிறார்கள்.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

## அங்கம்: ௩

### முதற் களம்.

இடம்: வள்ளிமலைக்காடு.

காலம்: முற்பகல்

பாத்திரங்கள்: நம்பிராஜன், மதியூகி, வேடர்கள்.

நம்பிராஜன்:—என்ன மந்திரி! இன்றையதினம் வேட்டை மிகப்பலமானது.

மதியூகி:—ஆம் இன்று வேட்டைபோல் நான் என்றுங் கண்டதில்லை. எத்தனை புலிகள், காட்டுப்பன்றிகள், காட்டானைகள், செந்நாய்கள், சிங்கங்கள் முதலியன எல்லாம் தங்களுடைய வாள்வீச்சில் மாய்ந்தன.

நம்பிராஜன்:—மதியூகியாரே! நமது குமாரர்கள் வேட்டையாரம்பமுதல் காணோமே. அவர்கள் எங்குப் போயிருப்பார்கள்.

மதியூகி:—அவர்கள் வேட்டையாரம்பிக்குமுன் வேட்டை நாய்களுடன் தனியே போயினர். அவர்களைத் தொடர்ந்து செல்லுமாறு ஏரம்பனையும் அனுப்பினேன்.

நம்பிராஜன்:—அவர்கள் போய் நெடுநேரமாயிற்றே! இன்னும் ஏன் வரவில்லை?

மதியூகி:—அவர்கள் திரும்பிவரும் நேரமாயிற்று. இதோ வந்துவிடுவார்கள். சுத்தவீரர்களான தங்கள் குமாரர்களுக்கு எவ்வித அபாயமும் வராது. அதோ யாரோ ஓடி வருகிறான்.

(ஏரம்பன் ஓடி வருகிறான்.)

நம்பிராஜன்:—என்னடா ஏரப்பா! அவர்கள் எங்கேயடா? இதென்னடா மூட்டை?

ஏரம்பன்:—மகாராசா! இன்னிய தினம் வேட்டை ரொம்ப ஆச்சரியம். இதைப்போல நான் பார்த்ததே யில்லேங்க.

நம்பிராஜன்:—அவர்கள் எங்கேடா?

ஏரம்பன்:—அவர்கள் எல்லா மிருகங்களையும் கொல்லாமல் கொன்னுங்க சாமி! சந்தோசமாயிருக்குதுங்க.

மதியூகி:—அடே! மகாராசா கேட்டதற்குப் பதில் சரியாகச் சொல். இல்லாவிட்டால் உதை விழும்.

ஏரம்பன்:—(கைகட்டி வாய் புதைத்து) சரி அப்படியே சொல்லேனுங்க.

மதியூகி:—அடே! வீரதேவராசாவும் வசந்தராசாவும் எங்கேடா?

ஏரம்பன்:—அவக பின்னாலே வருகிறாங்க. இந்த மூட்டையைத் தூக்கிக்கிண்டு என்னை முன்னாலே யோடச் சொன்னாங்க.

மதியூகி:—இதென்ன மூட்டையடா?

ஏரம்பன்:—எல்லா மிருகங்களையும் கொல்லாமற் கொன்னதிலே அகப்பட்டதுங்க.

(மூட்டையை அவிழ்த்து யானைத்தந்தம், புலிநகம், பல் முதலியவற்றை யெடுத்து வைக்கிறான்.)

நம்பிராஜன்:—(நகைத்து) கொல்லாமற் கொல்லுகிறதென்றால் என்னடா?

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY



ஏரம்பன்:—சாமி!

என்னவெண்டு சொல்லுவேனான்—மன்னவரே
என்னவெண்டு சொல்லுவேனான்.
வந்தவந்த பலகோடி—மதயானைப்
பந்திகளி லேபுகுந்து தந்தமொடிச்சே
அடிச்சு விரட்டிவிட்டாங்க—ஆரையுங்
கடிச்சுரத்தங் குடிக்குந் தடிச்சபுலிக்
கூட்டத்தி லேநுழைஞ்சு—கோணலாய்
வாட்டமான நகங்களை நீட்டிமுறிச்சே
பல்லைப்பிடுங்கிவிட்டாங்க—நல்லவர்போல்
மெல்லமெல்ல அவைகளைக் கொல்லாமலே
காலா லுதைச்சாங்க—கணத்திலே
யோலமிட்டே யூளையிட்டே நாலுபக்கமும்
பூனைபோல பூட்டுதுங்க—சாமி (43)
பூனைபோல பூட்டுதுங்க.

நப்பிராஜன்:—அடே! போதும், போதும். அவர்கள் என்னடா செய்கிறார்கள்?

ஏரம்பன்:—சாமி! அவுக ஒரு கொழுத்தமானைப் பிடித்திழுத்து வருகிறாங்க.

மதியூகி:—இதோ அவர்களும் வந்துவிட்டார்கள்.

(வீரதேவன் வசந்தன் ஒரு மானைப் பிடித்துக் கொண்டுவருகிறார்கள்.)

நப்பிராஜன்:—வீரதேவா! சென்று வெகு நேரமாயிற்றே. இன்று வேட்டை முடிந்தது. இனி நாம் வள்ளியைப் பார்த்துவிட்டுச்சேரிக்குப் போவோம். உங்களுக்காகத் தான் இதுகாறும் காத்திருந்தோம்.

வீரதேவன்:—பிதாவே! மன்னிக்கவும். வள்ளி தேவிக்காக ஒரு மானை யுயிருடன் பிடித்து வரப் போயிருந்தோம். இந்த மான் காற்றினும் கடுகியோடிற்று.

வசந்தன்:—ஐயா! இது வாயு தேவன் வாகனம் போல் பறந்தது. வேட்டை நாய்களும் பின் தங்கின. இந்த மான், மிருந்த ஜாலம் செய்து எங்களைத் தூரத்தொலைவில் இழுத்துச்சென்று நாங்களும் விடாது ஒடித்தொடர்ந்து பாசக்கயிறு வீசிப் பிடித்தோம்.

வீரதேவன்:—இவ்வளவு வேகமாயோடிய மானை நான் பார்த்ததேயில்லை.

"மிகுத்தது மெல்ல மெல்ல வெறிந்தது வெருவி மீதிற் குதித்தது செவியை நீட்டிக் குரபத முரத்தைக் கூட்டி யுதித்தெழு மூதையள்ள மென்றிவை யாவைச் செல்லாங் கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்த தன்றே"()

மூன்று முறை நாங்கள் வீசியபாசக்கயிற்றினின்றும் தவறி யெழும்பிக் குதித்தோடியது. தானாக எங்கள் கைப் படுவதுபோல் அகப்பட்டது தெய்வச் செயலெனத் தோன்றுகின்றது.

வசந்தன்:—வள்ளிதேவி, உயிரோடு மான் கன்று ஒன்று கொண்டு வரச்சொன்னமையால் இன்று ஒரு மிருகத்தையுங் கொல்லாமலே வேட்டையாடினோம்.

நம்பிராஜன்:—நன்று செய்தீர்கள். இந்த மான் மிக்க அழகுடையதே. வள்ளிக்கென்றே வாய்த்தது போலும். இனி நாம் யாவரும் அவளைப்பார்த்துப் போவோம். அடே ஏரம்பா!

ஏரம்பன்:—சாமி!

நம்பிராஜன்:—அதோ தெரியும் அந்தக் கமுக வனத்தின் நடுவில் இருக்கும் நீர் நிலையில் நீராடச் சென்ற ராணி யம்மாவைச் சீக்கிரம் அழைத்துக்கொண்டு அந்தக் குறுக்கு வழியாக வா.

ஏரம்பன்:—நல்லதங்க சாமி (ஓடுகிறன்.)

நம்பிராஜன்:—மந்திரிகளாரே நாம் போவோம்.

(யாவரும் போகிறார்கள்.)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

## இரண்டாங் களம்.

இடம்: தினைப்புனத்தில் புதிய வேங்கை மரத்தின் நிழல்.

காலம்: நண்பகல்.

பாத்திரங்கள்: வள்ளி, சித்திராங்கி.

**சித்திராங்கி:**—என்னடி வள்ளி! இந்த வேங்கை மரத்தின் நிழலை விட்டு விலக உனக்குச் சிறிதும் மனமில்லை? எத்தனை நேரம் இவ்விடத்தில் இருப்பது? தினைப் புனத்தையும் மறந்தாய். இந்த வேங்கையின் மலர்களைப் பறிப்பதும் அணிவதுமாய் இருக்கிறாய். அவைகளைக் காட்டிலும் நறிய மலர்கள் பல இருக்கின்றனவே.

**வள்ளி:**—சித்திராங்கி! உனக்கு இயற்கை யமைப்பின் அழகினைக்கண்டு ஆனந்தமடையும் அறிவு இல்லையென்றே நான் எண்ணுகிறேன். இந்த மரம் மற்ற மரங்களை விட எவ்வளவு பேரழகுடன் விளங்குகின்றது. பழுப்பு சருகு முதலியவை இன்றிப் பொன்னிற அரும்பும் மலரும் நிரம்பித் திகழும் இதனைக்கண்டு களியாதார் எவருமிரார். மேலும் இதனடியில் மந்தமாருதம் எவ்வளவு நன்றாய்த் தவழ்ந்து விளையாடுகின்றது? இதன் மலர்கள் மிகவும் அற்புதமான திவ்ய மணம் வீசுகின்றதை நீ அறியவில்லையோ? இதனருகில் நிற்கும் அசோகு, பாதிரி, குரா, குருக்கத்தி, சண்பகம் ஆகிய மரங்கள் இந்த வேங்கையினை நடு நாயகமாகக்கொண்டு சூழ்ந்து நிற்பது பார். இங்கு முல்லைக் கொடிகள் என்ன அழகுடன் விளங்குகின்றன? இம்மரங்களினி

டையே கிளி, குயில், நாகணவாய், மயில் முதலிய
பக்ஷி ஜாலங்கள் இம்மரத்தினழகை அனுபவிப்பவை
போல் தமது இனிய குரலிசைத்து விளையாடுகின்றன
காண். இவற்றி லெல்லாம் நின் மனங்களிப்புறவில்
லையோ?

சித்திராங்கி:—நீ கூறுவதுண்மைதான். இருந்தாலும் நீ
எவ்வித விளையாட்டிலும் மனங் கொள்ளாதவளாய்
இந்த மரக்கிளைகளில் ஏறி நின்று மயில் போலாடுவதும்,
கற்பகஞ் சார்ந்த காமவல்லிக்கொடிபோல் மரத்தை
யணைத்து நிற்பதுமாய் நிற்கிறாய். மேலும் இங்கு
நாம் நெடு நேரங் கழித்தோம். பரிதியும் தலைக்குமேல்
வருங்காலமாயிற்று. இன்னும் நீ இங்கு எத்தனை
நேரம் இருந்தாலும் இரு அம்மா! என் மேல் வருத்
தப்படாதே. நீ முன் போல் என்னுடன் கலந்து வார்
த்தையாடுவதுமில்லை விளையாடுவதுமில்லை. எதையோ
நினைத்துக்கொண்டு திப்பிரமை கொண்டவள் போல் தி
கைத்து நிற்கிறாய் இதுவே என் மனதில் கவலை யுண்
டாக்குகின்றது.

வள்ளி:—(நகைத்து) சித்திராங்கி! நீ என்மேல் வைத்தி
ருக்கும் அன்பிற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்
போகிறேன்? என்னைக் குறித்து நீ கொள்ளும் கவ
லைக்கு ஒரு காரணமுமில்லை யென்றே நான் சொல்லு
வேன். உன் மேல் எனக்கு எள்ளளவும் வெறுப்பில்லை.
கலந்து பேசுவதில்லை யென்றும், விளையாடுவதில்லை
யென்றும் வீண்பழி போடுகிறாய். நல்லது இங்கேயே
நாம் விளையாடுவம் வா. இந்த மரத்தில் ஊசலாடுவோம்.

(இருவரும் ஊசலிலிருந்து பாடியாடுகிறார்கள்.)

கமலமுறழ் திருவுருவாங் கவின்சேர் செல்வக்
கற்பகத்திற் கருணையென்னுங் கிளையிற் காத
லமருமெழில் வடஞ்சேர்த்தி யிதய மென்னு
மரும்பலகை யிசைசத்தெளிய வடியே நெஞ்ச
மமைதரவெஞ் ஞான்றுமணி யூச லாட்டு
மற்புதனைத் தணிகைமலை யவனைப் பாடி
யமவரவினி தாடுதுமா லணிகொ ளூசல்
அன்புடன் யாமாடுதுமா லணிகொ ளூசல் (45)

வள்ளி:—என்ன சித்திராங்கி! இன்னும் உன் முகம் வாட்டமாயிருக்கிறது?

சித்திராங்கி:—எனக்கென்ன வாட்டம்? நீ தான் உன்னைப் பற்றி யொரு கவலையுமெனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டாயே.

வள்ளி:—சரி, உண்மையாகவே என்மேல் நீ கோபங்கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது. உன் மனத்திலிருப்பதை யொளியாமற் சொல்.

சித்திராங்கி:—நீ என்ன என்னிடத்தில் உண்மையை ஒளியாமற் சொல்லுகிறாய்? உன் முகம் எதனால் வாட்டமுற்றிருக்கிறது? நீ யேன் தனிமையை இப்பொழுது பெரிதும் விரும்புகிறாய்? விளையாடல் ஒன்றிலும் மனஞ் செல்லாதவளாயிருக்கிறாய். இதற்குக் காரணமென்ன?

வள்ளி:—சித்திராங்கி! நான் இது பரியந்தம் உன்னிடத்தில் எதையேனும் ஒளித்திருப்பேனா? உன்னிலும் என்பால் அன்புடையவர் யாவர்? கண்ணை வெறுத்த இமையுமுண்டோ? நீ கூறுவதும் உண்மை தான்.

முந்தைய நாளிரவு யான் ஒரு கனவு கண்டேன். அது என் மனத்தில் சிறிது கவலை யுண்டாக்கியது.

சித்திராங்கி:—கனவுதானோ நனவோ?

வள்ளி:—சரி, என்ன சொன்னாலும் நீ என்னை நம்பமாட்டாய். என்மேல் உனக்கு ஏதோ அவநம்பிக்கை உண்டாய் விட்டது.

சித்திராங்கி:—(நகைத்து) இல்லை, இல்லை நீ சொல் நீ கூறுவது உண்மையோ பொய்யோ நான் சொல்லுகிறேன்.

வள்ளி:—அந்தக்கனவில் ஒரு பெரிய சோலை கண்டேன். அதனடியில் நான் தனியே யிருந்தேன். அப்பொழுது ஒரு சுந்தர புருஷன் வந்தான்—

சித்திராங்கி:—போதும் போதும். இது கனவே யில்லை. அவன் நேற்று நாம் பார்த்த மகா புருஷன்தானோ?
(ஊது கொம்பு, தாரை, தவில், முதலியன ஒலிக்கின்றன.)

வள்ளி:—நல்லது இதைக்குறித்து நாம் மற்றொரு சமயம் பேசிக்கொள்வோம். இதோ பிதா முதலியோர் வருகின்றார்கள். அந்த ஆதனத்தை இப்படி யெடுத்துப் போடு. என் தாயினிடத்தில் என் கவலையைக்குறித்து ஒன்றுஞ்சொல்லாதே. அவள் வருத்தமுறுவாள். அதோ அவர்களும் வந்துவிட்டார்கள்.

(நம்பிராஜன் முதலியோர் வர சித்திராங்கி ஒரு ஆதனத்தைப்போடுகிறாள்.)

நம்பிராஜன்:—(ஆதனத்தில் உட்கார்ந்துகொண்டு) குழந்தாய் வள்ளி! சௌக்கியமாயிருக்கிறாயா? மந்திரியாரே இப்படியுட்காரும். அடே எரம்பா! வழக்கம்போல் கொண்டுவந்த பால் முதலியவற்றைச்சித்திராங்கியிடம்

கொடு. வள்ளி, உனது தமையன் உனக்கோர் அழகிய மான் கொண்டுவந்திருக்கிறான்.

வீரதேவன்:—(மானைப் பிடித்துக்கொண்டு வள்ளி கையில் கொடுத்து) வள்ளி! இதோ பார். இந்த மான் எவ்வளவு அழகாயிருக்கின்றது. இதனை வெகு கஷ்டப்பட்டுப்பிடித்தோம்.

வள்ளி:—எனக்காக நீங்கள் சிரமப்பட்டு இந்த அழகியமானைக்கொண்டுவந்ததற்கு அளவற்ற வந்தனம். இந்த மான் மிக அழகாயிருக்கிறது. இதைப்போன்றதை யான் பார்த்ததேயில்லை.

(அதை அணைத்து முத்தமிடுகிறாள்.)

வீரதேவன்:—வள்ளி! உன்னைப்பார்த்தவுடன் இந்த மான் உன்பால் நெடுநாட்பழகியதுபோல் எவ்வளவு அன்புடன் நெருங்கி நிற்கிறது. நீ போகுமிடமெல்லாம் உடன் வருகிறது. இது அற்புதமான மிருகமாயிராநின்றது.

வள்ளி:—என் தாயே ஒரு மானென்று பலருஞ்சொல்லுகின்றமையால் என்பால் இந்த மானும் அன்புகொண்டது போலும்.

வசந்தன்:—இது உன்னையும் ஒருமானென்று நினைத்துக் கொண்டது என்று எனக்குத்தோன்றுகிறது. இனம் இனத்தோடு சேரும்.

வள்ளி:—அண்ணா! நீ பரிகாசஞ்செய்கிறாய். மேலும் தனியே காட்டில் யதேச்சையாய்த்திரியும் இதனையொரு பாசத்தாற்கட்டி வைத்திருத்தல் மகா பாபம்.—ஓ! மானே! நீ ஓடிப்போ.

(அதன் கட்டையவிழ்த்து அதைஓட்டிவிடுகிறாள். அது துள்ளிக்குதித்து ஓடிப்போகிறது.)

**வீரதேவன்:**—வள்ளி! உன் கருணைக்கு நான் மிகவும் மெய்ச்சினேன். நாங்கள் அதைப்பிடிப்பதற்கு வெகு கஷ்டப்பட்டோம். நீ அதனைத்துரத்தி விட்டாயே!

**வள்ளி:**—அண்ணு! அதற்காக என்னை மன்னிக்கவும். அதோ பார்! அந்த மான் என்ன அழகாகத் துள்ளிக்குதித்தோடுகின்றது. சந்தோஷமாக ஓடி விளையாடுவதனைச் சிறைப்படுத்துவது பாபமன்றோ?

**வசந்தன்:**—நீ வேடஜாதிப் பெண்ணாகத் தோன்றவில்லை. இருந்தால் இவ்வளவு கருணையிராது.

(ஒரு சிவயோக விருத்தர் கையிற் குடையுந் தடியுமாய் அடிமேலடிவைத்து நடந்து வருகிறார்.)

**நம்பிராஜன்:**—குழந்தைகாள்! சற்றுச் சும்மா இருங்கள். அதோ யாரோ ஒரு பெரியவர் கையிற் றடியுங் குடையுமாய் அடிமேலடி வைத்து நடந்து வருகிறார். பார்த்தால் சிவயோகர்போற் காணப்படுகின்றார். நாம் யாவரும் இப்புறம் எழுந்து நிற்போம்.

(யாவரும் எழுந்து ஒருபுறம் நிற்கிறார்கள்.)

**மதியூகி:**—மகாராஜாவே! இவர் மகா தபோநிதிபோல் காணப்படுகிறார். இவருடைய தநு தனுசை யொத்திலங்குகின்றது. இவரது திருமுகமண்டலத்தில் சிவஜ்யோதி பிரகாசிக்கின்றது. மிக விருத்தாப்பியர். கையுங் காலும், தலையும் நடுங்குகின்றன. ஒசிந்த நோக்குங் கண்களில் கருணைப் பிரவாகம் பெருக்கெடுத்தோடுகின்றது. சர்ப்பத்தின் தோல்போல் திரைந்து தொங்கும் தோலினையுடைய இந்த விருத்தாப்பியரைப் போன்ற வயோதிகரை நான் கண்டதேயில்லை. விபூதி ருத்திராக்ஷங் கைக்கொண்ட இத்தகைய பெரியோரை நாம் எதிர்கொண்டு வணங்குவதே நலம்.

**நம்பிராஜன்:**—ஆ, அப்படியே செய்வோம்.

(யாவருஞ்சற்று விலகி நிற்ப நம்பிராஜன் சிவயோகியாரை வணங்குகிறான்.)

**சிவயோகி:**—சிவ, சிவ, சிவ—அரச! நீ நீடூழி வாழ்க. திருநீறு தரித்துக்கொள். (விபூதி கொடுக்க வாங்கித்தரிக்கிறான்.) உனக்கு மிகுந்த வெற்றியுண்டாகும். மேன்மேலும் வாகை சூடுவாய். அளவற்ற பாக்கியங்களையடைவாய்.

**நம்பிராஜன்:**—சுவாமி! தாங்கள் இங்கு எழுந்தருள என்ன பாக்கியஞ்செய்தோம்! ஐய! நானும் என் குலத்துமுன்னோருஞ்செய்த தவம் பலித்த காலம் இன்றே. இத்தினம் நாங்கள் அனைவரும் சுகிருதத்தையடைந்தோம். தாங்கள் இந்த ஆசனத்தில் வீற்றிருங்கள்.

**சிவயோகி:**—(ஆசனத்திலிருந்து) அரசனே! நீ மிக நல்லவன். மனுநெறிதவறாதவன். சிவபிரான் அருள் உனக்கு மிகுதியும் உண்டாகும். நமது அனுக்கிரகம் உனக்குப் பரிபூரணமாகக்கிடைக்கும்.

**நம்பிராஜன்:**—சுவாமி! தங்களுடைய இருப்பிடம் எது? தாங்கள் இங்கு வர இந்த மலை செய்த புண்ணியம் யாது? என்ன உத்தேசத்தோடு தாங்கள் இங்கு வந்தீர்கள்? தயை செய்து வாய்மலர்ந்தருளவேண்டும். நான் இந்த மலையரசன். என்னாலாகவேண்டிய முதவியை அங்கீகரித்தருளப் பிரார்த்திக்கிறேன்.

**சிவயோகி:**—இராஜனே! நீ செய்யும் உபசாரமே நமக்குமிகத்திருப்தியையுண்டாக்கிவிட்டது. எங்கும் நாமிருக்குமிடமே. ஆயினும் இப்பொழுது தணிகை மலையினின்று வருகிறோம். இந்த மலையிலுள்ள குமரியாடும்

பொருட்டு வந்தோம். அதற்கு வேண்டுமுதலியவை நீ செய்யலாம்.

நம்பிராஜன்:—அருந்தவம் புரியும் அந்தணரே! தாங்கள் நினைத்தபடி அந்தக்குமரி தீர்த்தத்தில் எத்தனை காலம் நீராட இஷ்டமோ அத்தனை காலம் ஆடலாம். இந்த மலையிலேயே நமது குமாரி வள்ளிதேவியிருக்கிறாள். வேண்டிய உபசாரங்களை அவள் செய்யத் தாங்கள் அங்கீகரிக்கவேண்டும். அவள் தனிமையாய் இங்குப்புனங்காத்து வருகிறாள். தாங்கள் அவளுக்குத் துணையாகவிருந்து அவளுக்குக் கிருபைசெய்தருளவேண்டும்.

சிவயோகி:—அரசனே! நீ கூறியதற்கு மிகமனமகிழ்ந்தோம். அப்படியே அனுக்கிரகஞ் செய்வோம்.

நம்பிராஜன்:—(வள்ளியை நோக்கி) குழந்தாய் வள்ளி! இவர் மிகப்பெரியவர். இந்தச் சிவயோகியின் அருள், கிடைப்பது அரிது, அரிது. ஆகவே அவர் மனங்கோணாமல் அவருக்கு வேண்டிய சுச்ரூஷைகளைச்செய்து வருவாய். ஒன்றிலுங் குறைவில்லாமல் உபசாரம் செய். பெரியவர் அருள் கிடைக்கும். கடவுளும் கருணை புரிவார். மேலும் உனக்குத் துணையாகவும் இருப்பார். சூரியனும் உச்சிப்பொழுதையடைந்துவிட்டான். நான் இனிச்சேரிக்குப்போக வேண்டும். நாளை வேட்டைக்குப்போய் வரும்பொழுது நாங்கள் வழக்கம்போல் இங்குவந்து போவோம்.

நங்கைமோகினி:—(வள்ளியை யணைத்து முத்தமிட்டு) குழந்தாய் வள்ளி! இந்தப்பெரியவர் துணை கிடைத்தது உன்

பாக்கியர்தான். நான் போய் வருகிறேன். ஜாக்கிரதை யாயிரு.

நம்பிராஜன்:—(சிவயோகியாரை நோக்கி) சுவாமி! நாங்கள் சேரிக்குப்போய் வருகிறோம். உத்தரவளிக்கவேண்டும்

சிவயோகி:—அரச! உன்னிஷ்டம் போல் போய் வரலாம். சுகத்தின் வரவினை எதிர் பார்த்துத் தினைப்புனங் காத்து வரும் வள்ளிக்குச் சருவ மங்களமும் உண்டாக நாம் அநுக்கிரகிப்போம். நீ கவலைப்படாதே.

(நம்பிராஜன் முதலியோர் போகிறார்கள்.)

சிவ சிவ சிவ சம்போ! சிவ சிவ சிவ சம்போ!

(வள்ளியும் சித்திராங்கியும் எதிரில் வந்து வணங்குகிறார்கள்.)

தீர்க்க சுமங்கலீபவா! தீர்க்க சுமங்கலீபவா! இந்த விபூதியைத்தரித்துக்கொள்ளுங்கள்., உங்களுக்குச்சுகிருதமுண்டாகும்.

(இருவரும் விபூதி வாங்கித்தரிக்கிறார்கள்.)

வள்ளி! இப்படிக்கிட்டவா! உன்னை நன்றாய்ப்பார்க்கவேண்டும். எனக்குச்சாமுத்திரிகாலக்ஷணம் தெரியும்.

வள்ளி:—சுவாமி! தாங்கள் மிகுந்த விருத்தாப்பியர். தங்களுக்கு எந்தவித சிரமமும் தர எனக்குச்சம்மதமில்லை.

சிவயோகி:—உனது வார்த்தை தேவாமிருதம்போல் இனிமையாயிருக்கின்றது. உனது பேரழகோ என்னைப் போன்ற கிழவருடைய மனத்தையும் மயக்குகின்றது. நீ நல்ல பாக்கியசாலி.

சித்திராங்கி:—வள்ளி! இந்தக்கிழவர் சிங்காரப்பேச்சு கற்ற

வாடி! இவரைப் பார்த்தால் கிழவராய்த் தோன்றுகிற தே தவிர, இவர் பேச்சு கிழவயதாய்த்தோன்றவில்லை.

வள்ளி:—சுவாமி! தாங்கள் இந்த மலைக்கு எதையோ உத்தேசித்து வந்ததாகச் சொன்னீர்களே. அதைச் சற்று விளங்கச்சொல்லவேண்டும்.

சிவயோகி:—பெண்ணே! நான் இங்குக் குமரியாடவந்தேன்.

வள்ளி:—அந்தத் தீர்த்தத்தில் ஆடுவதனால் என்ன பலன் கிடைக்கும்?

சிவயோகி:—பெண்கள் திலகமே! நன்று கேட்டாய். அங்ஙனம் ஆடுவதால் தான் வருங்காலத்து வாராது முன்னே வந்து துன்பப்படுத்துகின்ற இந்த விருத்தாப்பியமும் தொலையும்; மனத்தின்கணுள்ள மயக்கமும் நீங்கும்.

வள்ளி:—(நகைத்து) ஐயா! அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து இளமைப்பருவத்தைப் பெற்றவர்களும் தங்களையொழிய இனிப் பெறுபவர்களும் இருக்கிறார்களோ?

சித்திராங்கி:—அடி வள்ளி! ஐயோ பாவம்; தள்ளாத காலத்தில் இவர் வீண் மனோராஜ்ஜியம் பண்ணுகிறார். நீயும் உண்மைபோல் அவரைக்கேட்கிறாய்.

சிவயோகி:—அணங்கே! என்னையொழியத் துறையறிந்து சேர்ந்து தொழுதாடுபவர் இவ்வுலகிலில்லை. அப்படியாடுபவர்க்கன்றோ பலனுண்டாகும். மேலும் அந்தப்பலனையடையும் வழி தெரியாமலோ நான் இவ்வளவு தூரம் மிகுந்த கஷ்டப்பட்டு மெலிவினையடைந்து இங்கு வந்து சேர்ந்தேன்?

வள்ளி:—சரிதான்! உலகத்தார்க்குத்தெரியாத புதிய துறை

உமக்குத் தெரியும் போலும்.—என்ன சித்திராங்கி! இவர் சொல்லுவதைக் கேட்டனையா? ஒன்றுகப்பட்ட மரம் பெருமழையால் தளிர்விட்டுத்தழைக்குமாம்.

**சித்திராங்கி:**—(நகைத்து) இவர் மிகுந்த விருத்தாப்பியர். வயோதிகம் மேலிட்டதால் பித்தந் தலைக்கேறிப் பைத்தியம் பிடித்துவிட்டது. வறுத்த பயறு முளைக்கும் என்னும் இவரைவிடப் பெரும் பித்தனை நான் பார்த்ததேயில்லை.

**சிவயோகி:**—ஓ! பெண்மணிகளே! என்னைப்பார்த்து நீங்கள் பரிகசிக்கிறீர்கள். நீங்கள் என்னைப்போல் வருந்துங்காலத்தில் எல்லாந்தெரியும்.

**சித்திராங்கி:**—என்ன தாதா! எங்களுக்கு இப்படித்தானு அனுக்கிரகஞ்செய்வது?

**சிவயோகி:**—பெண்களே! இப்படி என் இருபுறத்திலும் நில்லுங்கள். நான் அனுக்கிரகஞ்செய்கிறேன்.

(வள்ளி சித்திராங்கி இருவரும் நகைத்துக்கொண்டு நெருங்கி இருபுறமும் நிற்கிறார்கள்.)

**சித்திராங்கி:**—அடி வள்ளி! இவர் தலையைப்பார்த்தால் பெரிய சங்குபோல் என்ன வெண்மையாயிருக்கிறது!

**வள்ளி:**—ஆமாம் அடி! அவர் பேசுகிறபொழுதுமாத்திரம் சங்கந்தொனிப்பதுபோல் இல்லை.

**சிவயோகி:**—பெண்ணே! இந்தச்சங்கத்தின் வாயில் உன் வாயை வைத்தூதினால் தானே சங்கந்தொனிக்கும்?

**வள்ளி:**—(நகைத்து) அடி சித்திராங்கி! இந்தக் கிழவர் குறும்பைப் பார்த்தாயா?

**சித்திராங்கி:**—அடி அவர் தேகத்தில் கிழவரே யொழிய மன

த்தில் வாலிபராயிருக்கிறார். சந்தேகமில்லை.—பாரடி அவர் தலையுங்கையும் ஆடுவதை.

வள்ளி:—அடி, கிழவரைப் பரிகாசம் பண்ணுதே. அவர் கோபித்துக்கொள்வார்.

சிவயோகி:—ஓ! பெண்களே! உங்களுக்கு என் கஷ்டந்தெரியவில்லை. சூரிய உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. அடி வள்ளி! உன் பிதா உனக்குச்சொன்னதை மறந்துவிட்டாயே. இப்படி வந்து இந்தக்குடையைப்பிடி. பராமுகமாயிராதே. உனக்குப் பாபம் வந்து சம்பவிக்கும். (வள்ளி நெருங்கிக்குடைபிடிக்கிறாள்.) நீ நல்ல பெண்.

வள்ளி:—ஐயா! நீர் இப்படி ஊசலில் உட்கார்ந்துகொள்ளும். சூரிய உஷ்ணம் அதிகமாக இராது.

சிவயோகி:—பெண்ணே! என் கையைப்பிடித்துத்தூக்கு. நான் தள்ளாத கிழவன். எனக்கு உதவி செய்தால் உனக்கு நல்ல புருஷன் கிடைப்பான்.

வள்ளி:—ஐயா! இந்தத்தடியைப்பிடித்துவாரும்.

(சிவயோகி மெதுவாய் எழுந்து நடக்கிறார்.)

சித்திராங்கி:—அடி அவர் நடப்பதைப்பார். அடி! பூமியை அளப்பவர்போல் நடக்கிறார். அடி! ஊதினால் கீழே விழுந்துவிடுவார் போலிருக்கிறார் அடி.

சிவயோகி:—அடி வள்ளி! என்னைப்பிடித்துக்கொள். கிறுகிறெனத்தலை சுற்றுகின்றது. பெருமூச்சு வருகின்றது. கண்களோ இருண்டு பஞ்சடைகின்றன. அடி பெண்ணே! இனி என்னால் தாங்கமுடியாது.

(விழுகிறார், எழுந்திருக்கிறார், மீட்டும் விழுகிறார், தள்ளாடுகிறார், பெருமூச்சுவிடுகிறார்.)

பெண்ணே! என்னைக்கட்டியணைத்துத் தூக்கமாட்டாயோ? இவ்வளவு பராமுக முனக்கேன்? ஆ! பெண்மணியே! ஐயோ! கொடிய பசி என் வயிற்றையழற்றுகின்றதே. இதுவோ நீ செய்யும் உதவி?

**வள்ளி:**—ஐயா! நீர் இப்படிச்சற்று எழுந்து உட்காரும்.—(எழுந்து ஊசலில் உட்காருகிறார்.) அடி சித்திராங்கி! அந்தவிசிறியை யெடுத்துச்சிறிது மெதுவாய் வீசு. இப்படி நின்றுகொள். நான் கிழங்கு பழம் தினைமா தேன் முதலியவற்றை அவரெதிரில் எடுத்துவைக்கிறேன்.

(கிழங்கு முதலியவற்றை வள்ளி ஒரு தேக்கிலையில் எடுத்து அவர் முன் வைக்கிறாள்.)

ஐயா! இவைகளை உண்டருளுங்கள்.

**சிவயோகி:**—நங்காய்! அவைகளை நீ சிறிது சிறிதாக எடுத்து என் கையிற் கொடுப்பாய். எனக்குக் களைப்பு அதிகமாக இருக்கிறது.

**வள்ளி:**—ஐயா! அப்படியே தருகிறேன். உண்ணுங்கள்.

(வள்ளி எடுத்துக்கொடுக்க சிவயோகி உண்ணுகிறார்.)

**சித்திராங்கி:**—தாதா! மெதுவாய் உண்ணும்.

**சிவயோகி:**—(கீழே சாய்ந்து விழுகிறார்.)

அடி பெண்ணே! வள்ளி! நீ என்னவோ கொடுத்துவிட்டாய். உணவில் நஞ்சைக்கலந்தாயோ? ஐயோ! நெஞ்சை அடைக்கின்றதே. மயக்கம் வருகின்றதே. தாகம் அதிகரிக்கின்றதே. பெண்ணே! கொஞ்சம் தண்ணீர் கொடு.

**வள்ளி.**—ஐயா! கொஞ்சம் மனோதிடங்கொண்டு சற்று எழுந்திரும். இங்குச் சமீபத்தில் தண்ணீர் இல்லையே.

இந்தத்தேவினைப்பருகும்.

(சிவயோகி தேவினைப்பருகுகிறார்.)

சிவயோகி:—ஐயோ! என் நா வறளுகின்றதே. பெண்ணே! நீ வேடிக்கை பார்த்து நிற்கிறாய். உனக்கு நியாயமா? தண்ணீர் எங்கிருந்தாலும் கொஞ்சம் கொண்டுவந்து கொடு.

வள்ளி:—ஐயா! தண்ணீர் இங்குக் கிடைப்பது அரிது. வெகு தூரம் சென்றால் ஒரு சுனையிருக்கிறது. அங்குப்போய்த் தான் உமது தாகத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

சிவயோகி:—பெண்ணே! நீ தான் என்னை அழைத்துப் போகவேண்டும். எனக்கு அந்தச்சுனை யிருக்குமிடந் தெரியாது. மேலும் நான் நடுவழியில் கீழே விழுந்து விடுவேன். கிழப்பிராணன் பொட்டெனப்போய்விடும். பழி உன்காலைச்சுற்றிக்கொள்ளும்.—ஐயோ! நாவறட்சி அதிகரிக்கின்றதே. காதடைக்கின்றதே. என்ன செய்வேன். தெய்வமே! இந்தக்கன்னெஞ்சுடைய பெண்ணிடத்தில் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டுச்சோதிக்கிறாயே!—வள்ளி! கொஞ்சம் மனமிரங்கி என்னை அந்தச் சுனைக்கு அழைத்துப்போ.

சித்திராங்கி:—அடி வள்ளி! இந்தக்கிழவர் பொல்லாத வல்லடி வழக்கர். சும்மா விடார். உன் பிதாவுக்கு வாக்குக்கொடுத்தபடி இவரைப் பாதுகாப்பது நமது கடமை. நாம் போய்த்தண்ணீர் கொண்டுவருமளவும் இவர் பொறுத்திரார். இவரை அங்கு அழைத்துப்போவதே நலம். நான் இவரை அழைத்துப்போய்வருகிறேன். நீ இங்குப் புனங்காத்திரு.

**சிவயோகி:**—வள்ளி! நீதான் என்னை அழைத்துப் போகவேண்டும். அந்தப்பெண்ணை எனக்குப் பணிவிடை செய்ய அரசன் நியமிக்கவில்லை. உன்னைத்தான் நியமித்தான் நீயும் ஒப்புக்கொண்டாய். இப்பொழுது மாட்டேனென்றால் விடேன். நீ அந்தச்சுனைக்கு என்னை யழைத்துப் போனால் போ, இல்லாவிடின் என்னுயிரை இங்கு மாய்த்துக்கொள்ளுகிறேன். பிரமஹத்தி உன்னைப்பிடிக்கும்.

**வள்ளி:**—இதென்ன தருமசங்கடமாயிருக்கிறது. நல்லது நானே அழைத்துப் போகிறேன். எழுந்திரும். அடி சித்திராங்கி! இந்தக்கிழவரை நான் அழைத்துப்போய்வருமளவும் இங்கே தினையைக் காவல் செய்திரு. நான் சீக்கிரத்தில் வருகிறேன்.

**சிவயோகி:**—(எழுந்திருக்கிறார்) பெண்ணே! என் கையைப் பற்றிக்கொள். இல்லாவிட்டால் நான் கீழே விழுவேன். கால் துவளுகின்றது.

**வள்ளி:**—ஐயா! இந்தத் தடியைப் பற்றிக்கொள்ளும். நான் அழைத்துப்போகிறேன்.

**சிவயோகி:**—பெண்ணே! இவ்வளவு விருத்தாப்பியனை என்னைத் தொடுவதற்கு வெட்கப்படுகிறாயே. உண்மைதான். நானோ கிழவன். என்னைத்தொட உனக்கு அருவருப்பாகத்தான் இருக்கும். நானுங்கட்டழகுடைய வாலிபனாயிருந்தால் நீ யுளங்கூசுவையோ?

**வள்ளி:**—நீர் எவ்வளவு துன்பப்பட்டாலும் உமது குறும்புத்தனத்தை விடேனென்கிறீர். போதும் உமது பரிகாசம். தடியைப்பிடித்துக்கொள்ளும். இந்த வழியாய் வாரும்

மெதுவாய்—கிழே விழாதீர்

(கிழவேயோகி மெதுவாய்த்தடியைப்பற்றிக்கொண்டு தட்டித்தடுமாறி நடந்து வள்ளியைத் தொடர்ந்து போகிறார்.)

சித்திராங்கி:—அடி வள்ளி! சீக்கிரம் போய்வா. ஜாக்கிருதை. எங்கும் தாமதிக்காது வேகமாய்வா. நான் பரணிலிருந்து புனத்தைக்காவல் செய்கிறேன். கிழவரை ஜாக்கிருதையாயழைத்துப்போய்வா. அதோ தினைப்புனத்தில் பறவைகள் கூட்டங் கூட்டமா யிறங்கிவிட்டன. நான் அவைகளை யோட்டப்போகிறேன். (பாடுகிறாள்.)

இரவி மறைய வெழுந்திருள்போ லெங்கும்
விரவியெழும் புட்காள் விரவாதீ ராலோலம் (46)

வேதாந்த ஞானம் விலகவெழு மாயையென
வேதிர ராமேவும் வீயினக்காளாலோலம் (47)

(சித்திராங்கி போகிறாள்.)

# மூன்றாங் களம்.

இடம்: வள்ளிமலையில் ஒரு சுனையின் கரை.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: வள்ளி, சிவயோகி.

(சிவயோகி தடியைப்பற்றிக்கொண்டு வள்ளியைத் தொடர்ந்து வருகிறார்.)

**சிவயோகி:**—அடி பெண்ணே! இன்னும் எவ்வளவு தூரம் இந்தத்தள்ளாத கிழத்தை இழுத்துக்கொண்டுபோவா யோ? வெய்யிலோ அதிக உக்கிரமாயிருக்கிறது. களைப்பு மேலிடுகிறது. கண் பஞ்சடைகிறது. காதடைக்கிறது. நா வறள்கிறதே—ஐயோ! தெய்வமே! இந்த ஆபத்துக்காலத்தில் உதவி செய்யாத ஒரு பாவிப்பெண்ணிடத்தில் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டாயே. கீழே விழுந்தாலும் தூக்கிவிடேன் என்கிறாளே!—ஆ! வள்ளி! நான் படும் வருத்தத்தைச் சிறிதும் எண்ணாயோ? இதோ கீழே தள்ளுகிறது. விழுந்துவிடுவேன். என்னைப்பிடித்துக்கொள்.

**வள்ளி:**—ஐயா! இன்னுஞ்சிறிது தூரந்தான் இருக்கிறது. சற்றே மனம்பொறுத்துவாரும். இதோ பத்தடிக்குள் ஒரு சுனையிருக்கிறது. அதில் இறங்கி நீர்பருகலாம். மெதுவாய் நடந்துவாரும். தடியை நன்றாய்ப்பற்றிக்கொள்ளும்.

**சிவயோகி:**—ஆ! பெண்மணியே! என்னை இந்த வறண்டு உலர்ந்த வனாந்தரத்தில் அழைத்து வந்துவிட்டனையே.

காலிற் பொடி பற்றுகிறதே. தலையை இடிக்கிறதே. வள்ளி! இந்தத்தோஷம் உன்னை நிச்சயமாய்ப்பற்றும். விடாது. கிழப்பிராணனை வதைக்கிறாய். உடம்பெல்லாம் பற்றியெரிகிறது. உன்னுடைய கமலம்போன்ற கைகளால் என்னைத்தடவு என் தலையை உன் கைகளாற் பிடி.

வள்ளி:—சுவாமி! சிறிது தூரம் பிடிவாதஞ் செய்யாமல் வருவீராயின் சீக்கிரத்தில் சுனையை அடையலாம். பிறகு உமதிளைப்புப் பறக்கும்.

சிவயோகி:—ஓகோ! எனது கால்கள் துவள்கின்றன. காலோடு கால் பின்னுகிறது. இதோ விழுந்துவிட்டேன், (விழுகிறார்) இனி என்னால் நடக்கமுடியாது. மேலும் அந்தச்சுனையில் ஜலம் அதிக ஆழத்தில் இருக்கும். என்னால் இறங்க முடியாது. நீ என்னை எடுத்துக்கொண்டு போ. இல்லாவிடில் ஜலமாயினும் இங்குக்கொண்டுவா உனது அழகிய கைகளாற் கொணர்ந்த நீரே எனக்குச் சிலாக்கியம். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் எனது உயிர் நீங்கும். சீக்கிரம் என்னை எடுத்துப்போ.

வள்ளி:—ஐயா! இப்படிச்சற்று எழுந்து உட்காரும். நான் போய் நீர் கொண்டுவருகிறேன்—முருகா! இந்தக்கிழவரிடத்தில் நான் படும் பாடு போதும். (வள்ளி போகிறாள்.)

சிவயோகி:—அடி பெண்மணியே! சீக்கிரம் ஓடிவா. தாமதித்தால் உயிர் விடுவேன். நீ எதிரில் இல்லாதபோது இளைப்பு அதிகரிக்கிறது. உன்னுடைய மந்தகாசம் தவழும் முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் அந்தப் பராக்கினால் என் வருத்தத்தை மறப்பேன். இன்னும் வரவில்லையே. என்னைத்தனியே விட்டு ஓடிப்போயி

ணையோ? ஒகோ! நானென்செய்வேன்? இவ்வளவு கன்னெஞ்சுடைய பெண்ணை நான் கண்டதேயில்லை.

(வள்ளி தன் அங்கையில் நீர் கொண்டுவருகிறாள்.)

**வள்ளி:**—சுவாமி! இதோ வந்தேன். எனது கையில் ஜலம் கொணர்ந்திருக்கிறேன். இப்படித் திரும்பும். உமது கையைச்சேர்த்துப்பிடியும். ஜலத்தை வாங்கிப்பருகும்.

**சிவயோகி:**—பெண்ணே! என் கைகள் நடுங்குகின்றன. நீயே எனது வாயில் உனது அங்கையிலுள்ள நீரைப்பெய்வாய். இப்படிக் கிட்டவா உனது கையை என் வாயின் சமீபத்தில் வைத்து ஜலத்தைக்கொடு. இல்லாவிடிற் சிந்திப்போம்.

**வள்ளி:**—இந்தப்பிடிவாதமுள்ள கிழவர் விடாப்பிண்டாராயிருக்கிறார். ஐயா! இந்தாரும் நீரைப்பருகும்.

(வள்ளி தன் கைகளால் நீரை வாயிற்கொடுக்கச்சிவயோகி அவள்கையைத் தன்கைகளாற் பற்றிப்பருகுகிறார்.)

**சிவயோகி:**—வள்ளி! உன் கையை இந்தக்கிழம் தொட்டுவிட்டதென்றுகூச்சப்படாதே. ஆபத்திற்குப்பாபமில்லை. இதோ உன் கையைக் கெட்டியாய் பிடித்துக்கொள்ளுகிறேன். என்னைப்பிடித்துத்தூக்கு.

**வள்ளி:**—சரி, இந்த வம்புக்கிழவர் விடேனென்கிறார். ஐயா! மெல்லத எழுந்திரும். (சிவயோகியைத்தூக்குகிறாள்.)

**சிவயோகி:**—பெண்கள் திலகமே! நீகொணர்ந்த நீர் தேவாமிர்தத்திலும் இனிமையாக இருந்தது. அந்தச்சுனையின் விசேஷமோ அல்லது உனது அஸ்தவிசேஷமோ அன்றி எனது தாகத்தின் மிகுதியோ என் மனப்பிராந்தியோ அறியேன். ஏ! மங்கையர் சிரோமணியே! உன்னைப்

போன்ற வெப்புயர்வற்ற ... யான் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. என் உயிர்நெழுந்த இரும்பசி தணிக்க இனிய தினைமாவும் தேனும் அன்புடன் அளித்த அன்னமே! உனக்கு நீயே நிகர். அமிழ்தினும் இனிய அங்கை நீரால் என் ... வேட்கையை யவித்தும் இன்னும் என் இளைப்புத் தளர்ச்சியும் நீங்கவில்லை.

வள்ளி:—ஐயா! உமக்கு எவ்வளவு உபசாரம் செய்தாலும் உமதிளைப்பு நீங்கவில்லை யென்கிறீர். இதற்கு யானென்செய்வேன். நீர் என்னைப் புகழ்ந்தது போதும். உமது தளர்ச்சி நீங்க என்னால் என்ன செய்ய இயலும்? வயோதிகத்தால் வருந்தும் உமக்கு யாவரென் செய்யமுடியும்?

சிவயோகி:—காரினை நிகர்த்த குழலாய்! நீ என்னை அணைந்து உன் கரிவாரினை ... மோகதாகத்தை நீக்கினால்தான் எனது தளர்ச்சியொழியும். எனது மனக்குறையும் நீங்கும்.

வள்ளி:—போதும் போதும் பரிகாசம். விளையாட்டுப்பேச்சை விடும். நீர் தடியைப்பற்றி கொண்டு வருகிறீரா அல்லது நான் தினைப்புனத்திற்குப் போகட்டுமா?

சிவயோகி:—மாசில்லாத மதியென விளங்கு முகத்தாய்! யான் கூறிய தண்மையே; நீ நீர் கொண்டுவந்த சுனை தெய்வீகமானதென்று நினைக்கிறேன். உனது அங்கையினின்று நீர்பருகினதும் உன்மேல் எனக்கு அளவிடப்படாத காதலோங்குகிறது. என் கண்ணே! எனது விருத்தாப்பியமும் குறைந்தது. இனி என் மேல் அன்பு பாராட்டி அருள் செய்யாவிடில் உயிர் நில்லாது.

வள்ளி:—ஓ! கிழவரே! என்ன மிஞ்சி மிஞ்சிப் பேசுகிறீர்?

ஏதோ விருத்தாப்பியரென்றும் சிவயோகியென்றும் உமது வேஷத்தைப்பார்த்து மயங்கி இவ்வளவு உபசாரமும் செய்தேன். இனி நமக்கும் உமக்கும் ஒருபோதும் சரிப்படாது. நீர் உமது வழியே போம். நான் என் வழியே போகிறேன்.

(இரண்டு மூன்று அடி எடுத்துவைக்கிறாள்.)

சிவயோகி:—ஏ! பெண்ணே! போகாதே, நில், நில், உன்னைச்சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவளென்று நான் இதுவரையிற் கருதினேன். நீ சத்தியம் தவறுதவள் என்றும் எண்ணியிருந்தேன். உத்தமஜாதிப்பெண்கள் பொய்யுஞ்சொல்லுவார்களா?

வள்ளி:—(திரும்பிநோக்கி) என்ன கிழவரே! உமக்குப்பைத்தியம் முதிர்ந்துவிட்டதுபோல் தோன்றுகிறது என்ன வாய்க்குவந்தவெல்லாம் பிதற்றுகிறீர்? ஐயோ பாவம்! உமக்கு இந்தத்தள்ளாதகாலத்தில் புத்திமாறுடியதற்கு மிகவும் பரிதாபப்படுகிறேன். எனது பிதா நம்பிராஜாவிடத்தில் உமது சித்தப்பிரமையைப்பற்றிச் சொல்லி அதைத் தக்க வைத்தியர்களைக்கொண்டு நிவர்த்திக்கச் செய்கிறேன்.

சிவயோகி:—ஆ! பெண்ணே! நீ அப்படிச்செய்தால் எனக்கு மிகவும் சந்தோஷம். உன்னையும் நல்லபெண் என்பேன். நம்பிராஜாவும் மிகவும் நல்லவர். அவர் முதலிலேயே உன்னை எனக்குவேண்டிய சுச்ருஷைகளைச்செய்ய ஆஜ்ஞாபித்துள்ளார். நீயும் ஒப்புக்கொண்டாய். இப்பொழுது நான் கேட்டுக்கொண்டபடி செய்யமாட்டேனென்று மறுத்து என்னைத்தனியேவிட்டுப் போகிறாய். என் வயோதிக நிலையில் நான் படும் பாட்டைக் கண்

ணூற்றும் சிறிதும் மனமிரங்காதவளாயினையே. மலரினும் மெல்லிய சரீரத்தினைப் படைத்த பிரமதேவன் உனது நெஞ்சினை இரும்பினும் வலியதாய் இயற்றியதென்னே! அப்பிரமனை இங்குக்கண்டால் 'அற்றதலை போக அறாத தலை நான்கினையும் பற்றித் திருகிப்பறியேனோ?' கண்ணினுக் கினிய பெண்ணே! நீ யுன்பிதா கூறிய வாக்கைப் பரிபாலனஞ் செய்யக் கடமைப்பட்டவள். நீ என் மீது அன்பு பாராட்டி அருள் செய்ய வேண்டும். கருணை யென்பது உனக்குச் சிறிதுமில்லையோ? நீ என்னை அணைந்த மாத்திரையில் என் சரீரத்திலுள்ள தளர்ச்சி யாவும் இரவிமுன் பனிபோல அகலும். கண்ணினுக்கினிய மணியே! என்னைப்போன்ற சிவயோகிகளை உலகில் காணக்கிடைப்பதரிது. அவருக்கு இத்தகைய பணிவிடை செய்யக் கிடைப்பது அதனினும் அரிது. அத்தன்மை உனக்கு எளிதில் வலிதிற்கிடைக்குமிடத்தும் நீ பராமுகமாயிருத்தல் நியாயமோ? நீ சிறுபெண். உனக்கு என் மகிமை தெரியாது. இருக்கட்டும். நீ என்ன சாகஸம் செய்தாலும் உன்னை விடேன்.

(கிழவர் தட்டித்தடுமாறி வள்ளியின் கிட்ட நெருங்குகிறார்.)

வள்ளி:—ஓ! கிழமே! கிட்ட வராதே. உனக்கு நான் பரியாதை செய்தது போதும் போதும். இராவண சந்நியாசி போன்றவன் என்று உன்னை இதுகாறும் அறிந்திலேன்! நான் வெளி வேஷத்தை நம்பி மோசம் போனேன்:— முருகா! இதென்ன ராக்ஷஸமாயையோ! நீயே என்னை இந்த இடரினின்று காப்பாற்றவேண்டும். தனியே இந்த மாயாவியிடத்தில் சிக்கிக்கொண்டுவிட்டேன்

ஆறுமுகக்கடவுளே! உன் அடியிணையே எனக்கு ஆதரவு. உன்னையே நம்பினேன். சரணம் சரணம்.— ஏ! கிழவா! உன்னை விருத்தனென்றெண்ணி வகைமோசம் போயினேன். பார்த்தால் பசுப்போலிருந்து பாய்ந்தால் புலிபோலிருக்கிறாய். பசுவின் தோலை மேலே போர்த்த புலிபோன்ற உனக்கு இத்தனை நேரம் உபசாரத்துடன் ஆதித்யம் செய்தது அடாது, அடாது. அதனை நினைக்க நினைக்க என் மனம் மிகப்புழுங்குகின்றது. இத்தகைய வஞ்சகரை நான் கதையிலுங் கேட்டிலேன். தவக்கோலங்கொண்டு, சிவசின்னம் பூண்டு தகாதசெய்யத்தொடங்கும் புல்லறிவுள்ள கிழவ! உன் சுபாவம் இப்பொழுதன்றோ வெளியாயிற்று. யாவர் கண்ணுக்கும் பால்போலத்தோன்றிப் பருகினோர் ஆவியைக் கொள்ளை கொள்ளும் படுவிஷம்போன்ற உனது தன்மையை இதுகாறும் அறியாதிருந்தேனே. மயிர் நரைத்து உடல் திரைந்து கூனி மூன்றாம் பிறைபோல் வளைந்தும் இன்னும் உனக்குச்சிற்றின்பவாசைப்பைத்தியம் தலைக்கேறியிருக்கிறதே. இவ்வளவு மூத்தும் உனக்கு நல்லறிவில்லையோ? ஏன் வீணாகப்பிதற்றுகிறாய்? கடவுளினடியைத்தியானித்து மேலைக்காயினும் நல்லுணர்வு பெறலாகாதா? பாவமும் பழியும் மூட்டை மூட்டையாய் ஏன் சுமந்துகொள்ளுகிறாய்? மாசற்ற வேடர் குலத்துக்குக்கொடும்பழி கூட்ட நினைந்த பாதகக்கிழவா! உன் செயலை வேடர்களறிந்தால் கண்டதுண்டமாய் உன்னை வெட்டிப்போடுவார்கள். அவர்கள் ஒன்றிற்கும் அஞ்சாத தீரர்கள். அவர் விடும் பகழி நீ தாயின் கர்ப்பத்தில் ஒளிந்தாலும் உன்னை தப்பாமற் கொல்லும். மூவருன்னைக் காக்கவரினும் அவர் முனைநாள்

உன் ஆவி சுவரும். உனது மாயங்கள் யாவும் அவர்க ளிடத்தில் பயன்படா. என் பிதா உனது தீச்செயலை யறியுமுன் இவ்விடம் விட்டோடிப்போ.

சிவயோகி:—பெண்கள் திலகமே! நீ வைதாலும் என் காதிற்கு இனிமையே. எனக்கு எவ்விதமான தீங்கு நேரிடினும் உன்னை விட்டொருபொழுதும் நீங்கேன்.

வள்ளி:—அறிவற்ற கிழவா! வயோதிக காலத்தில் என் வாய ழிந்து வீண்பழிக்காளாகிறாய்? தள்ளாத காலத்தில் தள் ளாதே. உயர் குலத்தானாகிய நீ இழிகுல மங்கையை காடல் உனக்கு அடுக்குமா? நீ கொண்டது சிவயோகி யர்தம் வேடமன்றோ? அதனையேனும் மதித்தனையோ? இனி உண்மையான சிவயோகியரைக்கண்டாலும் அவரை வஞ்சகரென்று யாவரும் அயிர்க்கும்படிசெய் து சிவவேடத்திற்குள்ள மரியாதையினைக் கெடுத்த மா பாவி! வாய் மதம் பேசிய நினது வாயினைப்பிளந்து நாவினை யறுத்து கண்ட துண்டங்களாச்செய்து நின் உடலைத் துவையலாய் அடிப்பேன். அவ்வளவு சக்தி எனக் குண்டு. எனக்கு யாவர் துணையும் வேண்டாம். வலி வேட்டைக்குத் தவிலடிப்பவர் யாவர்? இந்நிலையேயோ மறுபிறப்பேயோ என்று சலாடும் உயிரோடு இருக் கும் உன்னை பொறுக்க என் மனங்கொள்ளவில்லை. அரியடிப்பவர் நரியடிப்பார்களா? இனி நீ இங்கு நில் லாது ஒழிந்துபோ.

சிவயோகி:—அடி பெண்ணே! உன்கோபம் என் பாக்கி யம். நீ அடித்தாலும் எனக்குச்சம்மதம். உதைத்தா லும் அதிலுஞ்சம்மதம். என்மேல் எவ்விதமான பிழை யிருந்தாலும் பொறுத்து மனமிரங்கி ஏழைக்கிழவனு

க்கு அருள் செய்யவேண்டும். நினது அடியிணையே எனக்குக்கதி.

'கனி யொடு சுவையுறு தொழுகிய சொற்பயி றத்தாய்! வேள்
கணையொடு பிணையென வலவு கடைக்கண் மடப்பாவாய்!
கணைமலர் பொதுளிய வெழிலி தழைத்த குழற்கோதாய்!
களிர்புன மிசைவளர் கலபம் விரித்த மயிற்பேடே!'
சினமொடு கறுவியொர் மதனனு முற்று வளைத்தானே
சிலபல மலரென விரவிய வப்பு மழைக்கூடே
நினதடி முடிமிசை நிறுவி யிருக்கு மெனைக்காகாய்
நிலவிய குறமகண் மனதி லிரக்க மிருக்காதோ. (48)

(சிவயோகி வள்ளியின் பாதத்தில் வீழ்ந்து அவள் பாதங்களை பற்றிக்கொள்ளுகிறார்.)

**வள்ளி:**— (தன் காலையுதறி விடுவித்துக்கொண்டு) ஆதித்தியருஞ் செய்தவருக்குக் காதகம் நினைத்த மகாபாதகா! சீ! என்னைவிடுவிடு— இனிக்ஷணமும் இங்கிருத்தல் கூடாது.

(அதி வேகமாய் ஓடிப்போகிறாள்.)

**சிவயோகி:**—(தனக்குள்) இந்த வேடங்கையின் மனோதிடத்தை யென்னென்றுரைப்பேன். குறவர் குலம் இவளாற்பெருமை அடைந்தது. வேடராஜன் பெற்ற பாக்கியமே பாக்கியம்.—ஆ! மங்கையர்மணியே! கற்பினுக்கணியே! பெண்ணெனப்படுவொரு நீ தான். நினது பிறை நுதலில் இருகருப்புருவங்களும் நெரிந்து எறியிறங்கக்கண்கள் சிவந்து உதடு துடிப்ப முத்துப்போல் முகம் வெயராட உரைதடுமாற உடல் கம்பிக்கக் கோபத்தோடு தோன்றிய தோற்றமு நீ யகன்றாலும்

என் கண்ணை விட்டகலாதே. கற்பின் வைப்பே! உனது கோபவார்த்தை யென்னும் அமுதைச்செவி வாயாக வுண்டு பேரானந்தமாக் கடலிலமிழ்ந்தேன். மீளவும் என் முன் என்னிருகண்களிப்ப வாராயோ? உன்னைக் காணாத இடம் எனக்குச்சூனியமன்றோ? உன்னைமான் மகள் என்னல் தகும். மானினும் வேகமாயோடி யகன்றனையே. ஆ! கண்ணிற்சிறந்த மணியே! நீயில்லாத திசையெல்லாம் இருளடைந்தனவே. நின்னை மீட்டும் யானடையுமா றெவ்விதம்?— 'முன்னவனே முன்னின்றால்' முடியாத பொருளுளதோ? பணியாதார்க்கு விக்கினங்களையாக்கிப் பணிந்தோர்க்குப்போக்கியருளும் ஆபத்சகாய அண்ணலே! நின் அடிமலர்பணிந்தேன். நீ இந்தச்சமயம் உதவி புரியவேண்டும். இவ்விடரை நீக்க வல்லோன் நீயே. ஒரு காலம் பணிந்தோர்க்குறுகண்தீர்த்தருளும் உத்தம! யான்படுந்துயரை நீக்கி வள்ளியை யென்பாற் கடிதிற் கூட்டியருள்க. இருமதமும் ஒருகோடும் தேவவொளி வீசும் பவளநிறமும் நீக்கி யும் மதத்த இருகோட்டுக் கரிய மால் யானையாய் அம்மங்கையர் சிரோன்மணி செல்லும் வழியில் குறுக்கிட்டு அவளை அச்சுறுத்தி யென்பால் அணைவிப்பாய். மும்மூர்த்திகட்கும் முதல்வ! நீயின்றி யுலகம் நிலைநில்லாதே. நினதருளன்றோ ஆன்மகோடிகளை யாட்டுவது. அண்ணலே அருள் புரிக.

"ஐயா மறை முடிவுந் தோராத வானந்த
மெய்யா ப்ரணவத் தினுட்பொருளே வேழமுகக்
கையாய் வெளியாய் கரியானே பொன்மையாய்
செய்யாய் பசியாய் பெருங்கருணைத் தெய்வமே" (49)

"பண்ணியமும் வெண்கோடும் பாசாங் குசப்படையு
கண்ணியசெங் கைத்தலத்து நாதா வொருகோட்டுத்
தண்ணிய வெண்பிறைத் தாழ்சடையாய் மெய்யடியா
ரெண்ணிய வெண்ணியாங் கீந்தருளும் வள்ளலே." (51)

மறைவழிவாழ் சூரர்தங்கண் மனத்தி னேந்தும்
வான்பொருளே வளிவெளிநீர் நிலதீ யாகி
யுறைபவனே யோமுருவே யுருவாய்க் கொண்ட
வுத்தமனிர்க் குணப்பழுத்த வுவட்டா வின்ப
னிறையமுதே நிருபலஞ்சேர் நெருசி னின்று
நிலவுமதய மூகளிறே நியல நீத்தத்
துறைவயினச் சிவமின்ற சுடர்வெண் முத்தே
தூயவெளி யூடுலவுஞ் சோதி மூர்த்தி. (52)

ஆபத்சகாயவள்ளால்! அருமருந்தனைய அண்ணலே!! அன்புடன் அருளுக. அடியிணை முடிமிசைக்கொண்டேன்.

**வள்ளி:**—(பயந்து ஓடிவருகிறாள்.) ஐயா! சிவயோகியாரே! அபயம்! அபயம்!! ஆருமற்ற தமியேனை இந்த ஆபத்தினின்று நீக்கவேண்டும். ஒரு பெரிய யானை என்னை எவ்வழியும் போகவொட்டாமற் றுரத்துகிறது. ஐயோ! என் செய்வேன்!

**சிவயோகி:**—அடி நங்காய்! பயப்படாதே. யானை எங்கே?

**வள்ளி:**—சுவாமி! இதோ வருகிறது. கன்னங்கரேலென்று ஆலகாலவிடம் உருக்கொண்டெழுந்தது போல் இரண்டு தந்தங்களும் மின்னி யொளிவீச, மேகம் பூமியில்நடப்பதுபோல் மதம் பொழிந்து மரங்களைச்சாய்த்து இதோ வேகமாயோடி வருகிறது. கரடி புலி சிங்கமாதிய காட்டுமிருகங்கள் என்னையொன்றுஞ்செய்யாவே. இந்த யானை யென்ன மாயமோ? யான் எந்த வழிச்சென்று

லும் அந்த வழியில் குறுக்கிட்டதே. என்னைத்தன் தும்பிக்கையில் வாரிற்று. தெய்வகதியாய்த்தப்பி நழுவிக் கொண்டு அதிவேகமாய் ஓடிவந்தேன் சுவாமி.

(யானை ஓடிவருகிறது.)

ஐயா! இதோ யானை விடாமற்றுரத்திக்கொண்டு வந்துவிட்டதே. சுவாமி! காப்பாற்றவேண்டும்.

(வள்ளி சிவயோகி காலில் விழுகிறாள். சிவயோகி தன் கிழவேடத்தை நீக்கி முத்துக்குமாரனாக நிற்கிறான்.)

முத்துக்குமாரன்:—அன்பிற்சிறந்த அணங்கே! அஞ்சேல்! அஞ்சேல்!! (காலில் வணங்கிய வள்ளியை வாரியெடுக்கிறான்.)

வள்ளி:—(முத்துக்குமாரன் முகநோக்கி) ஆ! என் காதல! நீயோ இங்கு நின்றனை? பிராணநாதா! அன்பா! என்னைத்துரத்தி வருந்தும் இந்த மதயானையை விரட்டிவிடு.

(வள்ளி முத்துக்குமாரனை இறுகத்தழுவி யவன் புயத்தில் மயங்கிச்சோர்ந்து சாய்ந்து விடுகிறாள்.)

முத்துக்குமாரன்:—என் கண்மணியே! இதோ யானைபோய் விட்டது.

(யானையை நோக்கி இருகரங்கூப்பிச் சிரமேல்வைத்துநின்று)

ஆபத்சகாய அண்ணல்! அருளுடைய வள்ளால!! ஐயனே! கைம்மாறில்லாக்கருணைவாரிதியே! நின்பதம் நாங்களிருவரும் வணங்கினோம். ஏகுக! ஐய ஏகுக!! (யானை வந்த வழியே போகிறது) காதலி! பயந்து சோர்ந்தனையோ? யானை யோடிப்போய்விட்டது. இதோ கண்ணை விழித்துப்பார். பயப்படாதே. அணங்கே! நீ மிகக்களைத்தனைபோலத்தோன்றுகிறது. இப்படி என்மேல் நன்றாய்ச்சாய்ந்துகொள். உன்னையிவ்வாறு வரு

த்திய பொல்லாவன்னெஞ்சன் யானே. என்மேற்கோ பங்கொள்ளாது சற்றுக் கண்விழித்துப்பார்.

(வள்ளி மயக்கம் நீங்கிக் கண்ணை விழித்துப்பார்க்கிறாள்.)

வள்ளி:—காதா! நீயோ சிவயோகிபோல் வந்து என்னை அல க்கழித்தனை? உன்னை யான் வாயில் வந்தபடி வைதத ற்குப்பொறுத்தருள்க. ஏழை அறியாமற்செய்த குற்ற த்தை என்னுயிரிற்சிறந்தவள்ளால்! பொறுத்தருள்க உன்னால் யானை வாயினின்றும் காக்கப்பட்ட யான் உன்னினின்றும்வேறோ?

மூத்துக்குமாரன்:—என் உயிருக்குயிரே! எதற்கும் கவலைப்ப டாதே. உன்மேலுள்ள எனதன்பு என்றும் மாறாத தன்மையது. வருந்தேல் இன்னமுதே! அதோ காண ப்படும் புன்னைமரச்சோலையிற்சென்று களைப்பகல இருப் போம் வா. இரவிக்குடைந்த இருட்கூட்டம் ஓரிடத் திற்குடிகொண்டதுபோல் விளங்கும் அச்சோலை மலர் பொதுளியிருக்குந்தோற்றம் மீனினம் பூத்த வானகம் போலத் திகழ்வது பாராய்! அதோ அம்மலர்க்கொம்பி னிடையே வதியும் அரசவன்னம் உடுக்கூட்டத் திடை விளங்கும் மதியமேயென்னப் பொலிவது காணாய்! அதோ! பார். ஒரு மரத்தினின்று மற்றொரு மரத்தி னுக்கு இடை வெளியின்றிப் பந்தரிட்டதுபோலப் படர் ந்து மின்னி அழகுடன் விளங்கும் சம்பங்கிக்கொடிகளி னிடையே இரண்டு கிளிகள் நீ அடைந்த வருத்தத்தினை க்கண்டு சகியாது கலங்கியாற்றி உன்னையங்கு வந்திளைப் பாறுமாறு அழைப்பது காண்பாய்!

வண்டு லாம்விழி வாச மார்குமிழ் நாசி வான்முல்லை
[நாணகைத்
தொண்டை வாய்ப்பசுந் தோகை வார்குழற் றூய காந்தளங்
[கைம்மலர்
கொண்ட பூங்கொடி மெல்லிடைப் பொழிற் கோதை தன்
[னெழிற் கோகிலப்
பண்டரும்மொழி யானினைத்தொழும் பான்மை காணுயிர்ப்
[பாவையே. ()

இனி நாமிருவருக் ஆண்டுச் செல்வோம். தயைசெய்துவா

(இருவரும் போகிறார்கள்.)

## நான்காங்களம்.

இடம்: திணைப்புனம்.

காலம்: மாலை.

பாத்திரம்: சித்திராங்கி.

**சித்திராங்கி**:—(தனக்குள்) என்ன! சிவயோகியை யழைத்துச் சென்ற வள்ளிதேவி இன்னும் ஏன் வரவில்லை? மாலைக் காலம் நெருங்கிவிட்டதே. வயது முதிர்ந்த கிழவர் எங்கேனும் விழுந்துவிட்டாரோ? தண்ணீர் குடித்துத் தாக விடாய் தீருமுன் நாவுலர்ந்து கீழே விழுந்து ஆவிசோர்ந்தனரோ? ஏழை வள்ளி என்ன செய்வாள், பாவம். தன்னந்தனியே சென்றறியாத பேதைப்பெண் யாது நினைந்து கலங்குகின்றாளோ? இத்தனை நேரத்திற்குள் பத்துத்தரம் சுனைக்குப்போய் மீண்டுவரலாமே.—ஒருகால், சிவயோகி, அருச்சுன சந்நியாசிபோன்ற கபடவேஷக்காரனோ? என்ன மாயம் செய்தனனோ? ஒன்றுந்தெரியா வள்ளியைத் தனியேவிட்டது நமது அறிவீனம். நானுடன்வருகிறேன் என்றபொழுது மறுத்து வள்ளிதேவியே உடன்வரவேண்டுமென்று பிடிவாதங் கொண்ட அந்தக்கிழவனை எண்ணுந்தோறும் என்னை யறியாமற் சந்தேகம் ஜனிக்கிறது. அந்த மாயாவிக் காரன் வலையில் வசமோசமாய் வள்ளிதேவி யகப்பட்டு என்னினைந்து யாது புலம்புகின்றனளோ? ஒருவேளை துஷ்டமிருகங்கள் எவையேனுந்தொந்தரை செய்திருக்குமோ? அப்படியென்றுரைதற் கிடமில்லையே. யானை, சிங்கம், சரபம், சார்த்தூலம் முதலிய கொடிய

விலங்குகள் யாவும் வள்ளிதேவியைக்கண்ட மாத்திரையில் விலகியோடுமே.—எதற்கும் இவ்விடம் விட்டு அவளைத்தேடிச்செல்வோமென்றால் இச்சப்புனத்தில் பக்ஷிகளும் மிருகங்களும் கொள்ளை கொள்ளையா யிறங்கிவிடுமே. யாது செய்வது? தெய்வமே! இதுவும் சோதனையோ? இன்னும் சிறிது நேரத்திற்குள் நம்பிராஜவும் நங்கைமோகினி ராணியும் இங்கு வருவார்களே. வந்து வள்ளிதேவி யெங்கே யென்றுகேட்டால் என் சொல்வது? தனியே சிவயோகியுடன் போகவிட்டதற்கு என்னைச்சீறுவார்களே.—போனவள்ளிக்கும் புத்தியில்லையா? என்னடி! இத்தனை நேரம் ஆயிற்றே. சித்திராங்கி ஒன்றியாய்த்தவிப்பாளே என்ற எண்ணங்கொஞ்சம் அவளுக்கிருந்தால் ஓடோடியும் வந்திராளோ? அவள் என்ன நிலையில் இருக்கிறாளோ நாமறியோம். வீணாக அவளை நிந்திப்பதிற் பயனில்லை. சின்னஞ்சிறிய பெண்ணைத்தனியே அனுப்ப ஒருப்பட்ட நமது புத்தியை அடிக்கவேண்டும். அதோ யாரோ வருவதுபோல் தோன்றுகிறது. நல்லவேளை வள்ளி வந்துவிட்டாள். சிவயோகியைக்காணோம். ஏதோ விசேஷமிருக்கிறது. அவளைக்கேட்போம். (வள்ளிதேவி வருகிறாள்.)

என்னடி வள்ளி! போனால் இத்தனை நாழிகையா? இதற்குள் பூப்பந்தாரம் சுனைக்குப்போய் வரலாமே. அந்தச்சிவயோகி எங்கே? நல்லது அம்மா நீ யாகிலும் வந்து சேர்ந்தனையே. நான் இங்கு ஒன்றியாயிருந்து "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணா"ய்ப்புலம்பியது உனக்கென்னமாய்த்தெரியும்? அடி அம்மா! நான் பட்டபாடு இன்னும் ஏழேழு ஜன்மத்திற்கும் போதுமடி. உன்னைத்தனியேவிட்டதற்கு

எனக்கு புத்தி கற்பித்தாய். நல்லவேளை நீ வந்து சேர்ந்தனையே, உன் தாயும் தந்தையும் இங்கு வருவதற்குமுன் என் வயிற்றிற்பாலைவார்த்தனை. இது கிடக்கட்டும். இப்படி வந்து இந்த ஊசலில் உட்காரு. வழி நடந்து களைத்துப்போயிருப்பாய்.

(இருவரும் ஊசலில் உட்காருகிறார்கள்.)

என்னடியம்மா வாயைத்திறவாமல் இருக்கிறாயே. இத்தனை பேச்சுக்கும் ஒரு பதிலுங்காணோமே. உன்னுடன் வந்த சிவயோகிக்கிழவர் எங்கே? அவரேன் உன்னோடு வரவில்லை? வாயைத்திறக்கமாட்டேன் என்கிறாயே.

**வள்ளி:**—என்னடி சித்திராங்கி! நீ படபடவென்று பேசிக்கொண்டிருந்தால் நான் என்னமாய் எதிர்குப்பதில் சொல்லுகிறது? நீ தான் வாயோயாமற்பேசுகிறாயே.

**சித்திராங்கி:**—சரிதானடி அம்மா! என்மேல் பிசகுதான். கிடக்கட்டும். சிவயோகியின் கதை என்னவாச்சு?

**வள்ளி:**—அவர் சுனையிலிறங்கி நீர்பருகினவுடன் அங்கேயேபோகவேண்டுமென்று சொல்லிப்போய்விட்டார்.

**சித்திராங்கி:**—அவர் அப்பொழுதே போய்விட்டால் உனக்கேன் இந்தவர இவ்வளவு நேரமாயிற்று?

**வள்ளி:**—என்னடியம்மா! என்னவோ கொஞ்சம் வெய்யிலில் நடந்ததால் இளைப்பாயிருந்தது. அந்தச்சுனைக்கருகாமையிலுள்ள மலர்ச்சோலையில் சிறிதுநேரம் படுத்திருக்கலாமென்று தலைசாய்த்தேன். என்னையும் அறியாமல் தூங்கிவிட்டேன். பிறகு திடீரென்று விழித்து அதிவேகமாக இங்குவந்தேன்.

**சித்திராங்கி:**—நல்லது. அடிவள்ளி! இது ஏதடி பூமாலை? மிக நன்றாயிருக்கிறதே. விதம் விதமான புஷ்பங்களை

வெகு அழகுடன் ஒழுங்காய்த்தொடுத்திருக்கிறது. நல்லது நீதான் தொடுத்தாயா? வேறு யாரேனும் தொடுத்தார்களா?

வள்ளி.—என்னடி! உனக்கு என்மேல் சந்தேகம்? எனக்கு ஆரடி புஷ்பம்தொடுத்து இந்தக்காட்டில் தரப்போகிறார்கள்.

சித்திராங்கி:—அது இருக்கட்டும். ஏன் உன்னுடைய கண்கள் கொஞ்சம் சிவப்பாயிருக்கின்றன? உன்னுடைய அதரம் வெளுத்திருக்கின்றது. என்ன காரணத்தினாலே?

வள்ளி.—வெய்யிலுடைய உக்கிரத்தினாலேயும் நடந்துசென்ற களைப்பினாலும் சுனை நீரில் முழுகினதினாலும் அப்படியிருக்கலாம்.

சித்திராங்கி:—நல்லது. நல்லது. கருநீலத்தைப் பவளமாக்கி பவளத்தை முத்தாகமாற்றும் சுனையை நான் இதுவரையிற் கண்டதேயில்லை. அத்தகைய ஆச்சரியமான சுனைநீரில் நானும் குடைந்தாடவேண்டும். அது எங்கேயடியம்மா இருக்கிறது? அந்தச்சுனையில்தான் இந்தப் புஷ்பமாலையும் கிடைத்ததோ?

வள்ளி:—இல்லையடியம்மா! எதுவும் உனக்குப்பரிகாசந்தான். அந்தச்சுனைக்கடுத்த சோலையிலிருந்த மலர்களை நான்தான் பொழுதுபோக்குக்காகத் தொடுத்தேன்.

சித்திராங்கி:—தூங்கிக்கொண்டிருக்கையில் தொடுத்திருக்கலாம். உனது தலையில் ஒழுங்காய்ப் புஷ்பங்களை அடுக்கடுக்காய் தூக்கத்தில் நீயாய்ச் சூட்டிக்கொண்டனையா? அல்லது புஷ்பங்கள் தாமாகவே உன்தலையில் ஏறிக்கொண்டனவா?

**வள்ளி:**—உன்னோடுபேச என்னால் முடியாதம்மா. நீ இப்பொழுது சில நாளாக என்னை இந்த விதமான கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கிறாய். அற்பவிஷயங்களுக்கெல்லாம் காரணஞ் சொல்லச் சொல்லுகிறாய். உனக்கு என்னைக்கண்டால் மனம்பிடிக்கவேயில்லைபோலிருக்கிறது. அது என் பாவந்தான்.

[வள்ளி தலைகுனிப்புடன் கண்ணீருகுக்கிறாள்.]

**சித்திராங்கி:**—என்னடியம்மா! உன்னைப் பழையவள்ளியென்று நினைத்துப்பேசினேன். நீ இப்படியெல்லாம் வருத்தப்படுவாயென்று முன்னமே தெரிந்திருந்தால் நான் வாயைத்திறந்தே யிருக்கமாட்டேன். ஒன்றையும் ஒளியாமல் என்னிடம் வழக்கம்போல் சொல்லுவாயென்று நம்பியிருந்தேன். அம்மா நான் செய்த பெரிய அபராதத்திற்கு என்னை மன்னித்துவிடு. இனி நான் உன்னை யொன்றும் கேட்கவில்லை. நீ நீலித்தனம் பண்ணவேண்டாம். நான் உனக்கு எந்த விஷயத்தில் அம்மா நம்பிக்கைக்குறைவாக நடந்தேன். நீ இப்பொழுது சிலகாலமாக என்னை நம்பமாட்டேன் என்கிறாய். இது ஒன்றே எனது நெஞ்சை யறுக்கிறது. இப்படிக்கெல்லாம் இருக்கவேண்டுமென்பது என் தலைவிதி.

(சித்திராங்கி கண்ணீருகுக்கிறாள்.)

**வள்ளி:**—சித்திராங்கி! என்னடி என்மேல் உனக்குக் கோபம். உனக்குத்தெரியாத விஷயம் என்னை யென்ன கேட்கிறாய்? நன்றாய் நீ யறிந்தவற்றை என்னிடத்தில் வாக்குமூலம் வாங்குவானேன்? தாய்க்கொளித்த சூலுண்டோ? வாய்க்கொளித்த வுணவுண்டோ? உன்னை யொளித்து நான் என்னசெய்கிறேன்? எல்லாந்தெரிந்த நீ என்னை இந்தவிதமாகப் பரிகாசஞ்செய்வானேன்?

**சித்திராங்கி:**—எனக்கு உன்மேல் எவ்விதக் கோபமுமில்லை. நீ உன் தலைவனைக்கண்டுவர்ததாக என்னிடத்தில் ஒப்புக்கொண்டால் நான் உன்னைக் கோபித்துக்கொள்வே னென்று எண்ணினையா? போகட்டும். இதைப்பற்றி இன் னுமொரு சமயத்திற் பேசிக்கொள்வோம். அதோ கொம்பு பேரி ஓசைகேட்கிறது. நாய்கள் குரைத்தோடிவருகின்றன. உனது தகப்பனார் வருகிறார். இப்படி வா. முகத்தைத் துடைத்துக்கொண்டு இங்கு உட்காரு.

(**நம்பிராஜன்**, மதிபூதி, மங்கைமோகினி, ஏரம்பன், சேனைத்தலைவன், வசந்தன் முதலியோர் வருகிறார்கள்)

**நம்பிராஜன்:**—குழந்தாய் வள்ளி! சுகமாயிருக்கின்றனையா? சிவயோகியார் எங்குக்காணோம்?

**வள்ளி:**—அவர் இன்று பகல் ஏதோ புண்ணியதீர்த்தங்களிற் புனலாடவேண்டுமென்று போயினார்.

**நம்பிராஜன்:**—சரி, மதிபூதியாரே! இப்படி உட்காரும். இன் னும் எத்தனை நாள் நமது வள்ளிதேவி தினைப்புனங் காக்கவேண்டும்?

**மதிபூதி:**—தினைகள் முதிர்ந்து கதிர் அறுக்கவேண்டிய சம யமாக இருந்தால் நமது குறவருக்கு அவற்றை அறுக்க உத்தரவு கொடுத்துவிடலாம். வள்ளிதேவியாரும் புனங் காவலினின்று நீங்கி நம்மனைக்குச்சென்றுவிடலாம்.

**நம்பிராஜன்:**—அடே ஏரம்பா!

**ஏரம்பன்:**—சாமி!

**நம்பிராஜன்:**—தினைக்கதிர்கள் எப்படியடா இருக்கின்றன? பார்த்தாயா?

**ஏரம்பன்:**—மகாராசா! நாளையதினம் கதிர் அறுக்காவிட்

டால் எல்லாம் கொட்டிக்கிண்டூடுங்க. கட்டாயமா நாளை அறுத்தப்புடறும் சாமி!

**நம்பிராஜன்:**—அடே எரம்பா! நாளையதினம் காலையிலேயே தினையறுக்க நமது வேடர்களுக்கு உத்திரவுகொடுத்துவிடு. நங்கைமோகினி! நமது குழந்தை இனித்தினைப் புனத்தில் இருந்து வருந்தவேண்டாம். நீயும் அவளைப் பிரிந்திருப்பதாற் கவலையுறவேண்டாம். இப்பொழுதே நீ குழந்தையை உடன் கூட்டிக்கொண்டுவரலாம்.

**நங்கைமோகினி:**—ஐயா! நானும் நேற்றே இதைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றிருந்தேன். சமயம் சரிப்படவில்லை. மேலும் சிலதினங்களாக நமது குழந்தை ஏதோ கவலையிலாழ்ந்தவள்போல் காணப்படுகிறாள். அதுவே எனக்குப்பெருங்கவலை.

**நம்பிராஜன்.**—குழந்தாய் வள்ளி! உனக்கென்ன மனக்கவலை நாங்களிருக்கும்பொழுது? புனங்காவலாற் களைப்புற்றனையோ?

**நங்கைமோகினி:**—(வள்ளியை மார்போடணைத்துக்கொண்டு) கண்மணியே! எதையேனுங்கண்டு பயந்தனையோ?

**வள்ளி:**—ஒன்றுமில்லை தாயே! என் மனத்தில் எவ்விதக் கவலையும் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. நான் முன்போலவே யிருக்கிறேன் பிதாவே! புனங்காவலால் எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லை. இன்னும் எத்துணைத்தினங்கள் இங்கு இருக்கவேண்டியிருப்பினும் எனக்கு மிகுந்த சந்தோஷமே. நான் வருந்துகிறேனென்று தாங்கள் கவலைப்பட்டு, அதுபற்றி அகாலத்தில்தினை கொய்யவேண்டாம்.

**வீரதேவன்:**—அம்மணி! தினை நன்றாய் முதிர்ந்துள்ளது. நான் என் கண்ணாற்கண்டேன்.

**வசந்தன்:**—இனி வீணாகப் பகலில் வெய்யிலிலும், இரவிற் பனியிலும் நீ வருந்தவேண்டாம்.

**நங்கைமோகினி:**—மேலும் நடுநிசியில் உலாவும் பேய்கள் ஒருவேளையில்லாவிட்டாலும் மற்றொருவேளை பயமுறுத்தும். நீ இங்கு இனி இருப்பதில் எனக்குச்சம்மதமே யில்லை. எனக்கு உன்னைவிட்டுத் தனியே யிருந்தால் பொழுதுபோகிறதேயில்லை.

**வள்ளி:**—அம்மா! தாங்கள் எப்படிச்சொல்லுகிறீர்களோ அப்படி நான் கேட்கிறேன்.

**நம்பிராஜன்:**—ஏரம்பா!

**ஏரம்பன்:**—சாமி!

**நம்பிராஜன்:**—இன்றிரவே நமது வேடர்களை யிங்கு வந்து இருக்கச்சொல். நங்கை! நீ குழந்தை வள்ளியை யழைத்துக்கொண்டு அரண்மனைக்குப் போ. ஏரம்பா! நீ இராணியம்மாஅவர்களுடன் துணையாகப்போ. நங்காய்! பிரான்மலை வேடர்தலைவனுக்கும் மயூரகிரி கிராதபதிக்கும் உண்டான விவாதத்தை நிவிர்த்திசெய்துகொள்ள எண்ணி அவர்கள் நம்மை மத்தியஸ்தராக இருக்கவேண்டிக் கொண்டு நமது மலைக்கு வந்துள்ளார். அவர்கள் அதோ தெரிகிற சந்தனச்சோலையில் நமது வரவை யெதிர்பார்த்திருக்கின்றனர். தையால்! நீ நமது குழந்தையுடன் இருள் படுமுன் விரைவில் அரண்மனை சேருக. நானும் சீக்கிரமாய் அவ்விவாதத்தை யொழுங்குபடுத்திவிட்டு

வந்து சேருகிறேன். மந்திரியாரே! நாம் போவோம் வாருங்கள்.

(நம்பிராஜன் மதியுகி வீரசேகரன் வசந்தன் முதலியோர் போகிறார்கள்.)

நங்கைமோகினி:—சித்திராங்கி! நான் போகும் வழியில் அதோ தென்படும் சுனையில் நீராடப்போகிறேன். அச் சுனையில் நீராடி வெகுநாளாயின. நான் நீராடி முடிப்பதற்குள் உங்கள் விளையாட்டுக்கருவிகளை யெடுத்துக் கொண்டு வள்ளியையும் அழைத்துவா. எனக்குத் துணையாக ஏரம்பனை யழைத்துப்போகிறேன். நீங்கள் சீக்கிரம் அங்கு வந்துசேருங்கள். அடே ஏரம்பா! நாம் முன்னாலே போவோம் வா.

(நங்கைமோகினி ஏரம்பன் போகிறார்கள்.)

சித்திராங்கி:—அம்மா வள்ளி! ஏன் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்? இது என்ன பிரமை பிடித்தவள்போலிருக்கிறாயே! இருள் விழுவதற்குள் நாம் போகவேண்டாமா?

வள்ளி:—என்னடி நான் படும் பாடறிந்திலையோ? இப்புனத்தைவிட்டுப்போவதென்றால் எனக்குக்கால் எழவில்லையே! என் செய்வேன். என் மனங்கொள்ளை கொண்ட எனது தலைவன் இங்கு வரும்போது என்னைக்காணாவிடில் என்னை யன்பிலி கொடியள் என்றிகழுவனே. அவனை விட்டெங்ஙனம் யான் பிரிவேன்?—அன்பேவுருவெனக்கொண்ட ஆனந்த அழக! உன்னைப்பிரிந்து யான் உய்யுமாறுமுண்டோ? சுனையின் கரையில் யானை

வாய் நின்றுங் காப்பாற்றிய தருணோடை வள்ளால்! இப் பொழுது உன்னைவிட்டுப்பிரிதல் என்னுஞ் சூக்ஷமாகிய பெரிய மத்தசுணத்தின் வாயினின்றும் என்னைக் காவா யோ? ஐயனே! இவணின்றும் யானை நீங்கியதாக நினைத்து என்பாலுள்ள நின் அன்பினை அறவொழிப் பாயோ? கருணை ததும்பும் நினது திருமுகத்தின் பே ரழகு வைப்பட்ட யான் நின்னை மறத்தலாவண்டோ? கண்ணிறைந்த காதல! என்பாற்பிழை யிறுதியில்லை.

அன்பெனு மமுதந் ததும்பிய மதியே ரானனத் தண்ணலே
யடியேன்
உன்பிரி வாகுந் துன்பவா ரிதியி னூடமிழ்ந் தயங்குத
லொழிப்பாய்
கொன்பழி கொள்ளே லெம்பெரு மானே குறியிடம் வர
லொழித் தகறல்
என்பிழை யன்றென் றெவருனக் கிசைப்பா ரேந்தலே!
வேந்தர்நா யகனே. (54)

ஏ மானினங்காள்! நான் மானின் மடமகள் என்பதை மறவாமற்கொண்டு என்மீது கருணை பாராட்டி, எனது தலைவன் ஈண்டுவரின் அவன்பால் என் துயரினை விளம் பக்கேட்டுக் கொள்ளுகிறேன். தேனினுமினிய கான மிசைக்குங்குயில்காள்! நம்மையிவண் வரவொட்டா மல் யான் தகைந்த பிழையைப்பொறுத்து எனதன்பன் மாட்டு, இவணின்றகறல் என்பிழையன்றென்று இயம் புங்கள். மரகதத்தாலியன்ற திருமேனியும், பவள த்தாலியன்ற வாயுங்கொண்ட கிளிகாள்! உம்மை யான்

எனது சொல்லாலுங் கல்லாலுங் கடிந்தமைக்குப்பொறுத்தருள்புரிவீராக. இப்புனத்தில் தினை கொய்தபிறகும் நீங்கள் தினைத்தாலில் இருந்து என் தலைவர்வந்தால் "பேயோடு பழகுதினும் பிரிதலரிதரி" தென்றான்றோர் தம்மொழியினை நினைப்பூட்டுங்கள்.

(பாடுகிருள்.)

பதியினை யீங்கொண்டீரெனி னீர்
பாங்கோ டோதுவீரிம்மா துயரினை — பதியினை

சகனமே சார் சகுனமே தவன
எகினமே கலை மானினமே — பதியினை

கனிமொர்ந்து வேனிழை மாவேதனையை
புனலின்ற தாதையி ஞெராணையினு
லனலிடு மெழுகென மனநெக யான்படு
மினலினை யுணராதாத னுரியஸ்ரீ — பதியினை

"சினவெங் குறவர்பின் செல்லரும் பாவியைத் தின்சிலம்பர்
வினவும் பொழுதென் விளம்புங் கொல்லோவினை யாடுசெவ்வி
யினமும் புனமு மிதணுமஞ்சார லிருவியுமை
வனமுஞ் சுனையு மருவுமர் தாரமு மெனவலுமே."

சித்திராங்கி:—அம்மா! வள்ளி! நீ எதற்கும் கவலைப்படாதே. முருகக்கடவுள் இருக்கிருர். ஒரு குறைவும் வராமல் நம்மைப்பார்த்துக்கொள்வார். உனது தலைவன் நமதூர்க்கு வந்து உன்னைவலுவில் மணந்து போவான் என்பதற்குச்சிறிதும் ஐயமில்லை.

(பாடுகிருள்.)

காறு லாவிய சோலை யேகடிக் காவின் வாய்வரு மாலையே
தேறு லாவிய வார மேமது சேரி தழ்க்கன்னி காரமே
வாறு லாமன்னப் பேடை யேமலர் வாரி சந்திக ழோடையே
போன வாறன்பர்க் கோது வீரினிப் போது வேந்துயர் காது
வீர்.

வள்ளியம்மா! வெகுநேரமாயிற்று. அன்னை சுனைக்கரையில் நம்மை எதிர்பார்த்து நிற்பாள் சீக்கிரம் வா போவோம்.

(இருவரும் போகிறார்கள்.)

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

# அங்கம் ௪

## முதற் களம்.

இடம்: தினைப்புனம்.

காலம்: மாலை.

பாத்திரம்: முத்துக்குமாரன்.

**முத்துக்குமாரன்:—**

யாதுகொ லம்ம! யாதுகொ லம்ம!
தாதுகுங் காமர் மாதவிப் பொதும்பர்
அருமருந் தனைய வொருபெருந் தலைவி
யின்றி மதியொளி குன்றிய வாறோ
சவிதிக ழம்புயம் குவிதரும் பொய்கையோ
கண்ணிலா முகமோ மண்ணண்டா மணியோ
னைப்பொலி விழந்த தியாதுகொ லம்ம!
இணைப்பிடி யோடு மனப்பெடை நாணச்
சீறடி பெயர்த்து மாறி மாறிச்
சிலம்புகள் புலம்பிச் சிற்றிடை படர்துயர்
கலப்படத் தெரிப்பவு நாடா தென்முற்
போதரு நங்கையிப் போதெதிர் வாராத
தியாதுகொ லம்ம! யாதுகொ லம்ம!
தமிழினு மினிய வமிழ்தமூற் றிருக்குங்
குமுதவாய் மலர்த்துங் குறுநகை நிலவா
லென்கட் சகோர மேமுற வெனது
புன்கண் டவிர்க்கப் புகுந்த நங்காய்!

கர்பகம் படர்தக் தர்பகம் பூத்த
காமவல் லியினுங் காமரும் வல்லியே!
நினைத்தணங் தொருசிறு கிளிடமுந் தாழ்க்கிலேன்
எனக்கு னுரைத்திட் டிசைத்தலு நீதிகொல்?
நீதுசேர் தரும்பிழை யாதுகொ லியற்றினென்
றுதோ வன்பும் ஒழுக வணங்கே.
விருத்த வேதிய வேடம் பூண்டனை
வாத்திய தன்மையைக் கருத்தி லமைத்தோ
சுனைக்கரை யிடத்துச் சினைக்கனிற் றின்வா
யலக்கறித் தேனென வன்பு திரிந்தோ
நின்சினம் பூண்டனை நீத்தனை சொல்லோ?
வாள்விழி கொண்ட வதன நங்காய்!
அன்பே யருவா யருளே யுயிராய்
என்பா லணைந்தென் னின்னுயிர்க் குயிரே!
நின்னைப் பிரிந்தியா னின்னுமா றுளதோ?
காந்துநின் றென்பெருஞ் சலஞ்சல் சண்டும்
வருந்து மென்முன் வாரலை யென்கொல்?
வாளடைச் சக்கிர வாசம்வார் சிறைப்படத்
தேனிமிர் கமலத் திருமுகை யொருகா
ணிரினின் றுயங்க நிமிர்ந்து நெருங்கிய
சீரிய கொங்கைத் திருவே! நீயிலாத்
திசைகள் பாயிரு ளிசைய நின்றனவே
கொண்டலைக் காலாற் குலைதர வுகைக்குந்
தண்டருங் கூந்தற் றையால்! விசும்பில்
ஒளியா மின்னும் ஓடா மானும்
எளியே னின்னை யேயுமென் றிசைத்த
அம்மொழி பொய்ம்மொழி யாக்க நினைந்தோ
செம்மது வார்குழற் றேமொழி யரம்பையர்

சூரர மகளிர் துணைக்கொடு நின்னைப்
பாரதி யாவகைப் பற்றி யொளித்துச்
சிறைசெய் தனரோ? தேடருஞ் செல்வமே!

(வள்ளியின் உருவெளிப்பாடு கண்டு அதனை நோக்கி
யியம்புகிறான்.)

ஆகா!--
திங்களைத் தினமுந் தேய வலைத்த
பொங்குவாண் முகத்த நங்கையர் மணியே
இதுகா றம்ம! என்கொலோ தாழ்த்தனை?
மதுவார்ந் தொழுகுநின் மலர்முகங் காணு
தலமரு மென்னை யணைத்திடா தென்னோ
புலவிபூண் டியாதும் புகலாது நின்றனை?
ஈதோ வல்லி! நின் னிணையடி தொழுதேன்
வாரோ இனியும் வருதி யம்ம!

(வணங்கி நோக்க யாண்டும் உருவெளிப்பாடு காண்கிறான்.)

ஒகோ! ஈதென் பாகார் மொழியாய்!
யாண்டு நோக்கினுநின் னெழிலுரு வாயிரங்
காண்டகத் தோன்றுங் காரண மென்னையோ?
இந்திர ஞால மியற்றுகின் றனையோ?
சந்திர வதனச் சுந்தர வல்லீ!
அற்புத விஞ்சையு மட்டமா சித்தியும்
பொற்புறக் கற்றநின் விற்பனத் திறத்தைக்
காட்டு மமயங் கண்ணே! இதுவோ?
வாட்ட மறிந்திலை

(உருவெளி மறைகின்றது.)

மாயம்! மாயம்!

விண்வாய் மறைந்து விரைந்தே கினையோ ?
கண்வா யமர்ந்து கரந்துநின் றனையோ ?
சீச்சீ ! இவையெலாந் திருவுருத் தோற்றமே.
எச்சே யிவற்று லெனதளங் கவன்றநம்.
யார்கொ லீக்குவர் யான்படும் பாட்டை?
"யாரொடு சோவேன் யார்க்கெடுத் துரைப்பேன்?"
மாரனு மையோ! வாங்கிய சிலையின்
மலர்க்கணை தொடுத்தா னலக்கணு மிகுத்தது.
மாலையும் வந்தது மாலையும் தந்தது.
மதிய மிலங்க மதியுங் கலங்குமால்.
இன்னுயிர் தின்ன வென்ன வெழுந்த
அராவெனத் தென்றல் விராஅய் வீசுமே.
ஆர்கொ லென்னுய ராற்றுவா ரந்தோ ?
செங்கால் வெள்ளைச் சிறையனப் பெடையே!
அங்கா வாழும் பைங்கிளிப் பிள்ளாய்!
மங்கா நீனிற மயிலே ! குயிலே !
எங்கோ என்னரு மின்னுயி ரிறைவி
எகினாள் ? நும்மை எழிலார் நடையாற்
பாகன மொழியாற் சாயலாற் பண்ணால்
வென்றது மன்றித் துன்றுறு தகலக்
கைக்கவண் கல்லா லொக்க வோட்டிய
அக்குறை பொறுது மைக்குழன் மானை
இந்நின் றகற்றினீர் கொல்லோ ? இயம்பீர்
பன்னிய நுந்தம் பகைமை மறந்தே.—
என்னே யிவையு மிசைத்தில வொன்றும்.
எவர்தா மென்றுய ரீர்குவர் ஐயகோ ?
நவையற மலர்ந்த நாண்மலர் மணத்தைப்
பாங்குளார்க் குணர்த்தும் வேங்கையின் பாங்கர்

உயிரினை யிழந்த வுடல்போல் என்போல்
இயலிழந் திருக்கு மிதனை! பரிக்கும்
நீங்கரும் பனுக்கிய செஞ்சொனு யகத்தைக்
கோங்கரும் பலரக் குவிமுலை சுமந்த
தையலை யென்பாண் மையலை யாக்கிய
மங்குல் சூழுந் திங்கள்வாண் முகத்த
வல்லியைக் கோமள வல்லியைக் கண்ணிற்
காண விளிக்குங் கற்பகக் கனியை
மாண மயக்கும் மலர்வாய்த் தேனை
இரவி வன்மா இயலுடன் வரைந்த
உருவ வோவியம் உயிர்த்தது மாணத்
திப்பியந் திகழு மொப்பிலா வமுதை
யாண்டுநீத் தனையோ? யாண்டுநீத் தனையோ?
சில்வரித் தடங்கண் வல்லி யேகிய
திசையினை யேனுந் தெரித்திடே யின்றுபோல்
ஊழி தோறும் வாழிநீ யிதனை!

(சிறிது மௌனம்.)

வாளா நின்றிவண் டெறிதே கரைதலென்?
மீளா ளவளும் மாளா தூயிரும்
ஆதலி னருமருந் தன்னவ ளத்தைக்
காதல னேடலே கடனல்
போதுவோ மினிநாம் புலம்பு நெஞ்சமே

(முத்துக்குமாரன் போகிறான்.)

# இரண்டாங்களம்.

இடம்: கன்னிமாடத்தின் உபரிகை.

காலம்: யாமம்.

பாத்திரங்கள்: வள்ளி, சித்திராங்கி.

**சித்திராங்கி:**—என்ன அம்மா வள்ளி! இப்படித் தூக்கமொழிந்திருப்பாயேல் உன் உடம்பு என்னாகும்? இன்றிரவு உணவு சிறிதுங்கொள்ளாமல் ஏக்கங்கொண்டனையே. கவலையிலாழ்ந்துவிடலாமா? மனோவியாதியைக் காட்டிலுங் கொடிய நோய் உலகிலுண்டோ? சிதையினுஞ்சிந்தை தீது என்னுமான்றோர் சொல் பொய்யன்றே! பாலமுட்கொள்ளாமற் பட்டினியாய்க் கண்விழித்திருந்தால் உனது தேகம் தாங்குமோ? சற்றே மனம் பொறுத்துக் கவலைக்கிடங்கொடாமல் இருக்கமாட்டாயோ? அம்மணி, இப்படி யென்மேற்சாய்ந்துகொண்டேனும் சிறிது நேரம் தூங்கு.

**வள்ளி:**—சித்திராங்கி! எனது அன்பனைப் பிரிந்து தனித்துறைய என்மனம் பொறுக்குமோ? அவனைக்காணாத கண்ணும் அவன் இன்சொல்லைக் கேளாத செவியும் அவனை அணையாத உடலும் அழியத்தக்கவையன்றோ. அம்மா! சித்திராங்கி! நீ எனக்காகப்படும் பாட்டிற்கு நான் என்ன கைம்மாறு தரப்போகிறேன்? என்பொருட்டு நீ தூக்கம் கெட்டுக் கண்விழித்திராதே. நீபோய்ப்படுத்துறங்கு. நான் அனுபவிக்கவேண்டியது என் தலைவிதி. நீ வருந்தாதே அம்மா.

**சித்திராங்கி:**—நீ படுந்துயரினும் உனது சொல் என்னை மிக வருத்துகின்றது. உன்னைவிட்டு ஒருகணமும் யான் பிரிவேனோ? நீ தனியே வருந்தி நிற்கையாம் நான் விசாரமின்றிப் படுத்துத்தூங்குவனும். நன்றாயிருக்கிறது. என்னோடு இத்தனை நாள் பழகினும் என் சுபாவம் இப்படியென்று கண்டாயே. போதும். போதும். நீ உனது காதலனுடன் கூடி யின்புறுங்காலமன்றோ யான் கவலையின்றிக் கண்படுங்காலம். திட்டிவாயிலின் வழியாய் உட்புகுந்து உனது மனத்தைக்கவர்ந்து சென்ற அப்பெருந்திருடனைக்கண்டு நீ படுந்துயரையவன்பாற் சாற்றியவனைப்பிடித்து உன்னிடம் சேர்த்திடாமல் எனக்குத் தூக்கமும் வருமோ?

**வள்ளி:**—சித்திராங்கி! என்னவென்று சொல்வேன்? சற்றுமுன் உறக்கம்வருமோவென்று சிறிது நேரங்கண்ணை மூடிப் படுத்தகாலையில், மந்தகாசத்தால் மதிமுகம் ஒளிவீச எனது தலைவன் என்முன் நின்றதாகக் கனவுகண்டேன். உடனே என்கண்கள் விழித்து எனக்குக்கெடுதி விளைத்தன. கஷ்டகாலத்தில் நன்மையுந்தீதே. இச்சமயத்தில் யான் படும்பாட்டைக்கண்டு என்னுடன் அனுதாபப்படும் நீ என் கண்ணிற்சிறந்தவளென்பதற்குச்சந்தேகமேயில்லை.—என்னடி சித்திராங்கி! சந்திரிகை சுடுமோ? நிலவு அனல் வீசுதல் என்பாபமே. கரும்பு கசத்தல் வாய்க்குற்றந்தான். அன்பரைப்பிரிந்தார்க்கு நிலா அனலினுங்கொடிதென்றறிந்தேன்.—ஆ! மதியே! நீ பிறந்த இடமும் குளிர்ச்சிவாய்ந்தது. உடன்பிறந்ததும் அமுதம். அப்படியிருக்க உனக்குச்சுடுந்தன்மையெங்ஙனம் வாய்ந்தது? வடவையின் வாசனையோ? விடத்தின் சேர்க்கையோ? ஆயினுமென்? இந்த உடல்

சுடத்தக்கதே—அடி! சித்திரை! இந்தச்சந்திரகாந்தக் கல்லும் அந்தக்கொடிய மதிக்கு உருகுகின்றதே. ஏழையாகிய யான் படுவதைச்சொல்வானேன்?—இரவிற்றாக்கரின்றி யென்போலவேயும் வெண்டிங்காள்! சீதேவியோடு மூதேவி தோன்றியதுபோல் அமுதத்துடன் பிறந்தாயே. உலகில் நன்மையோடு தீமையும் கலந்து நிற்கும் என்பதற்கு இதுவொரு சான்றோ? காரிருளை விலாப்புடைக்க விழுங்கியோடும் மதியே! பேதைப்பெண்ணாகிய என்னை வருத்துதல் நினைக்கழகோ? உணவிற்குந்தகுந்த ஒழுக்கம் என்று உலகோர் கூறுவது உண்மைதான். ஒருகைவிரல்கள் ஒன்றோடொன்று ஒவ்வாததுபோல ஒரு தாய் வயிற்றுதித்த மக்களும் ஒவ்வாமல் இருத்தல் சகஜமே. சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி, முந்தருவுடன் பிறந்தனையே மதியே, என் காதலனை யெனக்கு ஈண்டுத்தரக்கற்றனையோ? அஃதின்றி விடம் போலழற்ற வறிந்தாயே.

(இரங்கிப்பாடுகிறாள்.)

"தாய்வா யடைந்து பிரிந்தலையை
மோதி மோதிச் சலித்தழுதாறக்
காய்வாய் நிலவே யுடன்பிறந்தா
ரிருந்து வாழுங் கடிமனையை
நீவா னெழுந்து வந்தழிப்பா
யென்றோ லந்தோ நிலையின்றித்
தேய்வாய் நின்னே டியைபில்லா
வென்னை யென்ன செய்யாயே." (58)

"இன்றோ ருலகி லெனக்கொன்று
பிறர்க்கொன் றாகி யிருக்கின்றாய்

நன்றோ வனக்கு மதியமே
ஞாயிறே போல் வாழாமன்
முன்றோ கையர்கள் யாவரையு
மொப்பக் காணா முயற்சியா
லன்றோ தேய்ந்து போகின்றா
யந்தோ வதனை யறியாயோ" (59)

கடலிற் பிறந்த விடமிரண்டிற்
கரிய விடத்தைக் களத்தடக்கும்
விடையி னிறையு மிகவெருவி
வெள்ளை விடமா கியவுன்னைச்
சடையி லமைத்தான் கரியஞ்சந்
தன்னில் வெண்ணஞ் சுயர்ந்ததோ
அடைய விடவா யரவுண்டு
மாற்றா துமிழ்ந்த வழுன் மதியே! (60)

மலையை நிகர வலைமோதும்
மான வேலை யேந்துதலான்
இலகு மிறைவன் றிருவிழியி
னெழில்சேர் பொறியாத் திகழ்தலினாற்
குலவு மெமது குமரேசன்
குணமே பெற்றா யெனவிருந்தேன்
நிலவுங் கருணை நீங்கியநீ
நேரோ வவற்கு நிலாமதியே! (61)

கருமை மன்னும் பெரும்பிணியுங்
கயரோ கமுஞ்சார் பாவியுனை
யருமை யிறைதன் சிரத்தணிந்து
மகன்ற தோரின் சிற்றியல்பு

பெருமை சிறிதும் பாராமற்
　　பெண்ணு மெனையும் வாட்டுதியால்
தரும மறியாச் சழக்கருக்குச்
　　சாற்ற லென்னே தீமதியே! (62)

**சித்திராங்கி:**—அம்மா! வள்ளி! இப்படி நீ கரைந்துபுலம்பலால் உன்றொண்டை வீங்கிப்போமே யொழிய வேறொன்றுமில்லை. இந்தச்சந்திரகாந்தமேடையின்மேற் சாய்ந்துகொள். நான் விசிறுகிறேன்.

(மயிற்கிளிற்கொண்டு வீசுகிறாள்.)

**வள்ளி:**—சித்திராங்கி! போதும். போதும். எனக்கு இந்தக் காற்று வெறுப்பாயிருக்கிறது. நண்பகற்பொழுதிற் பாலையின்மேலடித்துவருஞ் சண்டமாருதம்போல் இத்தென்றலே என்மேனியை வாட்டி வெதுப்புகின்றது. இதுவே போதும். ஏ! தென்றலே! உனக்கு யான் செய்ததீங்கென்னே?

(இரங்கிப்பாடுகிறாள்.)

மலயப் புலியாற் பயின்றுவரும்
　　மந்தா நிலமே! மதன்றேரே!
மலைவிலாளி யெரிவி ழியான்
　　மாளா திருந்த வாறென்னே?
குலையு முயிர்மீ ளவுமடைந்த
　　கொடிய மதன்போ னீயுமுயிர்
நிலவ வருள்பெற் றனையோ? தீ
　　நினைவி னோர்க்கு மருளுண்டோ? (63)

ரோர னேபோ லுடல்பனித்துத்
　　தோன்று மந்த மாருதமே!

*மார வேளைப் பொடிகண்ட*
*வள்ளல் வாழுங் கைலையிற்*
*சேரும் வேளை யவன்விழியின்*
*தீயா லெரிந்து தீராயோ?*
*ஆர மாரும் விடவரவ*
*மயின்று நின்னை யழிக்காதோ?* (64)

**சித்திராங்கி:**—வள்ளி! உன்னைப்போல் மாரவேதனைப்படுபவரைக்கண்டதுமில்லை கேட்டதுமில்லை. சற்று நேரம் சும்மா வாயைமூடிக்கொண்டு தூங்காயோ? கண்ணைமூடியிருந்தால் தன்னாலே தூக்கம்வரும். கொஞ்சம் படுத்துக்கொள்.

**வள்ளி.**—போடிபோ! சித்திரை! மாரவேதனையோ மரணவேதனையோ? என்னைத் தொந்தரைபண்ணாதே. வேணுமானால் நீபடுத்துத்தூங்கு. ஆ! மன்மதா! உன்னை மநோபவன் என்பார்களே! என்மனம் என்னிடத்தில் இல்லாதிருக்க நீ யாண்டுதித்தாய்? மேருமலையை வில்லாகக்கொண்டு, சேடனை நாணாகப் பூட்டித்திருமாலையே அம்பாகக்கொண்ட சிவபெருமானுடன் வல்லவனுக்குப் புல்லுமாயுதம் என்று ஒருபலமற்ற கரும்பு வில்லாகவும், வண்டு நாணாகவும், அம்பு மலராகவுங் கொண்டெதிர்த்த அதிபராக்கிரம தீரனாகிய நீ ஒன்றுமறியாப் பேதைப்பெண்ணாகிய என்னை யெதிர்த்து வருத்தலாமோ? பெண்பாவம் உன்னைச் சேராதோ?

(இரங்கிப்பாடுகிறாள்.)

*முன்ன மீசன் நுதல்விழியின்*
*மூண்ட தீயான் முடிந்தனைகாண்*
*பின்னொர் மாது வேண்டுதலிற்*
*பிழைத்தா யன்றே மாதர்வயின்*

மன்னு மன்பு நினக்கிலதோ
    மாரனே யான் மாதலவோ
என்னை யென்றே வருத்துதியா
    லீர மென்ப தறியாயோ ? (65)

சித்திராங்கி:— வள்ளி! நீ இந்தவிதமாகப் புலம்புவதைப்பார்க்கப்பார்க்க எனக்குத் துக்கம் அடைத்துக்கொண்டு வருகிறதம்மா! எனக்கு அழுகை வருகிறது. இதோ! இப்படிப்பராக்காய் வேடிக்கையாய் இருப்பாயென்று உன்னையிங்கு அழைத்துவந்தேன். கிணறு வெட்டப்பூதம் கிளம்பினதுபோல் நல்லது நினைக்க நஞ்சாய்விளைந்தது. அதோ! அந்தச்சகோரபக்ஷி சந்திரனிலிருந்து வருங் கிரணங்களையுண்டு களித்து ஆனந்தமாய்ப் பாடுவதுபார்.

வள்ளி:— அடி! உனக்கு அதன் குரல் நன்றாயிருக்கிறது போலும். என் காதிற்கு அது நஞ்சினிடைத் தோய்த்த நாராசம் ஏற்றியதுபோலக் கர்ண கடோர மாயிருக்கிறது. இப்பொழுது என் கையிற் கவணும் கல்லும் இருந்தால் அதை ஒரேயடியில் விழுத்திவிடுவேன்.

(இரங்கிப்பாடுகிறாள்.)

வெம்மை காலும் விடமதியின்
    விலகுங் கதிர்த்தீ யினையுண்டு
விம்மி வீங்குஞ் சகோரமெனும்
    வெய்ய புள்ளே! விடப்பிலிற்றுஞ்
சும்மை மிகுத்த நினதுகொடுந்
    துண்டங் கிழிந்து தொலையாயோ ?
அம்ம குருகு பிளந்தோன்கை
    யயிலா னின்னைப் போழானோ ? (66)

சித்திராங்கி:— அம்மா! சிறிது நேரம் எழுந்து உலாவுவோம் வா. இங்கு இருந்து இப்படி வருந்துதல் சரியில்லை.

இப்பொழுது உனக்கு எதைச் சொன்னாலும் விரோதமாயிருக்கிறது.

(இருவரும் எழுந்து உலாவுகிறார்கள்.)

அதோ! பார்த்தாயா நீ வைத்து வளர்த்த முல்லைக்கொடியை. அது எவ்வளவு அழகாய்ப் புஷ்பித்து அசைந்தாடுகின்றது! அதனைக் கண்டாயினுங் களிகூரமாட்டாயோ?

வள்ளி:—தலைவலி தனக்கு வந்தாற்றான் தெரியும். உன்னோடுபேசிப் பயனென்ன?—ஆ! முல்லைச்செடியே! நீ என்னைப்போல் விளங்குகின்றாயே.

(இரங்கிப்பாடுகிறாள்)

வண்டு வீழ வலர்பொருளி
மந்தா நிலத்தாற் றுவண்டொசிந்து
மண்டி வீழ்கண் ணீருகுத்து
வருந்து முல்லை வான்கொடியே!
பண்டை நிலைபோய்ப் பரதவிக்கும்
பாவியேன்போற் காதலனை
விண்டு நீயுங் கலங்கினையோ?
வேறோ? ஒருசொல் விளம்பாயோ? (67)

சித்திராங்கி:—வள்ளி! உன்னை நான் இங்கு அழைத்துவந்தது என்மேற் பிழைதான். அடியார்க்குத்துன்பத்தை நீக்கி யின்பத்தை யாகவியருளும் முருகா! இவள் படுந் துயரினுக்கிரங்காயோ?

மலைமிசை வதியும் வாழ்க்கையா லொளிரும்
வண்டடை யாதகைம் மலரால்
கலைதருங் கனியாய் நின்றதா னினையிக்
கன்னியு மொத்தென ளாறு

நிலையடை யாத குறையுள நதனைத்
தவிர்த்தினி நாண்டருள் புரிவாய்
குலவிய வடியார்க் கினிய வமுதே!
குமரனே யமரர்நா யகனே! (68)

இங்கே பனி அதிகமாய்ப் பெய்கிறது. அதோ செவிலி யும் உன்னைத் தேடிக்கூப்பிடுகிறாள். இனி நாம் இங்கி ருக்கக்கூடாது. படுக்கையறைக்குப்போவோம் வா.

வள்ளி:—முருகக்கடவுளே! ஆருமற்ற எனக்கு நீயாயினும் கருணை செய்யாயோ?

“வாரிமீ தேயெழு திங்களாலே
மாரவே ளேவிய அம்பினாலே
பாரெலா மேசிய பண்பினாலே
பாவியே னாவிம யங்கலாமோ?
சூரனின் மார்புதொ ளைந்தவேலா
சோதியே தோகையு மர்ந்தகோவே
மூரிமால் யானைமு கத்தனார்பா
மூவர்தே வாதிகள் தம்பிரானே!”

(இருவரும் போகிறார்கள்.)

# மூன்றாங்களம்.

இடம்: அரண்மனையந்தப்புரம்.

காலம்: காலை.

பாத்திரம்: நங்கைமோகினி, சித்திராங்கி.

சித்திராங்கி:—தாயே! நேற்றிரா வள்ளியம்மை தூங்கவே யில்லை. ஏதோ பித்துப்பிடித்தவள் போலிருக்கிறாள். சென்ற சிலதினங்களாக எவ்வித விளையாட்டிலும் அவளுக்கு மனஞ்செல்லவில்லை. உணவுஞ்சரியாக உட்கொள்ளனென்கிறாள். நேற்று முழுதும் பாலும் உண்டிலள். இரவெல்லாம் வாயோயாமற் பிதற்றிக்கொண்டிருந்தாள். நான் எவ்வித உபசாரஞ்செய்தாலும் ஒன்றிலும் அவள் மனவமைதியடையவில்லை. நான் இரா முழுதும் இமைகொட்டவேயில்லை. இந்த விஷயத்தை உங்களிடத்தில் சொல்லாவிட்டால் என்மேல் கோபங்கொள்வீர்களென்று பொழுது விடிந்ததும் இங்கு வந்தேன்.

நங்கைமோகினி:—என்னடி சித்திராங்கி! நேற்று நன்றாயிருந்த குழந்தைக்கு என்னடி வந்துவிட்டது? இப்போது என்னமாயடி யிருக்கிறாள்?

சித்திராங்கி:—இப்பொழுதும் அப்படியே பிரமைபிடித்தவள் போலிருக்கிறாள். படுக்கையை விட்டு எழுந்து ஒருபுறம் தனிமையாய் நின்றுகொண்டு சிரிப்பதும் அழுவதுமாய் இருக்கிறாள். காலையுணவு உட்கொள்ள மாட்டேனென்று பிடிவாதம் பண்ணுகிறாள். அதன்மேற்றான் இங்கு

உங்களிடம் தெரிவித்தால் ஒரு வேளை நீங்கள் சொல்லும் பக்ஷத்தில் அவள் கேட்பாளோ என்று எண்ணி வந்தேன். அவள் உடம்பு அனலயுடம்பாய் விட்டது அம்மா!

(சித்திராங்கி கண்ணீர் சொரிகிறாள்.)

நங்கைமோகினி:— ஏடி! சித்திராங்கி! அவள் தினைப்புனத்தில் காவல் செய்திருந்தபோது ஏதையேனுங் கண்டு பயந்தனளோ? என்னடியம்மா! அவளுக்குத் திடீரென்று வந்துவிட்டது? நீ போய் அவளை நான் அழைத்து வரச் சொன்னதாக அழைத்து வா. எனக்குக் கைகால் ஓடவில்லை. இன்னது செய்வதென்று தெரியவில்லை. நான் அவள் பிதாவையும் இங்கு வரச்சொல்லி அனுப்புகிறேன், அடே! ஏரம்பா!

(ஏரம்பன் வருகிறான்.)

ஏரம்பன்:— அம்மா!

நங்கைமோகினி:— அடே! நமது குழந்தை வள்ளிக்கு உடம்பு சௌக்கியமாயில்லை என்று நான் சொன்னதாக மகாராஜாவிடம் சொல்லி அவரைத் தயைசெய்து சீக்கிரம் வரச் சொல்.

ஏரம்பன்:— பானையம்மா இட்டுக்கொண்டு வருகிறது. வைத்தியரையா?

நங்கைமோகினி:— அடே மடையா! நான் சொன்னதைச் செய். மகாராஜாவை முதலில் இங்கே அழைத்துக் கொண்டு வா.

ஏரம்பன்:— என்ன அம்மா! மகாராசாவுக்கு வைத்தியந் தெரியுமா?

நங்கைமோகினி:— அடே! உனக்குச் சமயந் தெரிகிறதேயி

லில்லை. நீ போய் வள்ளியம்மை ஏதோ பிரமை பிடித்தவள் போலிருக்கிறாள் என்று மகாராஜாவிடம் சொல். அவர் அப்புறம் என்ன செய்யச்சொல்லுகிறாரோ அந்தமாதிரி செய்.

ஏரம்பன்:—சரி, அம்மா! அப்படியே செய்கிறேன்

(ஏரம்பன் போகிறான்)

நங்கைமோகினி:—அடி சித்திராங்கி! நீ போய்க்குழந்தையைக்கையோடழைத்துவா. அவள் கீழே விழுந்துவிடாமல் மெதுவாய்ப்பிடித்து அழைத்துக்கொண்டுவா. அவள் ஆகாரத்திற்காகப் பால் காய்ச்சி வைக்கிறேன்.

(சித்திராங்கி போகிறாள்.)

தெய்வமே! முருகா! நானென்ன செய்வேன். என் கண்மணியை நீ தான் காப்பாற்றவேண்டும். நேற்று இரவு என் நாயகனிடம் குழந்தையின் மணத்தைக் குறித்துப் பேசினேனே. முருகா! நீ இப்படிச்சோதிக்கலாமா? தலைவலியென்றுகூட அவள் கீழே படுத்தவழக்கமில்லையே. வியாதி கண்டறியாத அவளுக்கு இப்பொழுது என்ன வந்ததோ? பேய் பூதம் தீண்டியிருக்குமோ? இருளில் எதையேனும்கண்டு பயந்திருப்பாளோ? முருகன் விபூதி எங்கேயோ வைத்திருந்தேனே. அவசரத்தில் ஆண்டவனும் கைகூடுவதில்லையென்பதுண்மைதான். முருகா! உனக்கு நூறு கோழி நூறாடா வெட்டிப்பூசை போடுகிறேன். வள்ளியைப்போலத்தங்கத்தாலே பொம்மை பண்ணி உன் கோயிலில் வைக்கிறேன்.

(வள்ளியும் சித்திராங்கியும் வருகிறார்கள்.)

அம்மா வள்ளி! உனக்கு உடம்பு என்னடிபண்ணுகிறது? இப்படி மெள்ள உட்காரு. தலைவலிக்கிறதோ? கிறு கிறென்று தலை சுற்றுகிறதோ? மயக்கமாயிருக்கிறதோ? உடம்பெல்லாம் வலிக்கிறதோ? என் கண்ணே! வாயை மூடிக்கொண்டு தலையைக்குனிந்துகொண்டிருக்கிறாயே.

வள்ளி:—அம்மா! எனக்கு உடம்பொன்றுமில்லை.

(பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் விடுகிறாள்.)

நங்கைமோகினி:—என் கண்மணி! உடம்பொன்றுமில்லையென்று சொல்லிக் கண்ணீர்விட்டுப் பெருமூச்சுவிடுகிறாய். அடி சித்திராங்கி! நமது குலதெய்வமாகிய முருகக்கடவுளின் பேரைச்சொல்லி மஞ்சள் துணியில் ஒரு பொன்காசு எடுத்து முடி. பழனியிலிருந்து வந்த முருகன் விபூதி அந்தப்பெட்டியில் வைத்திருக்கிறேன். அதையெடுத்துக்கொண்டுவா. குழந்தைக்கிடுகிறேன். ஒரு தட்டில் மஞ்சள் நீர் கரைத்து ஆலத்திகொண்டுவா. ஒருவேளை திருஷ்டி தோஷமாயிருந்தாலும் இருக்கலாம்.

(சித்திராங்கி போகிறாள்)

கண்ணே! ஏனிப்படி உடம்பு வேயர்க்கிறது? ஒன்றுக்கவலைப்படாதே. உடம்பு சுடுகிறதோ?

(தொட்டுப்பார்க்கிறாள்)

ஒன்றுமில்லை. தைரியமாயிரு.

(சித்திராங்கி விபூதி, பொன்காசு, மஞ்சள் துணி, அயனிநீர் கொண்டுவருகிறாள்.)

இதோ! இப்படித்திரும்பு. இந்தவிபூதியைஅணிந்துகொள்

(விபூதி யணிகிறாள்.)

முருகா! உனக்கு இந்தப்பொன்காசுபோல் நூறு பொ

ன்காணிக்கை சேர்க்கிறேன். என் குழந்தையைக்காப் பாற்று.

(பொன்நாக மன்னன் தூணியில் மறைகிறான்)

உன் கோவிலுக்கு யானைத்தந்தத்தால் மதில் போட்டு வைக்கிறேன். என் குழந்தை வள்ளியைக்காப்பாற்று. இந்தப்பெண்மணியை உனக்கே அர்ப்பணஞ் செய்து விடுகிறேன். முருகா! காப்பாற்றவேண்டும்

(வள்ளி விழித்துக்கொள்கிறாள்)

குழந்தாய்! கொஞ்சம் பால் சாப்பிடுகிறாயா? வெறும் வயிற்றோடு இருந்தால் உடம்பைப்புரட்டும், களைப்புமே லிடும்.

**வள்ளி:**—ஒன்றும் வேண்டாம் தாயே! எனக்கு வேண்டி யிருக்கவில்லை. வேண்டுமானால் பிறகு சாப்பிடுகிறேன்.

**நங்கை போகினி:**—அடி சித்திரை! அந்த மயில் விசிறியால் விசிறு. வள்ளி இப்படி பெண்மேற் சாய்ந்துகொள். (சித்திராங்கி விசிறுகிறாள்) குழந்தாய்! அழாதே உன் பிதாவும் இதோ வந்துவிடுவார். உனக்கின்னாசெய்கிற தென்று சொல்லத்தெரியவில்லையோ? அம்மா! நீ அழு தால் எனக்கு அழுகை வரும். சும்மா உட்கார்ந்திரு. அதோ யாவரோ வருகிறார்கள். அடியோசைகேட்கிறது.

(ஏரப்பன் சக்கம்மா வருகிறார்கள்.)

அடே! ஏரம்பா! மகாராஜா எங்கேடா? உன்னோடு கூட இருக்கிறவள் யாரடா?

**ஏரப்பன்.**—அம்மணி! மகாராசா அவகளிடம் 'வள்ளியம் மை பேச்சு மூச்சில்லாமே இருக்காங்கோ. என்னமோ பொம்மை--பொம்மை பிடிச்சிருக்குதாம். உங்களை ராணியம்மா இட்டாரச்சொன்னாங்க' என்டு சொன்

னேன். மகாராசா பைத்தியம் பிடிச்சவங்கபோலே மந்திரியார் வீட்டுக்கு ஓடிட்டாங்க. நான் என்ன டண்ணுவேன். உடனே யோசிச்சேன். நாலு நாளைக்கு முன்னே வேடன் சுப்பன் சொன்னான். இந்த ஊருக்குத் தணியமலையிலிருந்து ஒரு குறத்தி அம்மா வந்திருக்காங்க. அவளுக்கு வைத்தியந்தெரியும், சோஷியந்தெரியும், குறிசொல்லத்தெரியும், எல்லாந்தெரியுமெண்டு சொன்னான். அந்த அம்மாளையுங்காட்டினான். அது நினைப்புக்கு வந்தது. உடனே ஒரே பாய்ச்சலாய் ஓடி அந்தம்மாளை யிங்கே இட்டுக்கிண்டுவரலாம், வரமாட்டேன் எண்டால் தூக்கிக்கிண்டு வந்தூடலாம் எண்டு இப்படித் திருமினேன். உடனே தேடிப்போன பச்சிலை காலுங்கீழே ஆப்பட்டதுபோலே இந்த அம்மா எதிரே வந்தூட்டாங்க—(சக்கம்மாவைப்பார்த்து) என் அம்மா உனக்கு நல்லாச் சோஷியந்தெரியுது. நான் நினைச்சது உனக்கு என்னமாத்தெரிஞ்சது? நீ வரமாட்டேன்எண்டுசொல்லியிருந்தால் குண்டுக்கட்டாய் கட்டித் தூக்கிக்கிண்டு வந்திருப்பேன்—நல்லவேளையா அந்த அம்மாளே சந்தோசமாய் நானே வாரேன் எண்டு வந்தூட்டாங்க. இராணியம்மா! இதுவே நல்லசகுனம். இனி வள்ளியம்மா உடம்பு கிடம்பு எல்லாம் பறந்தூடும். வள்ளித் தாயே! உன்னைப்பிடிச்சிருக்கிற பொம்மை இந்த அம்மாவைப் பார்த்தவுடனே ஓடிப்போம். பார்த்தாயா அந்த அம்மாகையிலே மந்திரக்கோல்.

நங்கை நகமோகினி:—அடே ஏரம்பா! நீ இப்படிச்சும்மாஇரு.- அடி பெண்ணே! நீ யார்? உனக்குக் குறிசொல்லத் தெரியுமா? நீ எந்தமலைக் கட்டுவிச்சி? நீ இந்தமலைக்கு

எப்பொழுது வந்தாய்? உனக்கு வைத்தியந்தெரியுமா? தெரியுமானால் என் கண்மணி வள்ளிக்கு என்ன உடம்பு என்று சொல். அவள் உடம்பு சௌக்கியமானால் உனக்கு வேண்டியது தருகிறேன். ஒன்றுகிடக்க மற்றொன்று செய்துவிடப்போகிறாய். ஜாக்கிரதை; நம்பிராஜா பொல்லாதவர். பயத்தோடு வைத்தியஞ் செய்யவேண்டும்.

சக்கம்மா:—ராணியம்மே! வள்ளிதேவி! உங்களுக்கு முருகன் கிருபையால் எல்லாச் சேமங்களுமுண்டாகும். ஒரு குறைச்சலுமில்லை. நான் பிறந்த இடம் பரங்குன்றம். அங்கே எங்கள் பாட்டியார்வீடு. வளர்ந்தது தணியமலை. அங்கே தான் எங்க சொந்த வீடு.

விண்மருவிய வேரலங் கிரிவாழ்
மேன்மைதங்கிய நங்கைநா யகமே!
தண்மதிப்பிறை தவழுயர் சிகரத்
தணிகைமலைக் குறத்திநா னம்மே! (70)

திங்களிளம் பிறைதவழு மலையெங்கண் மலையே
தேனூறு பெருகிவரு மலையெங்கண் மலையே
மங்குலின மெங்குமுறு மலையெங்கண் மலையே
மாதவரெ லாம்வதியும் மலையெங்கண் மலையே
சொங்குவளர் வாவியென் றுங் குறைவின்றி நீலக்
கோலமலர் முப்போதுங் கொண்டிருக்கு மலையே
செங்கடப்ப மாலையணி தேவன்குமரேசன்
சேர்ந்திருக்குஞ் சீர்த்தணிகை மலையெங்கண்
[மலையே (71)

**நங்கைமோகினி:**—அடி பெண்ணே! உன் பெயரென்ன?

**சக்கம்மா:**—என்னைச் சக்கம்மா என்று அழைப்பாங்கோ அம்மே!

**நங்கைமோகினி:**—சக்கம்மா! உன் முகத்தைப்பார்க்கிறபொழுதே நீ நல்ல புத்தியுள்ளவள் என்பது தெரிகிறது. எங்கே, என் குழந்தைக்கு என்ன உடம்பு? சொல்.

**சக்கம்மா:**—(சிறிது வள்ளியை உற்றுநோக்குகிறாள்.) தாயே! வள்ளியம்மைக்கு எவ்வித வியாதியுமில்லை. ஒருகால் மனோவியாதியா யிருந்தாலிருக்கலாம் அம்மே!

**நங்கைமோகினி:**—சக்கம்மா! நீ குறிசொல்லுகிறவள் என்கிறாயே எங்கே குழந்தைக்குக் குறிசொல்.

**சக்கம்மா:**—அம்மே! தாங்கள் பூசை செய்யும் அறையைப் புழுகாலேதரை மெழுகி குங்குமந் தெளித்துச் சந்தனக் குழம்பால் நாற்சதுக்கமாய்க் கோலமிட்டு அதன்தென் மேற்கு மூலையில் சாணிப்பிள்ளையார் வைக்கச்சொல்லுங்கோ அம்மே! மறவாமல் அந்தப்பிள்ளையார் தலையில் அறுகம்புல் வைக்கச்சொல்லுங்கோ அம்மே! சாமி எதிரில் நெய்விளக்கேற்றி வைத்து, சாம்பிராணி குங்கிலியம் தூபம்போட்டு மூன்று வெல்லக்கட்டி நிமித்தியம்பண்ணிச்சூடம் ஏற்றச்சொல்லுங்கோ அம்மே!

**நங்கைமோகினி:**—அடி சித்திராங்கி! இந்தச் சக்கம்மா சொன்னபடி நீ சீக்கிரம் செய். சிறிதும் தாமதிக்காதே.

**சித்திராங்கி:**—அம்மணி, இதோ செய்துவிட்டு நொடிக்குள் வருகிறேன்.

**சக்கம்மா:**—அம்மே! முன்நாழி முச்சிறங்கை நெல்கொண்டு வரச்சொல் அம்மே!

நங்கை மோகினி:—அடி சித்திரை! நீ வரும்பொழுது மூன்று முச்சிறங்கை நெல் ஒரு முறத்தில் போட்டுக்கொண்டு வா.

சித்திராங்கி:—இதோ கொண்டு வருகிறேன்.

(சித்திராங்கி போகிறாள்.)

வள்ளி:—அடி சக்கம்மா! நீ சொல்லுகிற குறி நிஜமாயிருக்குமா?

சக்கம்மா:— அம்மே! இன்னுங்கொஞ்சநேரத்தில் நம்ம திராணியைப் பாருங்கோ அம்மே! நம்மபாட்டியார் இமயமலையிலிருந்து இந்தவித்தையைக் கற்றுக்கொண்டுவந்து நமக்குப் படிப்பிச்சிருக்காங்கோ அம்மே! நாம் எத்தனையோ சமஸ்தானம் பார்த்திருக்கிறோம். நாம் சொன்ன குறி தவறாதுங்கோ அம்மே! நாம் நீனைச்சேமென்று இடிம்பன் வந்தூடுவான். எல்லாக் குறியும் நமக்கு சொல்லிவிட்டுப் போய்விடுவான். எங்க பாட்டியார் கைலைமலை போயிருந்தாங்கோ! அங்கே யொரு ஆறுதலைராசா இருந்தாங்கோ! எங்க சொந்த பாட்டியார் குறி சொன்னாங்கோ! அந்த ஆறுதலை ராசாவுக்கு இரண்டு பிள்ளை பிறப்பாங்கோ ஒன்று மாறுதலைப்பிள்ளை இன்னொன்று ஆறுதலைப்பிள்ளை யென்று எங்கபாட்டியார்தான் குறிசொன்னாங்கோ. இந்தமாதிரி யாருக்கும் குறி சொல்லத் தெரியாதுங்கோ அம்மே! ஏன் உங்களுக்குச் சந்தேகம் அம்மே!

நான் சொலுங்குறி தான் தவறுமோ
மான் தருங்கண்ணி மங்கையே
தேன் சொரியும் பிரான்மலைவளர்
தேவனே யறிவாரம்மே! (72)

(சித்திராங்கி நெல்கொண்டு வருகிறாள்.)

நங்கைமோகினி:—சித்திராங்கி! சக்கம்மா சொன்னபடி யெல்லாம் செய்துமுடித்தாயா?

சித்திராங்கி:—எல்லாஞ்சரியாய்ச்செய்துவிட்டேன் தாயே இதோ நெல்லுங் கொணர்ந்திருக்கிறேன்.

சக்கம்மா:—இங்கே கொண்டுவா அம்மே!

(நெல்லை வாங்கிச் சிறிது நேரங் கணக்கிடுகிறாள்.)

நங்கைமோகினி:—அடே ஏரப்பா!

ஏரப்பன்:—அம்மா!

நங்கைமோகினி:—அடே! மகாராஜா வந்ததும் எனக்கு உடனே தெரிவி.

ஏரப்பன்:—அம்மா! அப்படியே செய்கிறேன்.

(போகிறான்.)

சக்கம்மா:—அம்மே! நல்ல குறியுண்டாச்சுது. வள்ளியம்மே! இன்று சாயங்காலமே உன் மனத்திலுள்ள கவலையெல்லாம் பறந்துபோய்விடும் அம்மே! கொண்டுவந்த நெல்லை இரட்டைபட எண்ணினதிலே ஒற்றைபட நின்றது. இரண்டு பட்டது ஒன்றுபடும்.

(பாடுகிறாள்.)

"நெல்லளந் திட்ட போது நிமித்தநன் றிடத் தெழுந்த
பல்லியும் வாத்தே சொல்லும் பத்தினிப் பெண்கள் வாயாற்
சொல்லிய வாய்ச்சொ லன்றித் தும்மலு நல்ல தேகா
ணல்லது கிளைகூட்டும்புற் றுந்தையீச் சழுகி தம்மா" (73)

அம்மே! உன்கையை நீட்டு குறி சொல்லுகிறேன்.

(பாடுகிறாள்.)

அம்ம! நின தங்கைகொண்டுவா—செய்ய
அம்புய மலர்த்துணைய வழகுபொலிக்

தெம்மலையை இரவலர்க்கு— மும்மையினும்
எற்குமுன் மீக்கருளு மியலுடனே
செம்மைபெறும் அறுமுகனார்—சேவடியைச்
சிந்தையினி னைந்து குவி தந்து திகழும்
அம்மதின தங்கைகொண்டுவா. (74)

அம்மே! நல்லகுறி. கேளுங்கோ.
(பாடுகிறாள்.)

அம்மேயுன் கொங்கைமிசைச் செங்கைவைத்த குறியால்
அன்பனுனை யணைவனென வறிந்திடுவா யம்மே
கைம்மேலே கைகட்டி நின்றதனு னினைத்த
காரியங்கள் கைகூடுங் கண்டிடுவா யம்மே
மைம்மேகக் குழலாய்நீ தலைவாரித்த குறியால்
மணவாளன் மாலையிடத் தலைவாரிப்பா யம்மே
இம்மேலைத் திசைநோக்கி யிருந்ததனு லன்பன்
இன்றிங்கு வந்தணைவான் இதுசாதம் அம்மே! (75)

வள்ளி:—என்னடி பெண்ணே! வாய்க்கு வந்தபடியெல்லாங் குறி சொல்லுகிறாய்? யாரோ அன்பன், அன்பன் என்கிறாய், எனக்கு யாரையடி தெரியும்? இப்படித்தானிருக்கும் நீ சொல்லுகிற குறியெல்லாம்.

சக்கம்மா:—தாயே! வள்ளி! நான் சொல்லுகிறது மெய்யோ பொய்யோ உன் நெஞ்சுக்குத்தெரியவேண்டும் அம்மே! இல்லாவிட்டாலும் அந்த நெஞ்சில் இருக்கிற கடவுளுக்காயினும் தெரியும். சும்மா வாயடியடிக்கவேண்டாம் அம்மே! நான் சொல்லுவதெல்லாம் சத்தியமே. முருகனேசாக்ஷி.

பொற்றிணைக்கெனச் சந்தனத்திமி
ருந்தனத்திகழ் வல்லிகோமள வல்லியே
முந்துசிந்தை யுவந்தமர்ந்தநங்
கந்தன்வந்துனைக் கூடுவானன்பு நீடவே. (76)

(ஏரம்பன் வருகிறான்.)

ஏரம்பன்:—அம்மா! மகாராசா வருகிறாங்க.

நங்கைமோகினி:—அடே! இந்த ஆதனத்தை எடுத்து இப்படிப் போடு. அதை அப்படி யொழுங்காய்வை. அடே! ராஜாவோடே இன்னும் யாரேனும்வருகிறார்களோடா?

ஏரம்பன்:—அம்மா! மந்திரியார் வருகிறாங்க. அதோ வந்து விட்டாங்க.

(நம்பிராஜனும் மதியூகியும் வருகிறார்கள்.)

நம்பிராஜன்:—நங்காய்! நம்குழந்தை வள்ளிதேவிக்கு உடம்பு என்னவாயிருக்கிறது? ஏரம்பன் அவள் ஏதோ அசௌக்கியமாயிருக்கிறாள் என்று சொல்லியதுமுதல் நான் என்னை மறந்தவனானேன். எனக்கு ஒன்றும் செய்யத்தெரியாமல் நம் மந்திரி மதியூகியார் வீட்டுக்குப்போனேன். அவரையும் அழைத்துக்கொண்டு வந்தேன்.—குழந்தாய்! உனக்கு என்ன உடம்பு? இப்படி என் கிட்டவா. இங்கு உட்காரு.

வள்ளி:—பிதாவே! எனக்கு நோய் ஒன்றுமில்லை.

(நம்பிராஜன் அருகில் உட்காருகிறாள்.)

நம்பிராஜன்:—மதியூகியாரே! உமக்கு என்ன தோன்றுகிறது?

மதியூகி:—மகாராஜாவே! குழந்தை வள்ளிதேவிக்கு எவ்விதக் குறைவுமில்லை. தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். ராணியம்மா! குழந்தைக்கு யாது பிணி?

நங்கைகமோகினி:—ஐயா! நமது குழந்தை இரண்டு மூன்று தினங்களாக உணவு சிறிதுமுட்கொள்ளவேயில்லை. நேற்றிரவு தூங்கவேயில்லை. சதா புலம்பிக்கொண்டிருந்தாள். தனியே நின்று சிரிப்பதும் அழுவதுமாய்த் தன்னை மறந்து என்னையும்மறந்து அவள் இருந்தால் எனக்குப்பொறுக்கவேயில்லை.

(கண்ணீர் துளிக்கிறாள்.)

மதியூகி:— அம்மணி! சிறிதும் வருத்தப்படவேண்டாம். எல்லாவற்றிற்கும் முருகக்கடவுள் இருக்கிறார். அந்தப்பெண் யார் அம்மா!

நங்கைகமோகினி:—அவள் தணிகைமலைக்கட்டுவிச்சி. நன்றாய்க் குறிசொல்லுகிறாள். அவள் தற்செயலாய் இங்கு வந்தாள். அவளைக்கேட்டதில் குழந்தைக்கு மனோவியாதி தவிர வேறு ஒன்றுமில்லையென்று தைரியமாய்ச் சொல்லுகிறாள். அவளும் குறிசொல்லி முடித்தாள் தாங்களும் வந்தீர்கள்.

மதியூகி:—மகாராசா! இந்தக் குறிசொல்லும் பெண் நல்ல புத்திசாலியென்பது அவள் முகத்திலேயே விளங்குகின்றது. அவள் கவலைப்படவேண்டாமென்று சொன்னபிறகு தாங்கள் விசாரத்தை விடவேண்டும்.

ஏரம்பன்:—சாமி! அந்த அம்மா நல்லா சோஷியம் சொல்வாங்க! அவ குறிசொன்னவுடனே நம்ம வள்ளியம்மா முகத்திலே களை வந்துட்டுதுங்கோ. அந்த அம்மா கையிலே இருக்கிற மந்திரக்கோல் லேசான கோலா? அம்மாவைப்புடிச்ச பொம்மைகிம்மையெல்லாம் பறந்துடுங்க.

மதியூகி:—மகாராஜா! எதற்கும் தாங்கள் ஒன்று செய்தால் நலமென்று தோன்றுகிறது. நம் வள்ளிதேவி தினைப்

புனங்காத்து வந்த காலையில் ஒரு நூதனமான வேங்கையுண்டானதை நாம் பார்த்தோமே. அந்த விருக்ஷம் தெய்வீகமானதென்பதற்குச் சந்தேகமேயில்லை. அம்மரத்தடியில் நம் குலதெய்வமாகிய முருகக் கடவுளுக்குப் பூசை போட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டியது அவசியம். ஆகையால் இதுகாறும் செய்யாமலிருந்தது நம்மோற் பிழையே. அதைக்குறித்து எனக்கு முன்னமேயே யோசனையுண்டு. இருந்தாலும் பிரான்மலையாருக்கும் மயூரகிரியார்க்கும் உண்டான விவாதமத்தியஸ்தத்தில் தாங்கள் தலையிட்டுக் கொண்ட காரணத்தால் தங்களிடம் இதைப்பற்றிச் சொல்லச்சமயம் வாய்க்காமற் போயிற்று. அந்தத்தெய்வக்குற்றமே நமது வள்ளிதேவியின் வேறுபாட்டிற்குக் காரணமாயிருக்கவேண்டும்.

**நம்பிராஜன்:**—அடே ஏரம்பா! மந்திரியார் சொன்னதைக் கேட்டாயா? இன்று மாலைப்பொழுது நம் தினைப்புனத்தில் புதிதாய் உண்டான வேங்கைமரத்தினடியில் நம் குலதெய்வத்திற்குப் பூசைபோடவேண்டும். அதற்கு வேண்டிய சாமான்களைத் தயார்செய்துகொண்டு அந்த வெறியாடுபவனுடன் வந்துசேர். நாங்களும் அங்கு அந்தச்சமயத்தில் வந்து சேருகிறோம். ஒன்றிலுங் குறைவில்லாமற் பார்த்துக்கொள்.

**ஏரம்பன்:**—மகாராசா! அப்படியே செய்கிறேன். இந்தக் குறிசொல்லுகிற அம்மாளை நம்ம அரண்மனையிலேயே இருக்க உத்திரவு போடுங்க. அந்த அம்மா குறி சொன்னவுடனே தான் வள்ளியம்மைக்குச் சந்தோசம் முகத்தில் சொலிச்சதுங்க. அவள் இதை விட்டுப்போனால்

பழையபடி பொம்மைகிம்மை யொருவேளை பிடிச்சுக்கும். அந்தச் சக்கம்மாளை இங்கேயேயிருக்கச்சொல்லுங்க:

நம்பிராஜன்:—ஏ! பெண்ணே! நீ நமது அரண்மனையிலேயே இரு. வள்ளியம்மைகூடவேயிருந்து அவளுக்கு ஒரு குறைவுமில்லாமற் பார்த்துக்கொள். உனக்கு வேண்டியது கிடைக்கும்.—நங்காய்! இன்று பூஜை போடும் சமாசாரத்தை நம் குமாரர் வீரதேவன் வசந்தன் இவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது அவசியம். ஆகையால் நான் நேரில் அவர்களையும் நமது வேடர் தலைவர்களையும் ஆஸ்தான மண்டபத்திற்கு வரவழைத்து யாவரையும் அந்தப்பூஜைக்கு வரச்சொல்லிவிடுவோம். நீயும் பூஜைக்கு வர இஷ்டமிருந்தால் வரலாம்.

நங்கைமோகினி:—ஐயா! எனக்கு வள்ளியைவிட்டு அப்புறம் போக மனமில்லை. இருந்தாலும் பூஜை சமயத்தில் கடவுளை வேண்டிக்கொள்ள விருப்பமுண்டு. அவசியம் வருகிறேன்.

நம்பிராஜன்:—சரி. அப்படியே செய். —குழந்தாய் வள்ளி நான்போய் வருகிறேன். மந்திரியாரே! நமது ஆஸ்தானமண்டபத்திற்குப்போய் வீரதேவன் வசந்தன் முதலியோர்களுக்குச் சொல்லியனுப்புவோம். நாம் போவோம் வாரும்.

(நம்பிராஜன் மந்திரி போகிறார்கள்.)

நங்கைமோகினி:—சித்திராங்கி! சக்கம்மாவிற்கு வேண்டிய சௌகரியங்களை நீயே பார்த்துக்கொள். அவளையெப்பொழுதும் கூடவேயிருக்கும்படிச்செய். ஒன்றிலும் அவளுக்குக்குறைவில்லாமலிருக்கட்டும்.

**ஏரம்பன்:**—அம்மா சக்கம்மா! எனக்குச் சோஷியஞ்சொல்லு அம்மா. எனக்கு எப்போ கண்ணாளமாகும்? பெஞ்சாதி உன்னாட்டமா எனக்குக்கிடைப்பாளா? கொஞ்சம் பார்த்துச்சொல்லவேணும்.

**நங்கைமோகினி:**—அடே! வாயைமூடு. இதுதானா விளையாட்டுப்பேச்சுக்கிடம்? எப்பொழுதும் உனக்குச் சமயந்தெரியவில்லை.—சக்கம்மா! நீ நல்ல பெண்—சித்திரை! வள்ளிதேவியை யழைத்துக்கொண்டு போஜனசாலைக்குப் போ. நான் சக்கம்மாவுடன் பூசை அறைக்குச்சென்று கடவுளை வணங்கிக் குமார்த்தைக்குத் திருநீறு எடுத்து வருகிறேன். அடே ஏரம்பா! நீ போய் இன்று மாலை போடவேண்டிய பூசைக்கு வேண்டியவற்றைத் தயார் செய். ஆடு கோழி முதலியவைகள் ஏராளமாயிருக்கட்டும். சீக்கிரம் போ.

**ஏரம்பன்:**—சரி அம்மா. அப்படியே செய்கிறேன்.

(போகிறான்.)

**நங்கைமோகினி:**—சக்கம்மா! நாம் பூசை அறைக்குப்போவோம்வா. அடி சித்திரை! வள்ளியை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். குழந்தாய்! நீ சீக்கிரம் போஜன சாலைக்குப்போ. நானும் அதிகவேகமாய் அங்குவருகிறேன்.

(நங்கை மோகினியும் சக்கம்மாவும் போகிறார்கள்.)

**சித்திராங்கி:**--என் அம்மா வள்ளி! நீ தனியே இருந்தால்முன் போல் கவலை மேலிடும். நாமும்போவோம் வா.

**வள்ளி:**—அடி! சித்திராங்கி! என்னமாயடி அந்தச்சக்கம்மாவுக்கு என் மனோவியாதி இன்னதென்று தெரிந்தது? இவளுக்குத்திரிகால ஞானம் உண்டோ?

சித்திராங்கி:—ஆமாம் அம்மா, இப்படிக்கூறி சொன்னவர்களை யான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. நல்லது இன்றுமாலை உன் தலைவன் வருவான் என்று சொன்னாளே அவன் எந்த இடத்தில் வருவான் என்று அவளை நான் கேட்கப்போகிறேன். இன்று சாயங்காலம் போடப்போகும் பூசைக்கு நீ போகப்போகிறாயா?

வள்ளி:—அந்தப்பூசை யாருக்காக எதற்காகப்போடப் போகிறார்கள்? என்னுடைய வியாகூலம் இன்னதென்றறியாதவர்கள் அநியாயமாய் அநேகம் ஆடுகளையும் கோழிகளையும் கொல்லத் துணிந்தார்கள். பாவம்! பாவம் !! இந்தப்பழிக்கு நான் உத்தரவாதியில்லை.

அந்த கற்குப் பாய சத்தை யம்ம நல்வி ருந்திடத்
தந்தை தாயர் சிந்தை செய்தல் தன்ம மோவென் கன்மமோ
புந்தி மந்த மோவ வர்க்குப் புண்ணி யம்ப லிக்குமோ
கந்த னேயிக் கண்ணி லார்க்குக் கண்ண ளிக்க வேண்டுமால்.

அடி சித்திரை! எனக்கும் அந்தப்பூசைக்கும் ஸம்பந்தமேயில்லை. நான் போகவில்லை. நீ வேண்டுமாயிற் போகலாம்.

சித்திராங்கி:—வாடியம்மா வள்ளி! நாம் போவோம். நான் சக்கம்மாவைப்பார்க்கவேண்டும்.

(இருவரும் போகிறார்கள்.)

நான்காம் அங்கம் முற்றிற்று.

பழையபடி பொம்மைகிம்மை யொருவேளை பிடிச்சுக்கும். அந்தச் சக்கம்மாவை இங்கேயேயிருக்கச்சொல்லுங்க:

நம்பிராஜன்:—ஏ! பெண்ணே! நீ நமது அரண்மனையிலேயே இரு. வள்ளியம்மைகூடவேயிருந்து அவளுக்கு ஒரு குறைவுமில்லாமற் பார்த்துக்கொள். உனக்கு வேண்டியது கிடைக்கும்.—தங்காய்! இன்று பூசை போடும் சமாசாரத்தை நம் குமாரர் வீரதேவன் வசந்தன் இவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டியது அவசியம். ஆகையால் நான் நேரில் அவர்களையும் நமது வேடர் தலைவர்களையும் ஆஸ்தான மண்டபத்திற்கு வரவழைத்து யாவரையும் அந்தப்பூசைக்கு வரச்சொல்லிவிடுவோம். நீயும் பூசைக்கு வர இஷ்டமிருந்தால் வரலாம்.

நங்கைமோகினி:—ஐயா! எனக்கு வள்ளியைவிட்டு அப்புறம் போக மனமில்லை. இருந்தாலும் பூசை சமயத்தில் கடவுளை வேண்டிக்கொள்ள விருப்பமுண்டு. அவசியம் வருகிறேன்.

நம்பிராஜன்:—சரி. அப்படியே செய்.—குழந்தாய் வள்ளி நான்போய் வருகிறேன். மந்திரியாரே! நமது ஆஸ்தானமண்டபத்திற்குப்போய் வீரதேவன் வசந்தன் முதலியோர்களுக்குச் சொல்லியனுப்புவோம். நாம் போவோம் வாரும்.

(நம்பிராஜன் மதிமுகி போகிறார்கள்.)

நங்கைமோகினி:—சித்திராங்கி! சக்கம்மாவிற்கு வேண்டிய சௌகரியங்களை நீயே பார்த்துக்கொள். அவளையெப்பொழுதும் கூடவேயிருக்கும்படிச்செய். ஒன்றிலும் அவளுக்குக்குறைவில்லாமலிருக்கட்டும்.

அடே வேலா! அந்த ஐயவிக்கடுகையும் நெய்யையுஞ் சேர்த்துவை.

(வேலன் சேர்க்கிறான்.)

அடே சுப்பண்ணே! நீ இந்தக்கோழிக்கொடியை இப்படி நட்டு அதன் கீழே புள்ளையாரை வை.

(அப்படியே செய்கிறான்.)

**பேயாண்டி:**—என் ஏரம்ப அண்ணே! புள்ளையார் புள்ளையார் எங்கிறாங்களே, அது என்ன அந்த ஆனை மூஞ்சிச் சாமியா?

**ஏரம்பன்:**— அடே அப்படியெல்லாம் சொன்னையானால் உன் கண் ரெண்டும் அவிஞ்சுபோம். உடனே அதன் காலிலே உழுந்து கும்பிடு.

(பேயாண்டி கும்பிடுகிறான்.)

**பேயாண்டி:**—அண்ணே! ஹா! ஹா! ஹா!

(சிரிக்கிறான்.)

**சுப்பன்:**—உனக்கென்ன பைத்தியமாடா?

**பேயாண்டி:**—அந்தச்சாமிக்கு எம்மாம்பெரிய வயிறு அண்ணே! அந்தச்சாமிக்குத் தீனிபோட்டுக்கட்டுமா?

**ஏரம்பன்:**—அடே! இப்படியெல்லாம் பேசிக்கிட்டு இருந்தால் உதை விழும். மகாராசா வந்துடுவாங்க. எல்லாந்தயாராய் இருக்கவேணும். வேலையைப்பாரு.

**சுப்பன்:**— அண்ணே! பெரிய கிடாய் வெட்டி அதன் உதிரங்கலந்த தினையும் வெள்ளரிசியும் இங்கிட்டு வைச்சிருக்கிறேன். அதை நிமித்தியம் பண்ணுறதுக்குமுன்னே

அந்தப்பேயாண்டிப்பயன் தூண்ணாடரேன் என்னு சொன்னான். அவனுக்கு காலேஞ்சு கொடுத்தேன் அண்ணே!

ஏரம்பன்:—என்னடா கொடுத்தே! நிமித்தியம் பண்றத்துக்குமுன்னே எண்டா கொடுத்தே? சேசத்தையா சாமிக்குப் பூசை போடுவாங்க?

(ஏரம்பன் சுப்பனையடிக்கப்போகிறான்.)

சுப்பன்:—இல்லே அண்ணே! காலேஞ்சு பூசைகொடுத்தேன்.

ஏரம்பன்:—பலே! நீ நல்லவன். இந்தப்பூசை முடியட்டும், அவனுக்கு வேண்டியமட்டும் பூசை போடலாம். அடே வேலா! அந்த ரெண்டு புதுவேட்டிகளைக் கட்டிக்கிண்டயா?

வேலன்:— ஆமாம் அண்ணே! நான் நல்லாயிருக்கேனு? என்னோடே அந்தச்சாமிப்பையன் ஆடமாட்டான். பாதியிலே களைச்சுப்பூடுவான்.

ஏரம்பன்:—அடே! நீ தாண்டா ஆடப்போறே. சும்மாப் பேசாதேடா. அடே சுப்பா! இவன் கையிலே அந்தச் சேப்புநூலைக் காப்புக்கட்டுடா.

சுப்பன்:—நான் நல்லாக்கட்டரேன் அண்ணே!

(வேலன் கையில் சுப்பன் செப்பு நூலை இறுக்கிக்கட்டுகிறான்.)

வேலன்:—அண்ணே! அண்ணே! கைபூட்டுது. ஒடிச்சுட்டான், ஒ! ஒ! (கத்துகிறான்.)

ஏரம்பன்:—என்னடா! என்னடா!!

வேலன்:—இறுக்கிக்கட்றான் அண்ணே! இரத்தம் ஒடியாரது அண்ணே! நீ கண்ணாலேபார் அண்ணே!

ஏரப்பன்:—அடே சுப்பா! அந்த நூலே இக்கிட்டுக்கொடுடா நீ கட்டவேணும் நான் கட்றேன். அடே வேலா! இங்கே வாடா.

(ஏரப்பன் அவன் கையில் காப்புநூலைக்கட்டுகிறான்.)

வேலன்:—நீ நல்லாக்கட்டியிருக்கே அண்ணே — அடே சுப்பா! நான் காப்புக்கட்டிக்கிறதுலே உனக்கு இஷ்டமில்லேபோலிருக்கு. உன்னேயும் ஒருகை பாத்துக்கிறேன்.

ஏரம்பன்:—அடே! இங்கே யார் இரைஞ்சாலும் உதைப்பேன். இப்படி நில்லுங்க. மகாராசா வந்தூட்ற நாழி ஆய்விட்டது.

வேலன்:—ஏரப்ப அண்ணே! நீ தான் பாட்டுப்பாடணும். நான் ஆடறேன்.

ஏரம்பன்:—சரி அப்படியே யாகட்டும். அதோ மகாராசா மந்திரி, இராணியம்மா, சின்னராசாவுங்க எல்லாரும், வராங்க. நீங்கள் இப்படி ஒதுங்கி நில்லுங்க.

(நம்பிராஜன், மந்திரி, நங்கைமோகினி, வீரதேவன், வசந்தன் முதலியோர் வருகிறார்கள்.)

நம்பிராஜன்:—அடே ஏரப்பா! எல்லாம் தயார் செய்துவிட்டாயா?

ஏரம்பன்:—சாமி! எல்லாம் ஆய்விட்டதுங்க. பூசை ஆரம்பிக்கலாமா?

நம்பிராஜன்:—சரி அப்படியே செய்.

ஏரப்பன்:—அடே சுப்பா! முன்னே புள்ளையாருக்கு நிமித்தியம் பண்ணுடா.

சுப்பன்:—அப்படியே பண்றேன்.

(பிள்ளையாருக்கு நைவேத்தியம் செய்கிறான்.)

ஏரம்பன்:—அடே இங்கிட்டு எல்லாவற்றையும் எடுத்துவை. நான் முருகனுக்குப் பூசை பண்றேன். அடே! சுப்பா! அந்தத்தேக்கிலையை எடுத்துப்போட்டு நிமித்தியத்தை அதிலே படை. அடே பேயாண்டி! அந்தக்குங்கிலியம் சாம்பிராணி அதில் கட்டை எல்லாவற்றையும் புகை போடு.

(சுப்பனும் பேயாண்டியும் அங்ஙனஞ் செய்கிறார்கள்.)

(ஏரம்பன் நைவேத்தியஞ்செய்து வணங்கி வேலையெடுத்து வேலன் கையில் கொடுக்கிறான்.)

அடே வேலா! இந்தா சாமிவேல். சரி உன்மேலே ஆவேசம் வரவேணும். சரியாய் ஆடு.

வேலன்:—ரொம்ப நல்லா ஆடறேன்.

ஏரம்பன்:— (பாடுகிறான். வேலன் ஆடுகிறான். பேயாண்டி குடமுழா அடிக்கிறான். சுப்பன் கொம்பூதுகிறான்.)

வில்லடிச்சான் பாட்டுப்பாடி வேண்டுகிறோங் கந்தசாமி
நல்லவாக்குச் சொல்லவேணும் நம்பினோரைக் காக்குஞ் சாமி

செல்லமகள் வள்ளியம்மை சேமமாகவேணுஞ்சாமி
எல்லையம்மா செல்லியம்மா தில்லையம்மா கொல்லி யம்மா
மோகினியேமகா டாகினியேவரா சாகினியேசிங்க வாகனியே

மாதவரே சாதகரே மாதம்வரு மாதவரே
வீரவாகு தீரவானே வீரதீரா வீராந்தகா

வீரமாகேந்திரா வீரதேவேந்திரா வீரமாகேச்சுரா
வீரகேசரியே
வீரமார்த்தாண்டனே வருங்கூச்மாண்டனே யொருகூ
த்தாண்டனே பெரும்பிரமாண்டனே
யாருமிங்கே வாருங்குறை தீரும்வரந் தாருமுன்னே
ஐயாதாருமுன்னே சாமிதாருமுன்னே கூடியாருமி
ன்னே ஓடிவாருமுன்னே
தெந்திறனேதெந்திறனே தெந்திறனேதெந்திறனே. (78)

குட்டிகுட்டிச் சாமிகளே—ஒட்டிஒட்டி
மட்டுப்படாதவொரு குட்டிச்சாத்தான்
கோமாளிக் கூத்தடிக்கும்—சீமையிலே
ஏமாப் புடனிருக்குஞ் சோமாரியே
சந்துபொந்து பார்த்திருக்கும்—சொந்தமான
மந்த நடைநடக்குஞ் சந்துகாலி
வீரப்பத் தேவண்ணனே—சாரமுள்ள
கூரப்பன் முன்னுதித்த சோப்பனே
கூடத் தழுவுகிக்கும்—கோடைய
மாடனே காடனே மார்த்தாண்டனே
குட்டிக்குட்டிச் சாமிகளே—ஒட்டிஒட்டி
முட்டிமுட்டி யோடிவாங்கோ—சட்டாயம்
குப்பிகுப்பிச் சாராயத் தொப்பிதாரேன்
முட்டைமுட்டைக் கோழிகளை—கட்டுகட்டு
வெட்டிவெட்டித் தட்டுமுட்டுப் பெட்டிபெட்டியாய்க்
கொட்டிக் கிடக்குதுங்க—ஐயனே
வந்திடுங்க நல்லவரந் தந்திடுங்க
குட்டிகுட்டிச் சாமிகளே. (79)

நங்கைமோகினி:—

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்." (80)

முருகா! என் குழந்தையைக் காப்பாற்றுவாய்.

(வணங்குகிறாள்.)

நம்பிராஜன்.—

"நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
யைவரு ளொருவ னங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்

பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்" இறைவ
"நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோய்" யாம
விரைவுட னருள்செய வருகுதி யெனவே

(வணங்குகிறான்.)

வீரகேதன்
வாரீதன் } :— (பாடுகிறார்கள்.)

"பிரமனும் விரகொடு பிணிவினை யிடர்கொடு
பெருகிச் சரங்கொண் மருகானம்
பொருகிரி சமவெனு வருவுயிர் புகமதி
பேதித் தளர்தம் புரியூடே
வரவிட வருமுட லெரியிடை புகுதரு
வாதைத் தரங்கம் பிறவாமுன்
மரகத மயில்மிசை வருமுரு சனுமென
வாழ்க்கைக் சொரன்பர் தருவாயே
அருவரை தொளைபட அலைகடல் சுவறிட
ஆலிப் புடன்சென் றசுரேசர்
அணிவரு மடிவுற அமர்பொரு தழகுட
னண்மைத் தனங்கொண் டெழும்வேலா
இருவினை பசலிட எழிலனம யிடமுற
யீசர்க் கிடுஞ்சொற் தமிழ்வாயா
இயல்பல கலைகொடு இசைமொழி பவரினும்
எழைக் கிரங்கும் பெருமாளே." (82)

"தேனியல்சொற் கனிமாதர்
சேவைதனைக் கருதாதே
யானெனதற் றிடுபோதம்
யானறிதற் கருள்வாயே.
வானவருக் கரசான
வாசவனுக் கினியோனே
ஆனைமுகற் கிளையோனே
ஆறுமுகப் பெருமானே. (83)

மதிபூதி:—

"அருள்பொழி முகங்கள் போற்றி
யலர்விழிக் கமலம் போற்றி
மருமலர்க் குவளை பூத்த
வரையுறழ் திணிதோள் போற்றி
பெருவர மளிப்ப நீண்ட
பேரெழில் மணிக்கை போற்றி
யிருள்வினை துகைத்துச்சேர்ந்த
விணைமலர்ப் பாதம் போற்றி."

(வேலன் ஆவேசம் வந்தவன் போற்சுழன்று சுழன்று ஆடுகிறான்.)

ஏரப்பன்:—சாமி! வேலன்மேலே ஆவேசம் வந்துட்டுதுங்க.
அடே சுப்பா! சூடம் கொளுத்தடா.

(சுப்பன் கர்ப்பூரம் ஏற்றிக்காட்டுகிறான்.)

வேலன்:—(ஆடிக்கொண்டே)

இடும்பன்நான் ஐயே! இடும்பன்நான் ஐயே!
மலையலை குலைய வடிவேல் விடுத்த
கடம்பணி மலர்த்தார்த் தடம்புய மடங்கலை
இடைவிடா தென்று மடியிணை யேத்தும்
இடும்பன்நான் ஐயே! இடும்பன்நான் ஐயே! (84)

(யாவரும் வணங்குகிறார்கள்.)

நம்பிராஜன்:—சுவாமி! எங்களைக்காப்பாற்றவேண்டும். எங்கள் குலத்து அருமருந்தாகிய வள்ளியம்மை நாலைந்து நாளாய் உணவுறக்கமின்றித் திகைப்பூண்டு மிதித்தவளைப்போலிருக்கிறாள். அவளுக்கு அருள் செய்யவேண்டும்.

வேலன்:—

நின்னை யென்று மன்னைபோற் காக்க
மன்னவன் மருகன் முன்னமே யமைந்துளான்.
ஐயுறல் அரசே! ஐயுறல் அரசே!
கையுறு வேலனின் காமர் கன்னியை
மெய்யுற விழைந்தில் வேட்கையின் பாங்கர்த்
தீண்டின னன்றே யீண்டினி யென்றும்
மங்களம் மங்களம் மங்கள மவட்கே.
ஏத மகற்றுமிப் பூதியைக் கொடுபோய்
மடமகள் தனக்கிடு. நொடியினி லவள்படும்
துன்பொழித் தளவிலா வின்பம் பயக்குமால். (85)

(விபூதியளிக்கிறான். நம்பிராஜன் பெற்றுக்கொள்ளுகிறான்.
இடும்பன் மலையேறிவிடுகிறான்.)

எல்லாரும் துண்ணூறு வாங்கிக்கொள்ளுங்க.

(யாவரும் விபூதி பெற்றணிகிறார்கள்.)

நம்பிராஜன்:—நங்காய்! நீ விபூதிப்பிரசாதம் எடுத்துக்கொண்டு போய்க் குழந்தைக்கு இடுவாயாக. மந்திரியாரே! இனி நாம் எல்லாரும் போகலாமே. பிரான் மலைத்தலைவன் நமது வள்ளியை மணஞ்செய்துகொள்ள விருப்பமுள்ளவன்போல் எம்மிடம் குறிப்பாய்ப்பேசினான். அளவற்ற பரிசமும் கொடுப்பதாகக்குறிப்பித்தான். இவ்விஷயத்தைப்பிறகு பேசிக்கொள்ளலாமென்று கருதி

அவனுக்கு விடையொன்றும் நாம் கொடுக்கவில்லை. இதைக்குறித்து நாமிருவரும் ஏகாந்தமாய் நம் அரண்மனையில் யோசிப்போம். இப்பொழுது நீங்களும் நம்மோடு அரண்மனைக்கு வாருங்கள்.

மதியுகி:—சரி அப்படியே.

(நம்பிராஜன், நங்கைமோகினி, மதியுகி, வீரசேகரன், வசந்தன் போகிறார்கள்.)

ஏரப்பன்:—(நைவேத்தியமாகியவற்றைக்காட்டி) அடே பேயாண்டி! இவற்றையெல்லாந் தூக்கிக்கொள்.

சுப்பன்:—அண்ணே! அவனண்டை கொடுக்காதே. அவன் துண்ணூடுவான். அவன் நாக்கிலே முன்னேயே தண்ணீர் ஊறிச்சு என்று சொன்னேன்.

வேலன்:—அண்ணே! நான் தூக்கிவாரேன்.

ஏரம்பன்:—அடே சும்மா இரடா. அவன் ஒண்ணுஞ்செய்ய மாட்டான். தொட்டானெண்டால் அவன் கையை முறிச்சுடரேன். நீங்க சும்மா வாங்கடா. அரமனைக்குப் போய் உங்களுக்குச் சேரவேண்டிய பங்கைத்தருகிறேன். போவோம். வாங்கடா.

(யாவரும் போகிறார்கள்.)

# இரண்டாங்களம்.

இடம்: அரண்மனைப்புறத்திலோர்சோலை.

காலம்: இரவின்நான்காம்யாமம் (முற்பகுதி.)

பாத்திரம்: முத்துக்குமாரன்.

முத்துக்குமாரன்:—வள்ளிநாயகியை அழைத்துவருவதாக வாக்குக்கொடுத்துப்போன சக்கம்மாவும் சித்திராங்கியும் இன்னும் ஏன் வரவில்லை? அவர்கள் குறித்தகாலமும் நெருங்கிவிட்டதே. நெஞ்சே! நம்மேற் பிழையில்லை. அவர்கள் குறித்த இடத்தில் நாம் முன்னதாக வந்து சேர்ந்தோம். சக்கம்மா நமக்காகப்படும்பாடு இவ்வளவென்று அளவிடமுடியாது. அவள் சொன்னவண்ணஞ் செய்யும் வல்லமையுள்ளவள். சித்திராங்கியும் நம்பால் அன்புடையாள். ஒருவேளை வள்ளிதேவி பெற்றோர்களைவிட்டுத்தனியே வரக்கலங்கி யஞ்சுகின்றனளோ? அன்றியிவர்கள்மூவரும் நள்ளிருளில் வெளியேறுவதைக்கண்டு யாரேனும் அரசனிடங் கூறிவிட்டார்களோ? சற்றுந் தூக்கமின்றி வள்ளியுடன் விழித்திருக்கின்றனளோ? ஒருகால் காவலர் இவர்களைப்பிடித்து வள்ளிதேவியை அரசன் புதல்வியென ஒன்றுஞ்செய்யாது விடினும், ஏனையோரைத் துன்புறுத்திச் சித்திரவதை செய்கின்றனரோ? நமக்காக அப்பேதைப்பெண்கள் படும்பாடு இவ்வளவென்று சொல்லமுடியாது. இன்னுஞ்சிறிது நேரம் அவர்கள் வரத்தாமதிப்பின் நாம் பலாத்காரமாய் அரண்மனையுட்புகுந்து வள்ளிதேவியைச் சிறைப்பிடித்துக்கொண்டுபோகவேண்டும். அதோ யாரோ வருகிற அர

வங்கேட்கின்றது. ஒருவேளை அவர்களே வருகிறார்களோ?

(வள்ளி, சித்திராங்கி, சக்கம்மா வருகிறார்கள்.)

ஆ! கண்ணே! இதுகாறும் நீ வாராததால் உனக்குத்தாய் தந்தையைவிட்டு என்னுடன் வர மனமில்லையென்று எண்ணினேன். இந்தப்பேயுறங்கும் நள்ளிருளில் நீவந்தனையே! அனிச்சமலர்படினும் அழுங்கு நின் பாதம் அரும்பரல் பட ஆற்றாயோ?

ளி.—பிராணநாதா! என் மனமே தங்களிடத்திருக்கத் தாங்கள் என்னிடத்தில் மனமில்லையென்று நினைப்பதற்குச் சந்தேகமென்ன? காரிருளும் தாங்களிருப்பின் பட்டப்பகலன்றோ? அனற்பொறிபறக்கும் பாலையென்றாலும் தாங்கள் என்னுடனிருந்தால் அதுவே மந்தமாருதம் வீசும் வசந்தச்சோலை யெனக்கு. என்னையறிந்தும் பரிசோதிக்கலாமா?

மாதர்தாற் றலர்க்கு மந்த மாரனார்
தாதுதாற் றலர்க்குந் தீய தாயர்செய்
கோதுசேர் சிறைக்குங் கூன்பி றைக்குமே
நாதநீ செல்லா தெனக்கு நன்றரோ. (87)

பதியின்றி வேறே பாவையர்க்கெதோ
பாதமேகதி ப்ராணேச்வரா (பதி)

ரவியின்றிமா மரையோங்குமா
ரமணேசநினை விடங்யாயமா (பதி)

புயலேசெலாத பொடிநீடிய
புல்மேனுநீ யருகாயினைய
துயரேகுமே கருணாலய
துரைராஜனே யிதுவேவிதி (பதி)

சித்திராங்கி:—ஐயா! தலைவயரசே! இன்னுஞ்சிறிதுபொழுதிற்குள் வேடர்கள் விழித்து வள்ளியைக்காணாராய்த் தேடிவருவார்கள். தாங்கள் அதற்குள் வள்ளியைச்சாக்கிரதையாய் அழைத்துச்செல்லுங்கள். வள்ளி எங்களை விட்டுச் சிறிதும் பிரியாதவள். பலரினும் மெல்லியள். தங்களைநம்பித் தாய் தந்தை சுற்றத்தாரையுந்துறந்து வருமிவளை, யரசே! நின்னை யடைக்கலமாகக்கொடுத்தேன்.

தந்தைதாய் பாங்கி தலைவன்முதல் யாருமவட்
கெந்தைநீ யாதலினால் யாவிசைப்ப தென்னையோ? ()

தங்கள் மலைசென்று மணம் புரிந்து களிப்புடன் வாழ்வீர்களாக. வள்ளி! ஜாக்கிரதையாய்ப் போய்வா! என்னை மறவாதே.

வள்ளி:—சித்திராங்கி! என் உயிரினுஞ்சிறந்த தோழி! நீ மனம் வைக்காவிடில் நான் என் பதியை அடைவதெப்படி? உன்னை நான் மறப்பேனோ? நீ செய்த உபகாரத்திற்குக் கைம்மாறு முண்டோ?

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவா யுமுளவே
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தியில் லென்ற" (90)

தருமதேவதை முறையிடுகின்றதே—கண்ணினும் அருமையாய் வளர்த்த தாய் தாதையரையும் உடல் வேறு உயிரொன்றெனப் பழகிய உன்னையும் விட்டுப்பிரியும் கன்னெஞ்சியாகிய என்னைப்பற்றி நீ யாது எண்ணுகின்றனையோ? என் பிராணநாதனைவிட்டு அரைக்கணமும்

பிரிந்திருக்க மனமில்லாததாலும், பிறர் மணம் பேசுதலை யொழித்தற்காகவும், என் கற்பினைப் பாதுகாக்க வேண்டியதாலும் நான் பிரியத்துணிந்தேனே யொழிய! அடி சித்திரா! உன்னைவிட்டுப்பிரியக்காலெழவில்லையடி என் செய்வேன்.

சித்திராங்கி:—வள்ளி! வருந்தாதே அம்மா. உன்னைவிட்டுப் பிரிந்திருக்க என்னால் மாத்திரம் முடியுமோ? நீ உன் தலைவனை மணந்து மீண்டு இங்குவருங்காலமளவும் ஒரு தினமும் ஒரு யுகமாய்க்கழிப்பேன்.

சக்கம்மா:—நீங்கள் இவ்விதமாகப்பேசிக்கொண்டு காலதாமதம் செய்வீர்களானால் வேடர்கள் விழித்து உங்களைக் காணாமல் தேடிக்கொண்டு வருவாங்கோ அம்மே!

முத்துக்குமாரன்:—சக்கம்மா! எனக்காக நீ பட்ட பிரயாசைக்கு உனக்குத்தக்க கைம்மாறு செய்கிறேன். உன்னை எக்காலத்திலும் நான் மறவேன்.

சக்கம்மா:—ஐயே! தங்கள் கருணைக்கு நான் ஆளானதே எனக்குப் பெரும்பாக்கியம். தாங்கள் போய் வாருங்கோ. என்மேல் யாரும் சந்தேகப்படாதபடி இன்னும் சிலநாள் இங்கு இருந்து பிறகு தணிகைமலை வந்துசேருகிறேன் ஐயே!

முத்துக்குமாரன்:—என் கண்ணிற் சிறந்த காதற் கிளியே! வள்ளி! இதோ கூப்பிடுதூரத்திலுள்ள தேமாமரச்சோலையருகில் புரவிகள் பூட்டிய எனது இரதத்தை நிறுத்திவந்துள்ளேன். அங்குப்போய் அதன்மேலேறிய மாத்திரையில் பரிகள் வாயுவேகமாய்ப்பறந்து தணிகைமலை சாரும். சித்திராங்கி! சக்கம்மா! நாங்கள் போய்வருகிறோம்.

வள்ளி:—சித்திராங்கி! நான் போய்வருகிறேன். என்னுடைய கிளி, நாகணவாய், மான் இவைகளை ஜாக்கிரதையாய்ப்பார்த்துக்கொள்.

சித்திராங்கி:—நீங்களிருவரும் இன்றுபோல் என்றும் வாழ முருகனைச் சதா பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் போய்வாருங்கள்.

சக்கம்மா:—அதோ அரண்மனையில் ஆரவாரங்கேட்கிறதுங்கோ. இனிச்சிறிதுந்தாமதியாமற் போய்வாருங்கோ அம்மே—சித்திராங்கி அம்மே! நாம் சீக்கிரம் அரண்மனையந்தப்புரத்திற்கு அந்தப்புறமாய் ஒருவரும் அறியாமற் போய்ச்சேருவோம் வாருங்கோ அம்மே.

## மூன்றாங்களம்.

இடம்: அரண்மனை.

காலம்: இரவின்நான்காம்யாமம் (பிற்பகுதி)

பாத்திரங்கள்: நம்பிராஜன், நங்கைமோகினி, வீரதேவன், வசந்தன் மதியூகி, ஏரம்பன் முதலியோர்.

நம்பிராஜன்:—நங்காய்! குழந்தை வள்ளி இந்த இரவில் நம்மையறியாது அரண்மனையைவிட்டு யாண்டுப்போயிருப்பாள்?

நங்கைமோகினி:—ஐயா! என்னுடன் படுத்திருந்தவள் நெடுநேரம் தூக்கம் வாராமல் பேசிக்கொண்டேயிருந்தாள். பிறகு நானயர்ந்துவிட்டேன். சிறிது நேரத்திற்கெல்லாம் கனவுகண்டவள்போல் விழித்துப்பார்த்தேன். அருகிற்படுத்திருந்த கண்மணியைக்காணுமல் ஒருவேளை தூக்கமின்றி வெளிமாடியிலே உலாவப்போயிருப்பாளோ என்று நினைத்து அவளைக்கூவியழைத்தேன். ஏன் என்னவில்லை. பிறகு சித்திராங்கியும் சச்சம்மாவும் படுத்திருந்த அறைக்குச்சென்று பார்த்தபொழுது அவர்களையுங்காணேம். அதன்மேல் இந்த இருளில் அவர்கள் எங்குப்போயிருப்பாரென்று கவலைகொண்டு தங்களை யெழுப்பினேன்.

நம்பிராஜன்:—மதியூகியாரே! தங்களுக்கு என்ன தோன்று கிறது?

மதியூகி:—ஐயா! அரண்மனை முழுவதும் ஓரிடம் விடாமல் நன்றாய்த்தேடிப்பார்க்கச்சொன்னீர்களா?

வீரதேவன்:—ஐயா! மந்திரியாரே! நானும் வசந்தனும் ஒரி டந்தவறாமல் அரண்மனை முழுவதுந்தேடியது மன்றிச் சுற்றிடங்களிலும் நன்றாய்ப்பார்த்துவிட்டோம். அவர் கள் ஒருவரையுங்காணோம்.

சாம்பன்:—(தனக்குள்) சக்கம்மா எங்கே போயிருப்பா?

மதியூகி:—இருக்கட்டும். அதோ யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. ஒருசால் அவர்களாகவேயிருக்கலாம்.

(சித்திராங்கியும், சக்கம்மாவும் ஓடி வருகிறார்கள்.)

நங்கைமோகினி:—சித்திராங்கி! சக்கம்மா! குழந்தை வள்ளி எங்கேயடி யம்மா?

சக்கம்மா:—நாங்கள் எங்கள் படுக்கையறையில் படுத்துக் கொண்டிருந்தபொழுது எனக்குச்சரியான தூக்கம் பி டிக்கவில்லேயுங்கோ—அம்மே. அரை நாழிகைக்குமுன் குதிரைகள் கட்டியதேரின் ஓசை கேட்டதுங்கோ. அத னுடன் நம் அரண்மனைக்கதவுகள் திறந்த சத்தமும் என் காதில் விழுந்ததுங்கோ. அம்மே! இந்த அகால வேளையில் யார் விழித்திருக்கிறார்கள் என்று பார்க்க எண்ணி சித்திராங்கியம்மையையும் எழுப்பி அழைத்துக் கொண்டுபோனேனுங்கோ. அம்மே! என்ன ஆச்சரிய ம்!—யாரோ ஒரு போர்வீரன் ஒரு பெண்ணைத்தூக்கித் தன்தேர்மேல் வைத்துக்கொண்டு கிழக்குத்திசையாய்ப் போவதைப்பார்த்தோம். அந்தப்பெண் யாராயிருக்கு மோவென்று நினைத்து நாங்களும் சிறிதுதூரம் தொட

ர்ந்து ஓடிப்பார்த்தோம். தேர் வாயுவேகமாய்ப்போனதால் எங்களால் தொடரமுடியவில்லையுங்கோ அம்மே!- உடனே தங்களிடம் தெரியப்படுத்தலாமென்று திரும்பி வந்துவிட்டோம் அம்மே! இங்கே அரண்மனை வாயிலில் வள்ளியம்மையைக்காணோம் என்று காவற்காரர்கள் பேசிக்கொண்டது காதில் விழுந்ததுங்கோ அம்மே! உடனே மோசம் நடந்துவிட்டது என்று அதிவேகமாயிங்கே வந்தோம் அம்மே! இனிக்காலதாமதமில்லாமல் உடனே வேடர்களைக்கிழக்குப்பக்கந் தொடர்ந்தோடி அந்தத்திருடனைப்பிடித்துவரச்சொல்லுங்கோ அம்மே! அவனை லேசில் விடப்படாதுங்கோ அம்மே!

ஏரப்பன்:—நல்லவேளையாய் உன்னையும் தூக்கிப்போகாதே உட்டுட்டுப்பூட்டானே. என் அதிர்ஷ்டந்தான். மகாராசா! வேடர்க தயாராயிருக்காங்க. உத்தரவுகொடுங்க. நொடியிலே ஓடி அவனைப்பின்கட்டுமுறையாய்ப்பிடிச்சுவந்துடுவோங்க.

மதியூகி:—அவன் ஆளரவங்கேட்டதும் கிழக்குத்திசையாய் நமக்குப்போக்குக் காட்டியிருப்பான். நாம் நாலாபக்கமும் உடனே தேடவேண்டும். அவன் ஒருபொழுதும் கிழக்கு நோக்கியே போகமாட்டான்.

நங்கைமோகினி:—அநியாயமாய் என் குழந்தையை யாரோ கொண்டுபோய்விட்டார்களே. என்ன செய்வேன். என் வயிறெரிகிறதே. முருகா! உனக்குக்கண்ணில்லையா. நான் படுந்தன்பம் நீயறிந்திலையோ? சீதையை இராவணன் தூக்கிப்போனதுபோல் உன்னை யாரோ கொண்டுபோய்விட்டார்களே! நீ என்ன நினைத்து என்ன புலம்புகின்றாயோ? மாசற்ற வேடர்குலத்

தக்கு மறுக்கதே. பிரர்த்தூர்த்த ஆளானேனே. தெய்வமே! பெண்ணே! நீ என்ன துன்பப்படுகிறாயோ?

சிறையின் காப்பெலன் செய்யுமோ தேமலர்த் திருவை
நிறையின் காப்பின்றி நீசழுமோ கற்புடே ரிழையார்க்
கிறையின் காவலுங் காவலோ? என்செய்தாய் வல்லீ!
மறைவில் யார்செய்த வஞ்சமோ? வன்மமும் யாதோ?
வாடு நண்ணிலட படர்ந்தைநி னன்னைபான் மன்னி
நீடு மன்புநின் னெஞ்சமும் புரியுமே னிலவு
மோடு மாயமோ வுன்னையா ளேதலா மொழுங்கோ?
பாடி யான்படப் பரமனூர் படைத்தனன் மாதோ? (92)

கண்ணேயென் கட்கினிய காமவல் லிக்கொடியே!
பண்ணேர் மொழியாய்! பரமைமா னும்விழியாய்!
பெண்ணேநின் னன்னையான் பேதற் றலமருவான்
என்னை தகன்றனையோ? எண்ணியினி வாரலையோ? ()

புலிவாயிற் பட்ட புனமான்போ லேங்கிக்
குலைவாயோ? என்றுங் குறையா மதிமுகத்தோய்! (94)

யான்செய்த மாதவமோ யெய்ந்தோ ருருவெடுத்த
கான்செய் குழலாயென் கண்களிப்ப வாரலையோ? (95)

பாலூட்டிச் சீராட்டிப் பண்பிற் பரிந்துநினைத்
தாலாட்டி னேன்மகிழத் தையாலீ வாரலையோ? (96)

நம்பிராஜன்:—நங்காய் நீ புலம்பாதே! இதோ நானே போர்க்கோலம் பூண்டு நாலாபக்கமுந்தேடி நம்குழந்தையைக்கொண்டுவருகிறேன். கவலைப்படாதே. அடே வரம்பா! வேடர்களை நாய்களுடன் தயாராயிருக்கச்சொல். மந்திரியாரே! நீரும் நம்முடன் வாரும். வீரதேவா!

வசந்தா! நீங்களும் ஆயுதபாணிகளாய்க் கிளம்புங்கள். அத்திருடனைக் கைப்பிடியாய்ப் பிடித்துவந்து சித்திரவதை செய்வோம். இதோ வந்துவிட்டோம்.

நங்கைமோகினி:—ஐயா! நானுமுடன் வருகிறேன்.

சித்திராங்கி:—அம்மா! நாங்கள் தங்களைவிட்டுத் தனியே யிருக்கமாட்டோம். தங்களோடுகூடவருகிறோம்.

நம்பிராஜன்:—நங்காய்! நாமெல்லோரும் ஒரேபக்கமாய்ப் போகவேண்டாம். நீங்கள் சிலகாவலாளருடன் அரண்மனையைச்சூழ்ந்த ஆராமத்திலும், மதிற்புறச்சோலையிலும், எயிற்புறத்தின் கீழ்பாலுள்ள இலவந்திகையிலும் தேடி வாருங்கள். நாங்கள் மற்றொரு பக்கம் போகிறோம். யாவரும் போவோம் வாருங்கள்.

(யாவரும் போகிறார்கள்.)

---

# நான்காங்களம்.

இடம்: சோலை.

காலம்: வைகறை.

பாத்திரங்கள்: முத்துக்குமாரன், வள்ளி.

வள்ளி:—நாதா! என்னைத்தேடி அதோ வேடர்களும் நாய்களும் வருகின்றார்கள். மகாகொடியர்கள். யமனையும் அஞ்சாத தீரர்கள். என்னை நும்மினின்றும் பிரித்துக் கொண்டுபோவதும் தவிர நும்மையும் ஆவிகவர்வார்கள். பிறகு யான் உயிர்வாழேனென்பது திண்ணம்.

முத்துக்குமாரன்:—(நகைத்து) என் கண்மணியே! நீ சிறிதும் கலங்கவேண்டாம். உன்னை என்னினின்றும் பிரிக்க அவர்களால் முடியாது. என்கை வேலாயுதம் சாமானியமானதன்று. அதன் ஆற்றலுக்கு மூவுலகும் அஞ்சும். என் உடைவாளிற்கு உறைபோதாத இவ்வேடப் பூச்சிகளோ என்னையணுகும்? பெருநெருப்பைச் செல்லரிக்குமா? ஒன்றுங்கவலைப்படேல். சிறிது நேரத்திற்குள் நீ யாவுமறிவாய்.

வள்ளி:—அன்பா! என்னைப்போன்ற பாவியருமுலகிலுண்டோ? என்னைப்பலருங்கண்டு நகையாடப் பழிபூண்டதுமன்றி என் உயிர்த்தலைவனாகிய தங்களுக்கும் இத்தகைய பெரும் ஆபத்தினை உண்டாக்கினேனே! என்னாலன்றோ இத்தகைய கேடு விளைந்தது. அப்பொழுதே உடன்போக்கிற்கு உடன்படாமலிருந்தேனோ? கருணையற்ற கிராத காதகர்கள் என் செய்வரோ? பல்

லாயிரம் பேர்களுக்கிடையில் எவ்வளவு பராக்கிரமவீர ராயிருப்பினும் ஒருவரென்செய இயலும்? ஐய! என்னை யிங்குத்தனியே விட்டுத்தாங்கள் தப்பிப்போய்விடுங்கள்.

முத்துக்குமாரன்:—பெண்மணியே! நல்லயோஜனைசொல்லி னாய். இடருற்ற இடத்தில் எதிரிகள் வசம் நம்பிய ஏழைப்பெண்ணைக் கைவிட்டோடும் சூரனே சூரன்! அவனும் புருடனோ? அவனினும் அக்குத்தனித்துநின்ற பெண் சிறந்தாளே. என்னைக் கோழைகளுட்கோழை யென்று எண்ணினாயோ?

(பாடுகிறான்.)

இந்தவடி வேலினை யெடுத்தடி பிடித்தா
லந்தவிசை யாலகில லோகமு மழிந்து
சிந்துமெனின் வேடர்சிலர் சேவகமு மென்னோ
சிந்துவத னத்தவெழி லின்பநிறை வல்லீ! (97)

வானுயர் மலைக்குலமும் வாரிதியொ ரேழுந்
தானவரும் வானவருந் தாரணியு ளாரு
மீனினமு மூவரொனு மேலவரு மஞ்சும்
மானவடி வேல்கையினில் வாங்கிமிசை போங்கின். ()

வள்ளி:—அதோ! என் பிதாவும், சகோதரர்களும், மந்திரி மதியூகியும், வேடரும், நாயும் புடைசூழ அதிவேகமாய் நம்மை நோக்கி வருகிறார்கள். ஆ! தெய்வமே! முருகா! நீ தான் என்னைக் காக்கவேண்டும்.

(இரங்கிப்பாடுகிறாள்.)

கருகுவிட நின்ற களனார் புதல்வ
முருக முதல்வெமை முன்னின் றருளுவதியோ. (99)

முத்துக்குமாரன்:—சற்றேற்சிறந்த காதலி! அஞ்சேல்! அஞ்சேல்! எதிர்ப்பாரை இமைப்பொழுதில் யமபுரம் ஏற்றுகிறேன். அஞ்சேல்!

(நம்பிராஜன், தேவன், வசந்தன், மதிபூதி, சம்பன், வேடர்கள், ...ய்கள், வருகிறார்கள்.)

நம்பிராஜன்:—மந்திரி மதிபூதியாரே! அதோ கள்வனகப்பட்டான். அவனையுயிரோடு பிடித்துச் சேரிக்குக்கொண்டுபோய்த் தக்க தண்டனை செய்யவேண்டும்.

மதிபூதி:—அரசே! அவனைப்பார்த்தால் ஒன்றிற்கும் அஞ்சாத நெஞ்சுள்ள தீரன் என்பது தெரிகிறது. அவன் முகத்தில் அற்புத திவ்ய வொளி வீசுகிறது. அண்டங்கலங்கினும் அவனசையான். ஐய!—

நம்பிராஜன்:—ஒன்றிற்கும் அஞ்சாத யானோ இவ்விளைஞற்கு அஞ்சுவேன்? மந்திரியாரே! விலகிநில்லும்.—அடே நள்ளிரவிற் கன்னியைத்திருடிய கள்வ! இம்மலைக்கு இந்திராதிதேவரும் வரவஞ்சுவர். என் பெயர் கேட்டால் விண்ணவரும் வெருவுவார். அஞ்சாது புகுந்து அணங்கைக்கவர்ந்த அறிவிலி நீ யாவன்? மடந்தையை விடுத்திடு. இன்றேல் என் முனைவாள் உன் ஆவி பருகும்.

(வாளை யோச்சுகிறான்.)

வள்ளி—(குறுக்கிட்டு) பிதாவே! என்பால் உங்களுக்கு அன்புண்டாதாயின் என் காதலற்கு ஊறுசெய்யாமலிருக்க வேண்டுகிறேன், என் தலைவற்குத்தீங்கு விளையின் யான் எனது உயிர் விடுவேன். சற்றே பொறுத்துக் கருணை பாராட்டியருளவும்

நம்பிராஜன்:—அடே! மூடா! வேடர்குலத்தேன் உனக்கு எளிதிற்கிட்டுமா? ஏ! சோரா! சாரா!—நள்ளிருளில்

கங்கைகரையத் திருடின உன்னை காலையறுத்தாவது மாறுகால் மாறுகை வாங்கவேண்டும். நீ கள்ளி தாய் எங்கிருந்தோ போய்த்துப்போக எண்ணினையே. நீ யொன்று நினைத்தாய் முருகன் ஒன்று நினைத்தான். பான்மனை நீங்காப் பாம் மொழிப்பாவையை மயக்கிய படுபழிக்கஞ்சாப் பாதகக் கள்வ! உன்னை எளிதில் விடேன். வேடர்காள்! நாற் புறஞ்சூழ்மின். விடாதீர்கள். வீரதேவா! சைந்தா! அந்தப்பயலைக் கொல்லாமற்பிடியுங்கள்.

வீரதேவன்:—அடே! அரிக்குரியதை நரியோ தின்னும்? அதமனுகிய நீ எங்கே வள்ளி எங்கே. சீ! அவளைவிட்டு இப்புறம்வாடா. என்னடா ஆடெடுத்த கள்வனைப் போல் விழிக்கிறாய்?

வசந்தன்:—அடே! பொரியறை போகிய புல்லறிவாளா! விளக்கில் வீழும் விட்டிலைப்போலே இங்குவந்து வகைமோசமாய் அகப்பட்டுக்கொண்டனையே பேதாய்! சீ! நீயும் ஆண்மகனு! இப்புறம் வாடா!

வீரதேவன்:—

மட்டு வீழ்மல ரிட்ட வார்குழல்
மட்ட மோவுனக் கெட்டுமோ
விட்ட டாவினி யெட்டி யேகடா
விட்டி லாவழுன் முட்டுமோ? (100)

வசந்தன்:—

கிட்டி யேதலை வெட்டு வோமடா
செட்டி யோஅட மட்டியே
கொட்டு வோமதற் கட்டி யோவுனைக்
குட்டு வோமிரு முட்டியால். (101)

**வீரதேவன்:—**

துட்ட னேகரங் கட்டு வோமுனைச்
சுட்டு வாயினி லிட்டியாம்
இட்டு வோமட பெட்டை சேமய
தெட்ட லாமடைப் பட்டியே! (102)

**வசந்தன்:—**

சத்த னோமுனைச் சத்தி யாலுடல்
கொத்து வோமிது சத்தியம்
முத்தை யைத்திரு டெத்த னேயும்
மொத்து தற்கொரு வத்துவோ? (103)

**வீரதேவன்:—**

சத்தை கேள்மொழி முத்தை யைத்தொடச்
சத்தி யோஎந்த யுத்தியோ
சித்தி யோமடைப் புத்தி யோவெறுஞ்
செத்தை யேயடா சொத்தையே! (104)

**வேடர்கள்:—**(சூழ்ந்து ஆரவாரித்து)

அடியுங்கள் தடியாலே பிடியுங்கள் நொடியிலே
குத்துங்கள் மொத்துங்கள் கொட்டுங்கள் வெட்டுங்கள்
பற்றுங்கள் எற்றுங்கள் கட்டுங்கள் முட்டுங்கள்
மறியுங்கள் பறியுங்கள் தறியுங்கள் முறியுங்கள். (105)

(யாவரும் நெருங்குகிறார்கள்.)

**வள்ளி:—**ஆ! என்பிராண நாதா!—

**மூத்துக்குமாரன்:—**கண்மணியே! அஞ்சேல்! அஞ்சேல்! இதோ யாவருந்தொலைந்தனர் பார்.

(வேலையெடுத்துத்திரித்து வீராட்டகாசஞ்செய்கிறான் யாவரும் இறந்ததுபோல் மயங்கி விழுகிறார்கள்.)

வள்ளி:—(தன் காதலனைத்தழுவி) ஐய, அன்புடைய நாதா! இந்தக்கொடியபாதகர்களினின்றும் தப்பினேயே. உன்னிலும் சிறந்த வீரர் உலகில் உளரோ?

மூத்தகுமாரன்:—காதற்கனியே! அதோ பார் யாவருமழிந்தனர். இனி அவரால் உனக்கு எவ்விதத்தீங்கும் உண்டாகாது. சிறிதும் கவலைப்படாதே.

வள்ளி:—(அவர்கள் வீழ்ந்துகிடப்பதை நோக்கி)

ஆ! பேரன்புடைய பிதாவே! ஈதோ நின்கதி? யானோ உன்னையும் என் குலத்தையுமழிக்க வந்த யமனாக அமைந்தேன்? என்னினும் பாதகிகள் உண்டோ? யானே குலகாதகி, பிதிர்த்துரோகி, உடன்பிறந்தவரை உயிருண்ண வந்த கொடுங்கூற்று. அந்தோ! என்னை மகளாகப்பெற்றவுனக்கு யான் செய்த கைம்மாறு ஈதெனில் உலகில் மங்கையர் என்னை நகையாடியிகழாரோ? ஆ! தெய்வமே! உனக்கும் என்மேல் அருளில்லையோ? என் செய்வேன்? யானியற்றிய இத்தீவினைக்கு இரௌரவாதி நரகங்கள் பலவற்றினும் பலபலயுகங்கள் கிடந்து வருந்தினும் அதுவுமோர் கழுவாயாமோ?

வயவீரர் தமக்கொருவ னெனுந்தாதை மலைப்புயத்தும்
மார்பின் மீதும்
நயமேவ வெனைவளர்த்த நன்றிகொன்றேன் ஞாட்பினிடை
நமனே யானேன்
தயையேது மறியாத கழக்கியேன் பலர்தூற்றத்
தனியே நின்றேன்
அயனுரென் றலைப்பொறித்த விதியிதுவோ வாற்றேனு
லந்தோ வந்தோ! (106)

பாலூட்டிச் சீராட்டிப் பரிந்துவளர்ப் பவருயிரைப்
பருகும் பாந்தள்
போலிட்டி யான்வளர்த்த தந்தைமரு மம்போழப்
புரிந்தே னந்தோ
பேலிட்டும் வினையுமினி யாதோகாண் விருப்பமிதன்
மேலு முண்டோ
மாலாட்டங்கண்டவர்க்கு மதியுண்டோ நெறியறியும்
வகையு முண்டோ?(107)

புத்தனைருந் தாய்நண்டு வெஞ்சிலந்தி வாழையிப்பி
புனத்தின் மூங்கில்
கத்துமொரு விரியனிவை யுயிர்சோருந் தாங்கொண்ட
கருவி னாலே
இத்திறமே யெனைமகளாப் பெற்றவுனை யமனுலக
மேற்றி னேனால்
எத்திசையும் புகழ்விரிய இசைபடைத்துப் பாவியெனை
யீன்ற எந்தாய்! (108)

கந்து முறித்து நீழல்களியுங்
களிறே யனைய மைந்தர்புடை
வந்து மருவ வலிமிகுத்த
மடங்கலேறு போலமருந்
தந்தை யேநின் னெறுழ்தொலைந்து
தரணி மீது புரண்டனையே
அந்தோ வனல்வீழ் பதங்கமென
அவன் கைவேலா னழிந்தனையே! (109)

தாதை யோடு தமரழியத்
தாயுங் கொடிய கைம்மைபுக

எதி லாரும் பழிபரப்ப
வேழையே னின்னுயிர் பொறுத்து
நாதனோடு நணிகளித்து
நானு மெங்ஙன் வாழ்குவேனோ
பேதை யானிப் பிழையியற்றிப்
பின்ன ரிரங்கல் பீடுடைத்தோ? (110)

வேடர் குலத்தை வேரறுத்து
வீட்டும் நவிய மெனவிருந்தேன்
சூடும் பழியுங் கொடுந்துயருந்
தொலைக்குஞ் சூழ்ச்சித் துறையறியேன்
நாடு நகைக்க வாழ்வதினும்
நலமே யாவி சோர்ந் தொழிதல்
வாடி முதலை யழுதிரங்கும்
வகையே யானும் புலம்பலம்மா! (111)

நாரதர்:—(பாடிக்கொண்டே வருகிறார்.)

"போத நிர்க்குண போதா நமோநம
நாத நிஷ்கள நாதா நமோநம
பூர ணக்கலை சாரா நமோநம பஞ்சபாண
பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோநம
போக சொர்க்கபு பாலா நமோநம சங்கமேறும்

மாத மிழ்த்ரய சேயே நமோநம
வேத னத்ரய வேளே நமோநம
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோநம என்றுபாத
வாரி ஜத்தில்வி ழாதே மகோததி
யேழ்பி றப்பினின் மூழ்கா மனோபவ
மாயை யிற்சுழ லூடே விடாது கலங்கலாமோ

சீத நிர்த்தவெ தாளா டவீநட
நாத புத்திர பாங்க ரதீகிரு
பாச முத்திர ஜீமூத வாகனர் தந்திபாகா
கேக யப்பிர தாபா மூலாதிப
மாலி கைக்கும ரேசா விசாகக்ரு
பாலு வித்ரும காரா ஷடானன புண்டரீகா
வேத வித்தக வேதா விநோதகி
ராத லக்ஷ்மிகி ரீடா மகாசல
வீர விக்ரம பாரா வதானவ கண்டசூரா
வீர நிட்டுர வீராதி காரண
தீர நிர்ப்பய தீராபி ராமவி
நாய கப்ரிய வேலாயு தாசுரர் தம்பிரானே (112)

தேவ நின்கிருபை தேகி பாஹி மாம்
தீனபாந்தவா மகா தேவ
ஸர்வலோகமுந் தானெனவாகி
நின்ற வெனறன் மகா (தேவ)
தீயமும்மல மாயநின்றவர்
நேயநெஞ்சினி னீயிருந்திட
நாயினுங்கடை யேனருள்பெற
லேதோ வாதோ மகா (தேவ)

ஓகோ! ஈதென்ன யுத்தரங்கம்போலிருக்கிறது? அதோ யாரோ ஒருவனிதாரத்னம் கல்லுங்கவலையைப்புலம்புகிறாள் அவள் சமீபத்தில் யாரோ ஒருசுந்தரபுருஷன் நிற்கிறான் ஆகா! வல்லீதேவீ! ஸுப்ரமண்யமூர்த்தே! இதுவும் நின் திருவிளையாட்டோ? இந்த அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்துகிடக்கும் நிர்மூடராகிய வேடர்களை யதஞ்செய்தோ வல்லீ சமேதராகவேண்டும்? இதுவோ நின் கருணை! சிவகுமார! பிரமசொரூபியாகிய தே

வரீருக்கு இவ்வேடர்கள் எம்மாத்திரம்! ஒரு பொருட்டோ? சுவாமி! கார்த்திகேயமூர்த்தே! இந்த மாநுஷீக லீலாவைபவம் எதற்கோ? வல்லீதேவி! தாயே! இந்தக் கிழநாரதரோடு வாதாடினீர்களே. என்பேச்சுவிருதாவாகவில்லை. தங்கள் எதிரில் நிற்கும் திவ்ய சுந்தரபுருஷனை யாரென்று நினைத்தீர்? ஸுப்ரமண்யமூர்த்தியென்றறியீரோ? சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோபவானுக்கிரக பஞ்சகிருத்திய லீலாநாத மூர்த்தியாகிய பிரமமே உங்களை வலிதில் தேவியாகக்கொண்டபிறகு கேவலம் மநுஷ்ய வநிதைபோல் சித்தப்பிராந்தியடைந்து தியங்கலாமோ? வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கழலாமா? தாயே! நீரே அவரை வேண்டிக்கொள்ளுங்கள். சகல இஷ்டகாமிய போகார்த்தங்களும் சித்திக்கும்.

வள்ளி:—(முருகக்குமாரன் பாதத்திற் பணிந்து) என் இன்னுயிர் நாதா! பிராணேசா! என்னையிப்படி வருந்தவிடலாமா! உனக்குத்தர்மமா! உன்னை நம்பிய என்னைத்துன்பமாக்கடலி லமிழ்த்தலாமா? சுவாமி! கிருபைபுரியவேண்டும்.

முருகக்குமாரன்:—என் அன்பே! உன் அன்பிற்கும் அருளுக்கும் மெய்ச்சினேன்! கண்ணிற்சிறந்த காதலி! வல்லீ! நீ விழுந்து கிடக்கும் வேடர்களை உன் மலர்க்கரத்தாற்றட்டியெழுப்பு. உன் அமுதம்போன்ற கைகளின் ஸ்பரிசமே அவர்களுடைய உயிர்கொடுக்கும் சஞ்சீவியாம். உன்கை பட்டால் பட்ட மரமுந்தளிர்விட்டுத்தழைக்கும். கண்ணே! அவர்களைத்தட்டியெழுப்பு. யாவருந்தூங்கி விழிப்பதுபோல் எழுவார்கள்.

**வள்ளி**:—கருணை வள்ளால்! உன்றிருவிளையாட்டை யானே அறிவேன். நீ கூறியபடி செய்வேன்.

(யாவரையுந்தட்டியெழுப்ப அவர்கள் எழுந்து நிற்கிறார்கள். நங்கைமோகினி, சித்திராங்கி, சக்கம்மா வருகிறார்கள்.)

**நம்பிராஜன்**:—வேடர்களே! இவன் பெருமாயாவி! இவன் தன் வேற்படைகொண்டு மயக்கி நம்மை வீழ்த்தினான். அவனைச்சூழுங்கள். விடாதீர்கள். அக்கொடியனை என் வாளுக்கிரையாக்குகிறேன்.

**நாரதர்**:—ஏ! மூட வேடராஜ! இம்மகானை யாரெனநினைத்தாய்? உன் குலதெய்வமாகிய முருகக்கடவுள் என்று அறிந்திலைபோலும். ஏ! பேதாய் உன் குலதெய்வமே மாப்பிள்ளையாய்க்கிடைக்கிறபொழுது உனக்கு என்ன கசப்போ? அவர் காலில் விழுந்து வணங்கு.

**நங்கைமோகினி**:—நாதா! என் குழந்தை வள்ளியை முன்னமேயே முருகனுக்கு அர்ப்பணஞ் செய்திருக்கிறேன். தாங்கள் தடை செய்யவேண்டாம்.

(நம்பிராஜன் முதலிய யாவரும் முத்துக்குமாரன் பாதத்தில் விழுந்து வணங்குகிறார்கள்.)

**சக்கம்மா**:—ராணியம்மே! எல்லாம் என் குறிப்படி நடந்துவிட்டதுங்கோ பார்த்தீங்களா? ஆம்மே!

**வீரப்பன்**:—சக்கம்மா! உன் குறி ஒருநாளும் தவறாது. எனக்குத்தெரியும்—எனக்கு மாத்திரம் குறிசொல்லமாட்டேனென்கிறாயே—இருக்கட்டும்.

**நாரதர்**:—வல்லீதேவி! நானேவென்றேன். மணமேவேண்டாமென்ற விரதம் பூண்டிருந்த நீரே தோற்றீர் அம்மணீ!—இந்தக் கோலம் பார்க்கவல்லவோ யான் இப்பாடுபட்டேன்.

நம்பிராஜன்:—சுவாமி! வேலியே பயிரை மேய்வதுபோல் எங்களைப்பாதுகாக்கும் நீரே எங்கள் குலக்கொம்பைத் திருடியணையலாமோ? தங்களைத்தடுக்க வல்லவனாகிய யானோ வல்லேன். மந்திரி மதியூகியாரே! உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

மதியூகி:—இதைக்காட்டிலும் நாமடையும் பேறும் வேறுளதோ? சுவாமி! நம்முன்னோர் செய்த தவப்பயனே நமக்கு வள்ளியை மகளாகத்தந்ததுமன்றி முருகவேளை மருகனாகவும் அளித்தது. இதற்குமேல் ஒன்றுஞ்சொல்ல அறியேன்.

ஏரம்பன்:—(குதித் துக்குதித் துப்பாடுகிறான்.)

மங்களம்! மங்களம்! மங்களம்! வள்ளிக்கு.

(நாரதரை நோக்கி) ஐயா! சாமியாரே! அவக ரெண்டுபேரையும் கூட்டிவைச்சீரே. என்னையும் சக்கம்மாவையும் கூட்டிவைச்சுவிடுங்க. (அவர்காலில் விழுகிறான்.)

நாரதர்:—சரி! அப்படியே. உனக்கு நாம் வரந்தருவோம். இந்தச்சமயத்தில் யார் எந்த வரம் கேட்கினும் முருகன் அருள் செய்வான்.

ஏரம்பன்:—(களிப்புடன் சக்கம்மாவின் கையைப்பற்றிக்கொண்டு) நான் உன்னை விடேன். சாமியார் சொல்லிவிட்டார். இனி நீ மறுக்கப்படாது. பார்த்துக்கொள்.

நம்பிராஜன்:—(முத்துக்குமாரனை நோக்கி)

சுவாமி! தாங்கள் எனது சீறூர்க்கெழுந்தருளி எங்கள் குலாசாரப்படி மணமுடித்துச்செல்லவேண்டும்.

நாரதர்.—நம்பிராஜா! இன்னும் உன் அஜ்ஞானத்தை விடவில்லையே. கடவுளுக்கு நீயோ மணமாற்றுபவன்? இதுவே திருமணமென்று கருதவில்லையோ? இதோ பார்

உன் புதல்வி தன்னிரு கரங்களையும் மணமாலைபோல் சர்வலோக நாயகமூர்த்தியின் புஜத்தில் அணைத்துச்சாய்ந்து சோர்ந்து உன்னையும் தன்னையும் மறந்து நிற்பதைப்பார். இனி உன் பேதைமை நீங்குவாயாக. இதுவே மங்கள தினம். கண்ணுக்கடங்காத இக்காட்சியைக்கண்டு களித்துப் பேரானந்தமடைவாயாக.

நம்பிராஜன்:—(முத்துக்குமாரனை நோக்கி) சுவாமி! இன்று போல் என்றும் எம்பால் நீங்காத அன்பு பாராட்டிக் கிருபை செய்யவேண்டும். இதுவே என் பிரார்த்தனை.

முத்துக்குமாரன்:—அப்படியே செய்வோம். நீங்கள் யாவரும் தணிகாசலம் வந்து சேர்ந்து நாம் வல்லீ சமேதராய் அங்குக் காட்டுங் காட்சியைக் கண்டு களிப்பீராக. நாரதரே! நீர் சொல்லியபடி நாமும் வல்லீதேவியை மணஞ் செய்தோம். உமது எண்ணமும் எமது இஷ்டமும் பூர்த்தியாயிற்று. இனி நாம் வல்லீ சமேதராய்த் தணிகாசலம் போகிறோம். நீரும் சீக்கிரம் அங்கு வந்து சேரும்.

(முத்துக்குமாரன், வள்ளி போகிறார்கள்.)

நாரதர்.—அங்ஙனமே வருகிறேன் சுவாமி--ஓ! நம்பிராஜனே! உன்னிலும் பாக்கியவான் உலகிலில்லை. மகளைவிட்டுப் பிரிந்தோமென்று சிறிதுங்கவலற்க. அவள் நின்பால் என்றுமுளள். நீ இன்னுஞ்சிலகாலம் இம்மலையில் அரசு புரிந்து இறுதியில் சாமீபபதவியடைந்து முருகக்கடவுளின் கணங்களுக்கு நாதனாக அமர்வாய். உன்னால் உன்குல மீடேறிற்று. முருகக்கடவுள் இம்மலையில் எப்பொழுதுஞ் சாந்நித்தியமாயிருப்பார். அவர் சொரூபாம்சம் அதோ தோன்றும் அப்புதிய நறிய வேங்கைமரத்

தில் உள்ளது. தெய்வீகமாகத்தோன்றிய அத்தருவி ன் உயர்வினையறியாய். முன்னம் நின்மடந்தையைப் புனக்காவலில் வைத்திருந்தனையே.

"ஆங்கது காலை தன்னி னடிமுதன் மறைக ளாக
வோங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூல தாகப்
பாங்கமர் சவடு முற்றும் பல்கலை யாகத் தானோர்
வேங்கையி னுருவ மாகி வேற்படை வீர னின்றான்."

இவ்வுண்மையை நீ மனத்தினுட்கொண்டு தினமும் தவ றாமல் அவ்வேங்கையைப் பூசைசெய்து வருவாயாக. இதனை மகோபதேசமாகக்கொள்வாய். உனக்கு எக் காலத்தும் யாண்டும் குறைவுண்டாகாது. நீங்களினி யுங்கள் பதியடைந்து, பின்னர்ச்சீக்கிரத்தில் தணிகாச லம் வருவீராக. இன்று சுபதினமாகையால் நாமனைவ ரும் மங்கலவாழ்த்துக்கூறி யகல்வோமாக.

நாரதர்:—

தெரிவாருனை யெவரைய தேவ
நீனுரு நானோ வறியவல் லேனோ  தெரி
மயிலேறி நேய மனமூ லோலாவி
மனறதேட நின்ற மலரைநேரும் பாதா தெரி
சிவவாரி மீது திகழா ரமுதே
செந்தமிழ்க் குவந்து மனமகிழ்ந்தவா
தூவயோகி நேர மறைபேசு மீச
தனிகாசனே தம்மதியாலமா  தெரி

யாவரும்:—

"மறையோ லிடுந்தணிகை வள்ள லருளுருவம் வாழி வாழி
பிறையோர் நுதன்முகத்துப் பேரமைத்தோண் மாதரார்வாழி
வாழி
பேரமைத்தோண் மாதர்ப் பிணைந்தலவும் பேரருட்கண்
வாரமிலேன் மாட்டும் வழங்கு மவன்கருணை வாழி வாழி.

வாழி செங்க டம்பு சூடும் வள்ளல் வாழி வேள்புயம்
வாழு மைய மானழ யுண்கண் வல்லி வாழி யன்னவர்
சூழு மன்பு தோயு மாம ணர்ந்து லங்கி வாழிய
ஆழி சூழ்வ ளாகம் வாழி யன்பர் வாழி வாழியே. (117)

(முற்றிற்று)



## அநுபந்தம்.

## கீர்த்தனங்களின் இராகதாள அமைப்பு.

| பக்கம். | கீர்த்தனம். | இராகம். | தாளம். |
|---|---|---|---|
| 26 | தூமணியம்போற் | தன்யாசி | ரூபகம் |
| 35 | சரவணோத்பவ | அசாவேரி | ஆதி |
| 40 | இந்த மங்கை | பியாக் | ஆதி |
| 105 | பதியினையிங்கே | சாதசிந்தாமணி | ஆதி |
| 151 | பதியின்றிவேறே | கதனகுதூகலம் | ஆதி |
| 168 | தேவநின்கிருபை | காம்போதி | ரூபகம் |
| 173 | தேரிவாருனை | ஷண்முகப்பிரிய | ஆதி |

## துரககதிபந்தம்.

(பாயிரம் ௧)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | த | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | ரி | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | லை | கி | ய | [illegible] | [illegible] |
| கொ | [illegible] | [illegible] | லை | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| வா | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | வி | சொ | [illegible] |
| பி | ப | ய | க | சொ | மா | கா | தி |
| ந் | ணை | ற | ளி | தா | [illegible] | ன் | [illegible] |
| ன் | ளை | அ | ங் | ல் | ம் | தி | [illegible] |

| | பக்கம். |
|---|---|
| தாய்வாயடைந்து | 115 |
| தாரகை ... | 21 |
| தாவிமலர ... | 46 |
| திங்களிளம் ... | 128 |
| துட்டனே ... | 164 |
| தெரிவாருனே | 173 |
| தேரினெங் (பாயிரம்) | 6 |
| தேவரின் | 168 |
| தேனியல் | 174 |
| நான்சொலுங் ... | 130 |
| நின்னையென்றும் | 148 |
| நெடும்பெருஞ் | 145 |
| நெல்லளக் ... | 131 |
| நேயமுடன் ... | 42 |
| பண்டுவிளை ... | 39 |
| பண்ணிய ... | 92 |
| பண்ணுலாவு (பாயிரம்) | 5 |
| பதியின்றி ... | 151 |
| பதியினை ... | 106 |
| பந்தனைய ... | 25 |
| பந்தினை ... | 133 |
| பாலூட்டி ... | 158 |
| பாலூட்டி ... | 166 |
| பானலினல் ... | 49 |
| பிரமனும் ... | 146 |

| | பக்கம். |
|---|---|
| புத்தனருந் ... | 166 |
| புலிவாயிற் ... | 158 |
| பூணுமத் (பாயிரம்) | 5 |
| பூவைகாள் ... | 24 |
| போதகிர் ... | 167 |
| மட்டுவீழ் ... | 163 |
| மண்ணருங் ... | 46 |
| மருக்கிளரு ... | 38 |
| மலயப்புலி ... | 117 |
| மலைமிசை ... | 120 |
| மலையையங்கர ... | 116 |
| மறைமுடி ... | 21 |
| மறையோலிடும் ... | 173 |
| மறைவழி ... | 92 |
| மன்றல் (பாயிரம்) ... | 6 |
| மாதர்தாற்ற ... | 151 |
| மிதித்தது ... | 64 |
| முருகனே ... | 145 |
| மும்மதத் (முகவுரை) | 1 |
| முன்னமீசன் ... | 118 |
| மொழியொன்று ... | 54 |
| யாதுகொலம்ம ... | 108 |
| யான்செய்த ... | 158 |
| வண்டிலாம் ... | 95 |
| வண்டிவீழ ... | 120 |
| வயவீரர் ... | 165 |
| வாடுதண்ணி ... | 158 |

# செய்யுண் முதற்குறிப்பகராதி.


| | பக்கம். |
|---|---|
| அடியுங்கள் ... | 164 |
| அந்தகற்கு ... | 138 |
| அந்தண ... | 11 |
| அம்மனின ... | 131 |
| அம்மேயுன் ... | 132 |
| அருள்மொழி ... | 147 |
| அன்புநீடிய ... | 16 |
| அன்பெனு ... | 105 |
| அன்னையாகி ... | 32 |
| ஆங்கது ... | 173 |
| ஆன்முலை ... | 152 |
| இடும்பன் | 147 |
| இந்தமங்கை ... | 40 |
| இந்தவடி ... | 161 |
| இரவிமறைய ... | 81 |
| இன்றேருலகி ... | 115 |
| என்னவெண்டு ... | 63 |
| ஐயாமறை ... | 91 |
| ஒண்டொடி ... | 49 |
| ஒருகுலத்திற் ... | 32 |
| ஒள்ளியவாண் ... | 49 |
| கங்குலரு ... | 25 |
| கடலிற்பிறந்த ... | 116 |
| கண்ணுக் ... | 38 |
| கண்ணேயென் ... | 158 |
| கந்துமுமித்து ... | 166 |
| கமலமுறழ் ... | 68 |
| கருகுவிட ... | 161 |
| கருமைமன்னு ... | 116 |

| | பக்கம். |
|---|---|
| கனியொடு ... | 90 |
| காட்டிலெளி ... | 29 |
| காதலாய் ... | 26 |
| காந்தனென ... | 42 |
| காருறுக்குங் ... | 43 |
| காவகத்து ... | 39 |
| கானருமுல்லை ... | 39 |
| கானுலாவிய ... | 107 |
| கிட்டியே ... | 163 |
| குட்டிகுட்டி | 144 |
| குத்துவோ ... | 164 |
| குழகனெழி ... | 50 |
| கொண்டையழகை ... | 40 |
| சரவணோ ... | 35 |
| சிறையின் ... | 158 |
| சினவெங் ... | 106 |
| செங்கண் ... | 21 |
| செய்யமரை ... | 48 |
| செய்யாம (முகவுரை) | 3 |
| செல்லான் ... | 10 |
| சோரனைபோல் ... | 117 |
| சோறுசுமந்து ... | 39 |
| தத்தைநேர் ... | 164 |
| தந்தைதாய் ... | 152 |
| தமனியம் ... | 26 |
| தாதையோடு ... | 166 |

| | பக்கம் |
|---|---|
| வாரியீதே ... | 121 |
| வாழிசெங் ... | 174 |
| வானுயர் ... | 161 |
| விண்ணுலாவு ... | 51 |
| விண்மருவிய ... | 128 |
| வில்லடிச்சான் ... | 143 |
| வீறுமயி ... | 21 |
| வெம்மைகா ... | 119 |
| வேடர்குல | 167 |
| வேதப்பொரு ... | 42 |
| வேதாந்தஞானம் ... | 81 |
| வேணவாவி (பாயிரம்) | 6 |

# பிழை திருத்தம்.

[ மு: முதலிலிருந்து. ஈ: ஈற்றிலிருந்து.]

| பக்கம். | வரி. | | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| 5 | மு | 14 | தரை | துறை |
| 10 | ஈ | 1 | மயை | மையை |
| 22 | ,, | 4 | இந்த | இந்தச் |
| 24 | ,, | 5 | பாடுதல் | பாடுகிறார்கள் |
| 38 | மு | 2 | சாத்தி | சார்த்தி |
| ,, | ,, | 3 | அந்த | அந்தச் |
| 43 | ,, | 1 | தாங்காது | தாங்காது. |
| 50 | ஈ | 11 | ராவபோ | ராவரோ |
| 57 | மு | 4 | ஊசு | ஊச |
| 62 | ,, | 1 | இரண்டாங் | முதற் |
| 64 | ,, | ,, | டை | டை |
| ,, | ,, | 7 | சென்று | சென்றது. |
| 67 | ஈ | 11 | மனதி | மனத்தி |
| 68 | மு | 7 | யமவர | யமர |
| ,, | ,, | 12 | மெனக்ரு | மெனக்கு |
| ,, | ஈ | 2 | புடைவர் | புடையவர் |
| 74 | ,, | 6 | விதசி | விதச்சி |
| 75 | மு | 2 | கிழவய | கிழவர |
| 88 | ஈ | 2 | உன்னை | உன்னைத் |
| 90 | மு | 5 | வலவு | வுலவு |
| 92 | ,, | 5 | 51 | 50 |
| 106 | ,, | 8 | யீங்கோ | யீங்கேகா |
| 120 | ஈ | 1 | மொத்தெ | மொத்த |
| 132 | மு | 3 | முன் | முன |
| 133 | ,, | 2 | பெந்தி | பந்தி |
| 146 | ,, | 14 | வரவுயிர் | வுரவுயிர் |
| ,, | ,, | 19 | வாழ்க்கைக் கொரன்பங் | வாழ்கைக் கொரன்புக் |
| 147 | ,, | 2 | கொற் | சொற் |

உ

# தசரதன் தவறு.

## ஞானபோதினி 1901௵ ஜூலை௴

சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய பிரம ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. புனையும் நாமகள சிலம்பின் ஐந்தாம் பரலாகிய இந்நூல், இனிய செந்தமிழ் நடையிற் கடலூர்க் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ, ந. பலராமையரவர்களால் இடையிடையே விழுமிய பொருள் பயக்குஞ் செய்யுட்களுடைத்தாய் வசன ரூபமாய் எழுதப்பட்டுளது. இது நாடக விகற்பங்களுக்கு ஒன்றும் அங்கம் அல்லது சிறப்பங்கம் என்பதன் பாற்படும். அயோத்திமா நகர மன்னனும் இராமபிரான் தந்தையுமான தசரத சக்கிரவர்த்தி தனது இளமைப் பருவத்து வேட்டையாடச் சென்று நிற்குங்கால் தான் நின்ற புதர் மருங்கிலிருந்த தடத்து ஓர்பார்ப்பனச் சிறுவன் தன் தந்தையின் நீர் வேட்கை தீர்ப்பான் எடுத்துக்கொண்டிருந்த நீரின் ஓசையைக் கேட்டு யானை நீர் பருகுமொலியென மருண்டு வில்லெடுத்து அம்பொன்றைத் தொடுக்க, அந்தச் சிறுவன் மார்பிற் பாய்ந்தமையால் அவனழுகுரலைக் கேட்டு ஓடித் தான் செய்ததன் பயனைக்கண்ணுற்று வருந்தி அச்சிறுவன் வேண்டுகோளின்படி, நீரை யெடுத்து அவன்றந்தையிடஞ் சென்று கொடுத்து அவர் புத்திரன் தன் தவற்றாலிறந்தமையைக்கூற, புதல்வன் இறந்தமையால் வெகுளி மேலிட்டும், கருணை கூர்ந்து மன்னனும் மகன் பிரிவாற்றாமையாலிறத்தல் வேண்டுமெனச் சபித்தனரென ஐதிகமாய் நம்மவர்களுள் வழங்கி வரும் வரலாற்றினின்றும் புனையப்பட்டுளது. அவலச் சுவையுடைத்தாய் இச்சிறு நாடகத்தின் நான்காங் களத்தினைப் படிக்குமெவரும் கன்னெஞ்சராயினும் இரங்குவாராதலின், அஃது ஆசிரியரது கல்வித்திறத்தினை நன்கு விளக்குகின்றது. எத்திறத்தராயினும் விதிப்பயனை விலக்கலருமை யென்னும் ஆதிதெய்விகக் கொள்கையை வற்புறுத்திக்காட்டும் இச்சிறு நூல் தமிழ் அறிந்த வெல்லோரும் படிக்கத்தக்கது. மேன்மையான காகிதத்தில் நற்பெயர் பெற்ற தாம்ஸன் கம்பெனியாரால் வெகு சீர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்

கின்றது. யாவரும் எளிதில் வாங்கிப் படிக்சத்தக்கவாறு குறைந்த விலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றது.

(விலை காலிகோ பயிண்ட் 8 அணா. பேபர் 4 அணா. தபாற் கூலி வேறு.)

## தாமரை நாண்மலர்.

இஃது இனிமை வாய்ந்த செய்யுணூல்கள் சில கொண்டது. யாவர்க்கும் பயன்படத்தக்கது. கடலூர்க் கலாசாலை ந. பலராமையர் அவர்கள் இயற்றியது. நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டிருககிறது. விலை அணா 6 கலிகோ கட்டிடமுளதாயின் அணா 12 தபாற் கூலி வேறு சொற்ப காபிகளே கையிலிருக்கின்றன.

## தக்ஷிணாமூர்த்தி ஞானக் கும்மி.

காரைக்குடி சதாவதானம் ஸ்ரீ பாலஸுப்ரமண்ய ஐயர் இயற்றியது. அரிய பல வேதாந்தக்கருத்துக்கள் அடங்கியது. யாவரும் படித்து மகிழ்ந்து பாராட்டற்பாலது. இதன் விலை அணா ½.

புதிய பதிப்பு! புதிய பதிப்பு!!

## ஞான வாசிட்டம்.

இது ஓர் அருமையான வேதாந்த நூல். உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு கில்டிடன் பைண்டு செய்தது. கற்றறிந்த கல்விமான்கள் மிகவும் பாராட்டிப் படிக்கத்தக்கது. சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் அவர்கள் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பிழையறப் பரிசோதித்தது. காரைக்குடி பெரிக. மெய்யப்ப செட்டியாரவர்கள் பதிப்பித்தது. யாவரும் வாங்கி வாசித்தறியவேண்டு மென்பதற்காகவே விலை ஸரஸமாய் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் விலை ரூபாய். 2-0-0 தபாற் கூலி பிரத்தியோகம்.

இப்புத்தகம் காரைக்குடி பெரிக. நாகப்ப செட்டியாரவர்களிடத்திலும், சிதம்பரம் இளமையாக்கினார் கோவில் தேவஸ்தானம் ஏஜண்டிடத்திலும் மதராஸ் ரிப்பன் பிரஸிலும், மதுரைப் புதுமண்டபம் புத்தக வியாபாரம் மு கருப்பையா பிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]
டா[illegible] [illegible]தையர்
[illegible] [illegible]யம்,
[illegible]